வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
இடியுடன்
கூடிய மழை

# உதயன்

சுடர் 30 கதிர் 172 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 04, திங்கட்கிழமை 18.05.2015

# இன்று மாபெரும் நினைவேந்தல்

## முள்ளிவாய்க்காலில் பிரதான நிகழ்வு ஏனைய பல இடங்களிலும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, இன்று முற்பகல் 10 மணிக்கு முள்ளிவாய்க்காலில் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் திட்டமிட்ட ரீதியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரில் உயிரிழந்த மக்களை, அவர்களின் உடன் பிறப்புக்கள் - உறவுகள் நினைவு கூர்வதை யாராலும் தடுக்க முடியாது. அந்த வகையில், போரில் மாண்டு போன பல லட்சம் உயிர்களை நினைவுகூர்ந்து, முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபை ஏற்பாடு செய்துள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு முன்னரே திட்டமிட்ட ரீதியில் இடம்பெறும் என்று வடக்கு மாகாண சபையினர் அறிவித்துள்ளனர்.

அதேவளை, போரில் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்ட உறவுகளை மனதில் ஏந்தி இன்று மாலை 6 மணிக்கு வீடுகளில் சுடரேற்றி அகவணக்கம் செலுத்துமாறு 18 மே இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைவரும் வீடுகளில் மாலை 6 மணிக்கு சுரடேற்றி எம் உறவுகளை நினைவேந்துவதுடன் - வலி சுமந்து பகைமுடிப்போம் என்னும் உறுதியையும் எடுத்துக் கொள்வோம் என்றும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரின் போது, ஒடுங்கிய பக்.24

## நினைவேந்தலை தடுக்க முடியாது

### த.தே.கூ. தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

உறவுகளை இழந்தவர்கள் அவர்களை நினைவுகூர்ந்து நினைவேந்தல் - துக்க தினம் கடைப்பிடிப்பதற்கும் உரிமை - உரித்து உடையவர்கள். அந்த உரிமையை எவரும் மறுக்க முடியாது. அது நியாயபூர்வமாக - மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் பக்.24

## நினைவேந்துவதற்கு அனைவரும் வருக

### அழைக்கின்றது யாழ்.பல்கலை சமூகம்

யாழ்ப்பாணம், மே 18

போரில் கொல்லப்பட்டவர்களை நினைவேந்தும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் கோயிலில் இன்று முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று யாழ்.பல்கலைக் கழக ஆசிரிய சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்தார். பக்.24



படம்: மதி

ஆண்டுகள் ஆறு கழிந்தாலும் அந்த நினைவழியா நாள்களின் ரணங்கள்

## மெரினாவில் ஒன்றுகூடி சுடரேற்றி அஞ்சலி

சென்னை, மே 18

கொல்லப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதி கோரி, சென்னை மெரினா கடற்கரையில் நேற்று மாலை லட்சக்கணக்கான தமிழர்கள் ஒன்று கூடினர். அங்கு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு ஈகச்சுடரும் ஏற்றப்பட்டது. நீதி வேண்டிய கோஷமும் எழுப்பப்பட்டது.

மே 17 இயக்கம் மற்றும் தமிழக இளையோர் கட்சி பக்.24

## முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து பல்சமய வழிபாடு

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரை நினைவுகூரும் வகையில் பல்சமய வழிபாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று மாலை 4 மணிக்கு முள்ளிவாய்க்கால் புனித பவுல் தேவாலயத்தில் இந்த வழிபாடு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஏற்பாட்டாளர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த இறுதிக் கட்டப் பக்.24

## சாவடைந்த மக்களை நினைவுகூருதல் அவசியம்

*- பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்*

யாழ்ப்பாணம், மே 18

இறுதிப் போரில் கொன்று குவிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை நினைவுகூர்ந்து இன்று நடைபெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அனைத்துத் தமிழ் மக்களும் பங்கேற்று உயிரிழந்த தமிழ் மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக பிரார்த்திக்க வேண்டியது அவசியமானதாகும் பக்.24

## ஒளிவிளக்கேற்றி உறவுகளை நினைவேந்துவோம்

*வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் அழைப்பு*

யாழ்ப்பாணம், மே 18

எம்முடன் வாழ்ந்து காற்றோடு காற்றாய், கடலோடு கடலாய், தாய் மண்ணோடு மண்ணாய் கரைந்தும் சிதைந்தும் போய் இன்று எம் மத்தியில் இல்லாது போன எங்கள் உறவுகள். இவ் உறவுகளின் நினைவுகளை நேசித்து பூசித்து உள் உணர்வோடு தியானித்து. இன்று ஒர் ஒளி விளக்கினை ஏற்றி சுடர் செல்லும் வடிவில் பகைகளை சுட்டெரித்து பக்.24

## உடற்கூற்றுச் சோதனையின் பின் மீண்டும் கனகராயன்குள சிறுமியின் உடல் புதைப்பு

கிளிநொச்சி, மே 18

சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த வவுனியா கனகராயன்குளத்தைச் சேர்ந்த சிறுமியின் உடல் கொழும்பு சட்ட வைத்திய உடற்கூற்று பரிசோதனையின் பின் நேற்றுமுன்தினம் தோண்டப்பட்ட இடத்திலேயே மீண்டும் புதைக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி சுகவீனம் என்று தெரிவிக்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 16 வயதான வவுனியா கனகராயன் குளத்தை சேர்ந்த சிறுமி வைத்தியசாலையில் உயிரிழந்தார். சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமையே உயிரிழக்கக் காரணம் என உறவினர்களாலும், அந்தப் பகுதி மாதர் சங்கத்தாலும் சந்தேகம் பக்.24

## மாணவி படுகொலையைக் கண்டித்து நேற்று நல்லூரில் பெரும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 18

புங்குடுதீவில் கடந்த புதன் கிழமை பாடசாலை மாணவி ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று நல்லூர் ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. யாழ்.மாவட்ட இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் பெருமளவு இளைஞர், யுவதிகள் இணைந்து கொண்டிருந்தனர்.

'சட்டத்தரணிகளே உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடக்காதீர்கள்', 'பெண்கள் நாட்டின் கண்களல்லவா', 'கட்டிப்போட்ட காமுகர்களை தப்பிச் செல்ல விடாதே', 'அனுமதியோம் இன்னுமொரு பக்.24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கில் அதிகரிக்கும் வன்முறை குறித்து ஆராய வேண்டியுள்ளது

## முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே-18

வடக்கில் சடுதியாக அதிகரித்து வரும் வன்முறைகளின் பின்னால் ஏதோ காரணம் நிச்சயமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அது அரசியல் காரணமா? அல்லது வேறு சிலர் எமக்கு பாடம் புகட்ட முற்படும் காரணமா? என்பதை ஆராய வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புங்குடுதீவு பாடசாலை மாணவியின் படுகொலை தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே முதலமைச்சர் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் அண்மையில் நான் கலந்துரையாடினேன். குடாநாட்டில் அதிகரித்துச் செல்லும் குற்றங்களை கட்டுப்படுத்த, பொதுமக்களின் உதவியைப் பெற்று நடவடிக்கை எடுப்பதாக அவர் இதன் போது என்னிடம் தெரிவித்தார். ஆனால் நிலைமை கட்டுக்கடங்காமல் செல்கின்றதோ என்று எண்ண வேண்டியுள்ளது.

பொலிஸாரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளும் குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றது. கரிசனையில்லாத தன்மை, தாமதங்கள் என்பனவும் குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றது. போரின் பின்னர் சட்டத்தின் ஆதிக்கம் குறைந்து வருவதாகத் தெரிகின்றது. – என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப் பொருள் பாவனை திட்டமிட்டே மாணவர்கள் மத்தியில் பரப்பப்படுகின்றதா என்று எண்ண வேண்டியுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட அபலைப் பெண்களை வழிமாறிச் செல்ல திட்டமிட்ட வழிமுறைகள் பாவிக்கப்படுகின்றனவோ என்று எண்ண வேண்டியுள் ளது.

கடமையில் கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் இயங்கும் பொலிஸாரின் அவசியத்தை வலியுறுத்துகின்றேன். இவ்வாறான பொலிஸாரை உருவாக்க வேண்டுமானால், அவர்களுக்கு போதிய பயிற்சி வழங்கி மக்கள் நலம் பேணும் சக்தியாகவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் துறையினராகவும் அவர்களை மாற்றி எடுக்க வேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பொலிஸார் மக்களின் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மக்கள் போரின் போது அனுபவித்த உடல் ரீதியான, உள ரீதியான தாக்கங்களை உணர்ந்தவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். பொலிஸ் அதிகாரம் மாகாண சபைக்குக் கட்டுப்படுத்தப்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள். எனினும் மக்கள் நலம் நோக்கி எமக்குள் புரிந்துணர்வும், ஒற்றுமையும் இருந்தால்தான் சமுதாய சீரழிப்பாளர்களை நாம் வெற்றி கொள்ளலாம்.

பயத்தால் குற்றங்களில் ஈடுபடாதிருந்தவர்கள், பயம் அவர்களை விட்டதும் மிருக வெறியை காட்டி நிற்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. பெண்கள் உரிமைகள் என்பன இயற்கையாகவே பண்பாட்டுச் சூழல் காரணமாக எமது மக்களுக்குத் தெரிந்திருந்தன. ஆனால் அதனை இனி விழிப்புணர்வு மூலமாகவே கொண்டு வர வேண்டும்.– எனவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புங்குடுதீவு மாணவி தொடர்பில் சில காலங்களுக்கு மாத்திரம் பேசிவிட்டு பின்னர் அமைதியாக இருப்பதில் பயனில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் பல விடயங்களை ஆராய வேண்டியுள்ளது. அதற்கு அப்பால், அண்மையில் வன் செயல்கள் அதிகரித்திருப்பதற்கு அரசியல் காரணங்கள் உண்டா? எமக்கு யாராவது பாடங்கள் புகட்ட சிலர் எழுந்திருக்கின்றார்களா? அவை என்ன என்ற பல கேள்விகளும் ஆராயப்பட வேண்டிய வையாகவுள்ளன. வன்முறைகள் சடுதியாக அதிகரிக்க ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்பது எனது கணிப்பு.

பொலிஸாருக்கு மக்கள் போதிய உதவியை வழங்க வேண்டும். வன்செயலில் ஈடுபட்டுவர்களுக்கு பயந்து ஒதுங்கி இருக்கக்கூடாது.– என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர், உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார். (ந-5)

### அரசின் போர் வீரர் நினைவு நிக்ழ்வு நாளை

கொழும்பு, மே 18

இலங்கை அரசின் போர் வீரர்கள்ள நினைவு கூரும் நிகழ்வு, மாத்தறையில் நாளை பிரமாண்டமான இராணுவ அணிவகுப்புடன் இடம் பெறவுள்ளது. 7 ஆயிரத்து 500 இராணுவ வீரர்கள் இந்த பிரமாண்ட அணி வகுப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்து – தமிழ் மக்களை வெற்றி கொண்ட மே 18 ஆம் திகதியை மஹிந்த அரசு போர் வெற்றி நாளாகப் பிரகடனப்படுத்தி தெற்கில் பெரும் எடுப்பில் அதனைக் கொண்டாடி வந்தது. ஆனால் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு, அதனை போர் வீரர்களை நினைவு கூரும் நாளாக மாற்றியதுடன், அதனை மே 19 ஆம் திகதிக்கும் பின்நகர்த்தியது.

நாளை செவ்வாய்க் கிழமை மாத்தறையில் இடம்பெறும் போர் வீரர்களை நினைவு கூரும் நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் முதன் முறையாக ஓய்வு பெற்ற படையினரும் அணி வகுப்பு நிகழ்வில் பங்கெடுக்கவுள்ளனர்.

இந்த அணி வகுப்பில், 3 ஆயிரத்து 255 இராணுவத்தினர், ஆயிரத்து 615 கடற்படையினர், ஆயிரத்து 116 விமானப்படையினர், 959 பொலிஸார், 559 சிவில் பாதுகாப்புப் படையினர் என்று 7 ஆயிரத்து 504 பேர் பங்கெடுக்கவுள்ளனர். (ந-5)

**புங்குடுதீவு மாணவி கொலை**

### மேலும் ஐவர் நேற்றுக் கைது

தம்மிடம் ஒப்படைக்குமாறு மக்கள் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், மே 18

புங்குடுதீவில் பாடசாலை மாணவியை வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் கூடியளவு தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி புங்குடுதீவு மக்கள் நேற்று இரவு ஆக்ரோஷத்துடன் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொது மக்களிடமிருந்து தப்பிக்க முடியாததால் பொலிஸார் கடற்படையினரின் உதவியுடன் கடல்வழியாக படகில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கும் அவர்களை வைத்திருப்பது சாத்தியப்படாததால் அவர்கள் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னர் கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலிருந்து ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்து பின்னர் மேலும் 4 பேரைக் கைது செய்தனர். அவர்களைக் கைது செய்ய இரவாகிவிட்டது. கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் ஜீப்பில் அழைத்துச் சென்றபோது அதனை அங்குள்ள மக்கள் கண்டுள்ளனர். அதையடுத்து இந்த விடயம் காட்டுத்தீயாய்ப் பரவியது. அவர்களைப் பொலிஸார் தரைவழிப் பாதையூடாகவே அழைத்துச் சென்றனர். அதனால் ஊர்மக்கள் பொலிஸார் எந்தெந்தப் பாதைகள் ஊடாக ஊர்காவற்றுறைக்குச் செல்ல முடியுமோ அத்தனை பாதைகளிலும் ஒன்று திரண்டு போக்குவரத்தைத் தடுத்துக் காத்திருந்தனர்.

புங்குடுதீவில் இருந்து பொலிஸாரின் ஜீப்பை மக்கள் பஸ்களில் துரத்திச் சென்றனர். அதனால் அங்குள்ள ஊரவர்கள் மேலும் சில பஸ்களை பிடித்து பொலிஸ் ஜீப்பைத் துரத்தத் தொடங்கிவிட்டனர். வேறு வழியில்லாததனால் பொலிஸார் தமது ஜீப்பைக் குறிகாட்டுவான் இறங்கு துறை நோக்கித் திருப்பினர். அதனையும் மக்கள் விடாது துரத்திச் சென்றனர். பொலிஸ் ஜீப்பை மக்கள் நெருங்கிவிட்டதால் ஆபத்து அதிகரித்து விட்டதனை உணர்ந்த பொலிஸார் ஜீப்பை விட்டு இறங்கி 5 சந்தேக நபர்களையும் இழுத்துக் கொண்டு குறிகாட்டுவான் இறங்கு துறைக்குச் சென்று கடற்படையினரின் உதவியுடன் படகில் ஊர்காவற்றுறைக்குச் சென்றுவிட்டனர்.

பொலிஸார் புங்குடுதீவிலிருந்து புறப்பட்டு விட்டனர் என்ற தகவல் பரவியதனால் வேலணையில் மக்கள் ஒன்றுகூடி போக்குவரத்தைத் தடை செய்திருந்தனர் என்று கூறப்படுகின்றது.

தற்போது கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மாணவியின் தூரத்து உறவினர் என்று கூறப்படுகின்றது. மாணவி சடலமாக மீட்கப்பட்ட அன்றுமாணவியின் வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறியதுடன் மறுநாள் காலை வரையிலும் சந்தியாவின் வீட்டிலேயே தங்கி இருந்துள்ளார் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

மற்றையவர்களில் குமார் என்றழைக்கப்படும் ஒருவர் உள்ளார் என்றும் அவர் சுவிற்சர்லாந்திலிருந்து வந்து செல்பவர். அவரது சகோதரனான சசியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. 5 பேரும் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் தம்பிராசா என்பவரும் உள்ளார். அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந-4)

### இ.போ.ச. பஸ் - ஓட்டோ விபத்தில் ஒருவர் சாவு

மூவருக்குப் படுகாயம்; நேற்றுக்காலை கோப்பாய்ச் சந்தியில் சம்பவம்



வலி.வடக்கு, மே18

கோப்பாய் சந்தியில் நேற்று இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் ஓட்டோவும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். ஓட்டோ சாரதி உட்பட மூவர் படுகாயங்களுடன் மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காலை 8.15 மணியளவில் நடந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த அன்ரனி நிக்ஸன் யூட் (வயது–42) என்ப வரே உயிரிழந்தார். இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் அண்மையில் வெளிநாடொன்றில் இருந்து வந்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து பயணித்த ஓட்டோ கோப்பாய் சந்தியில் உரும்பிராய் நோக்கி திரும்பிய வேளையில் எதிரே யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த பருத்தித்துறைசாலைக்குச் சொந்தமான பஸ் மோதியது. அதில் ஓட்டோ தூக்கி வீசப்பட்டது. பிரதான வீதியுடன் இருந்த 5 அடி வெள்ள வாய்க்காலுக்கு மேலாக வீசப்பட்டு ஓட்டோ வீதியோரம் போய் விழுந்திருந்தது. ஓட்டோவின் பின்புற ஆசனத்தில் பயணித்த யூட் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பணித்தார். குறித்த பஸ்ஸின் சாரதியைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ந-86,17)

### கூட்டமைப்பினர் பங்கேற்க மாட்டார்கள்

யாழ்ப்பா,ணம் மே 18

இலங்கை அரசு மாத்தறையில் ஏற்பாடு செய்துள்ள போர் வீரர்களை நினைவு கூரும் நிகழ்விலும், இராணுவ அணி வகுப்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்காது. கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினர்களும் அந்த நிகழ்வில் பங்கெடுக்க மாட்டார்கள் என்று, அந்தக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

இலங்கையின் புதிய அரசினால், போர் வெற்றி விழா போர் வீரர்கள் நினைவு தினம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இம்முறை முதன் முறையாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. மாத்தறையில் இடம் பெறும் இந்த நிகழ்வில், இராணுவத்தினரின் பிரமாண்ட அணி வகுப்பும் இடம்பெறுகின்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்குமா என்பது தொடர்பில், அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்ட போது, நான் இந்த நிகழ்வில் பங்கெடுக்க மாட்டேன். எமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் போவார்கள் என்று நான் நினைக்கவில்லை என்று குறிப்பிட்டார். (ந-5)

### வட்டுக்கோட்டை யுவதி கொலை தொடர்பில் இரு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மே 18

வட்டுக்கோட்டையில் அண்மையில் யுவதி ஒருவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை தெற்கு, அளவெட்டி தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்த கொலைக்குப் பயன்படுத்திய கத்தி, கைத் தொலைபேசி என்பனவற்றையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைத்தொலைபேசியை இரண்டாக உடைத்து சங்கானை மற்றும் மல்லாகம் ஆகிய இடங்களில் வீசியதாக அவர்கள் கூறியுள்ளனர். விசாரணையின் மூலமாக அந்த உடைந்த கைத்தொலைபேசியின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ந-4)

# மறிச்சிக்கட்டி கிராம மக்கள் கவனவீர்ப்பு



மன்னார், மே 18

தமது மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துமாறு கோரி மன்னார், மறிச்சிக்கட்டி கிராம மக்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசப்பற்றுள்ள முஸ்லிம் முன்னணி எனும் அமைப்பினரின் தலைமையில் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மன்னார் வில்பத்து வனப் பகுதியை அழித்து அங்கு முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேற்றங்கள் செய்யப்பட்டு வருவதாக பொதுபல சேனா, சிங்கள ராவய மற்றும் ஒரு சில ஊடகங்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளும் பொருட்டு தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் குழு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முசலிப் பிரதேச கிராமங்களுக்கு சென்றிருந்தன.

இதன்போதே மறிச்சிக்கட்டி கிராம மக்கள் தமது கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மறிச்சிக்கட்டி எமது பூர்வீக பூமி, வில்பத்து மிருகங்களின் வசிப்பிடம். ஆனால் மறிச்சிக்கட்டி எமது வசிப்பிடம், வில்பத்து பிரச்சினையின்பின்னணியில்முஸ்லிம்விரோத அமெரிக்க மிஷனரிகளுடன் தமிழ் டயஸ்போரா, வில்பத்துவை காக்கும் போர்வையில் மறிச்சிக்கட்டி முஸ்லிம்களை துரத்திய சதியை முறியடிப்போம், வாழ்விட பூமி கேட்டுப்போராடிய முஸ்லிம் சமூகத்துக்கு அமைச்சர் ரிஷாத் உதவி செய்தது தவறா?' இது போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (வ)

## முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத்தால் நாளை கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவில் அதிகரித்துள்ள சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நீரியல் வளத்துறைத் திணைக்களம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமையை கண்டித்தும் நாளை கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் சமாசத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கு முன்பாகஇந்த கவனவீர்ப்புப்போராட்டம் நடத்தப்ப டவுள்ளது.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் சங்கங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றகலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழில் சமாசத் தலைவர் அந்தோனிப் பிள்ளை மரியதாஸ் தெரிவித்தார்.

சட்டவிரோத மீன்பிடியால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நீரியல் வளத்துறையினரிடம் அதிகாரங்கள் இருந்தும் அவர்கள் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. இதனால், முல்லைத்தீவில் கடலட்டை பிடிப்பு, வெளிச்சம் பாய்ச்சி பிடித்தல், குழை போட்டு கணவாய் பிடித்தல் ஆகிய செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அத்துடன், வெளி மாவட்ட மீனவர்களின் அத்து மீறல்களும் முல்லைத்தீவு நாயாறு கடற்பகுதியில் அதிகரித்துள்ளது. இதனையும் கட்டுப்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (வ)

## அதிகாரிகளுடன் வாக்குவாதம் மீனவர்கள் நால்வருக்கு மறியல்

முல்லைத்தீவு,மே18

நந்திக் கடலில் தடை செய்யப் பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கைது செய்ய மேற்கொள்ளப் பட்ட ரோந்து நடவடிக்கையின்போதுகடற்றொழில் திணைக்கள முல்லைத்தீவு மாவட்ட அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 4 மீனவர்கள் நேற்று முன்தினம் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்கள் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் முகம்மது சம்சுதீன் முன்னிலையில் எடுக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த 4 மீனவர்கள் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அவர்களுக்கு பிணை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இருப்பினும் அவர்களுக்கான பிணை வழங்க பொலிஸார் மன்றில் மறுப்பு தெரிவித்திருந் தனர். நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடற்றொழில் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக அதிகாரிகள் மற்றும் மீனவ சங்க பிரதி நிதிகள் உள்ளிட்டோர் சட்ட விரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் நந்திக் கடலில் விசேட ரோந்து நடவடிக்கையில் கடந்த புதன் கிழமை ஈடு பட்டிருந்தனர். இதன்போதே குறித்த நால்வரும் கடலில் அவர்கள் சென்ற படகை மறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிவித்த அதிகாரிகள் பின்னர் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்திருந்தனர்.

இவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்த வேளை மீனவர்கள் நால்வரையும் விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

## வியாபாரிகள் இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 18

கடலாமைகளை இறைச்சிக்காக விற்பனைக்கு வைத்திருந்த இரண்டு வியாபாரிகளை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்து, கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா அபராதமாக நீதிமன்றினால் விதிக்கப்பட்டது.

உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் கடந்த 11 ஆம் திகதி அரியாலை சந்தைப் பகுதியில் ஆமைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (வ-103)



## அபராதம்

தென்மராட்சி, மே 18

காப்புறுதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய லொறிச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

போக்குவரத்துப் பொலிஸாரிடம் அகப்பட்ட லொறிச் சாரதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். இதே வேளை, மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். (வ-9)



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் மன்னார் பாப்பாமோட்டை பகுதியில் அமைக்கப்பட்டு வந்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு, மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது. உலக வங்கி ஒதுக்கீடு செய்த 47 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (வ)

## பேயாடி கூழாங்குளம் பொதுக்காணி மீளக் கையளிக்கப்படுதல் வேண்டும்

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, மே 18

கிராமத்தின் பொதுத்தேவைக்கு பயன்படுத்தும் வகையில் வவுனியா, பேயாடி கூழாங்குளம் பொதுக் காணி, மக்களுக்கு மீள கையளிக்கப்படல் வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பேயாடிகூழாங்குளம் கிராமத்திலுள்ள பொதுக்காணியானது தங்களால் குறிப்பிட்டவொரு பொது அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் எனக்கு முறையிட்டுள்ளனர்.

பழைமையான இந்த கிராமத்தில் ஏற்கெனவே இராணுவத்தினரின் தேவைக்கு பெருமளவிலான காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தற்போது மீள்குடியேறி வரும் மக்களுக்கான பொதுக்கட்டடங்களை அமைப்பதற்கு காணப்படும் மேற்படி காணியானது குறிப்பிட்ட ஒரு அமைப்புக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் அருகிலுள்ள கிராமங்களிலேயே கல்வி கற்று வருகின்றனர். இந்த கிராமத்திலிருந்த பாடசாலை கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அயற் கிராமத்தில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் அவர்களுக்கான பாலர் பாடசாலையோ, பொது நோக்கு மண்டபமோ அமைப்பதற்கு பொதுக் காணி அவசியமாகும்.

இது தொடர்பாக இரண்டு தரப்பினரையும் அழைத்து நான் பேச்சு நடத்தினேன். இரு பகுதியினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுதல் அவசியமாகும். குறிப்பிட்ட பொது அமைப்பின் சேவையின் தேவையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேறொரு இடத்தில் காணி வழங்க ஆவனசெய்யுமாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## மணல் ஏற்றியோர் - பொலிஸாருக்கு இடையே மோதல்

வடமராட்சி வல்லிபுரக் கோயிலுக்கு அருகில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

களவாக மணல் ஏற்றுவதாக கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார் ஹன்ரர் ஒன்றை அவதானித்திருக்கின் றனர். இதனை அடுத்து குறித்த ஹன்ரரை தமது ஜீப்பில் கலைத்துச் சென்றபோதே பொலிஸாருக்கும் மண் அகழ்வுக் குழுவுக்கும் துன்னாலைப் பகுதியில் மோதல் சம்பவம் இடம் பெற்றதாக அறியப்படுகின்றது.

கலைத்துச் சென்ற பொலிஸ் வாகனம் மீது கற்கள் எறியப்பட்டதாகவும் பொலிஸ் வாகனம் அந்தப் பகுதிக்குள் நுழைய முடியாது வீதிகளில் கற் களை குறுக்காகப் போட்டு தடை ஏற்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய பொலிஸார் முற்பட்ட போதே அவர்கள் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், எல்லாத் தடையையும் மீறி ஹன்ரரை பொலிஸார் நெருங்கியபோது குழுவினர் குறித்த ஹன்ரரை கைவிட்டு விட்டுதப்பிச் சென்ற தாகவும்ஹன்ரர் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டதாகவும்பொலிஸார் தெரிவித்தனர். இதேபோன்று கடந்தசில வாரங் களுக்குமுன் சட்ட விரோதமண் அகழ்வுக் குழு வுக்கும் பொலிஸாருக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந் திருந்தார். அங்கு இடம்பெற்ற மோதலில் மண் அகழ்வு செயற்பாடுகளை முறியடிக்கும் விசேட பொலிஸ் குழுவைச் சேர்ந்த சார்ஜன்ட் தரங்கேவ மற்றும் கொன்ஸ்டபிள் அசேல ஆகியோர் காயமடைந் திருந் தனர். இந்தச் சம்பவம் தொடர்பிலான குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (வ-109)

## செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும் போதைப்பொருள் விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், மே 18
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவுக் கிளைகளினூடாக போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளதாக யாழ். பிரிவுத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.
யாழ் பிரிவின் 15 கிளைகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்ட வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் நாவலர்கலாசாரமண்டபத்தில்நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது தலைமை உரையாற்றிய கு.பாலகிருஷ்ணன் மேலும் தெரிவிக்கையில்:
'எமதுபிரதேசத்தில்போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் சமூகச் சீரழிவுகள், வன்புணர்வு, கொலைச் சம்பவங்கள் எனப் பல தரப்பட்ட குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாக செய்திகள் கூறுகின்றன. கடந்த 4 நாள்களுக்கு முன்னர் புங்குடுதீவில் பாடசாலை மாணவி ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். நாட்டை அழிப்பதற்கு ஏதுவாக போதைப்பொருள்களை இளம் சமுதாயத்துக்கு அறிமுகப் படுத்துகின்றனர். சீனாவில் இவ்வாறுதான் நடந்தது. சமூகச் சீர்கேடுகளுக்கு ஆதாரமாகக் காணப்படும் போதைப் பொருள்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளைத் தோற்றுவிக்க வேண்டும். பிள்ளைகளைப் பாதுகாக்க வேண் டியது பெற்றோர்களின் பொறுப்பு. சமூக நோக்குடன் திட்டமிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து உறுப் பினர்களும் ஒன்றுபட்டு இதனை நடைமுறைப் படுத்து வோம் –என்றார். (வ–7)

## ஆலயத்தில் நகை, பணத்தைச் சூறையாடி தப்பித்த 'தந்திர' திருடர்

முல்லைத்தீவு, மே 18
ஆலயத்தில் நகைகள், பணம் என்பவற்றை சூறையாடிய திருடர்கள் பொலிஸாரின் மோப்ப நாயிடம் கூட அகப்படாதவாறு புத்திசாலித்தனமாகத் தப்பித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி முரசுமோட்டையில் இடம்பெற்றுள் ளது.
முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை மாலை பூசைகள் முடிந்தவுடன் கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டன. மீண்டும் கடந்த வியாழக்கிழமை காலை ஆலயத்தைத் திறந்தபோது ஆலயத்தின் கருவறையில் உள்ள அம்மனுடைய பொட்டு,தாலிகள், பணம், போன்றன களவாடப்பட்டதுடன் ஆலயத்தின் அனைத்து பகுதிகளும் திருடர்களால் தீவிரமாக தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.



குறித்த திருடர்கள் ஆலயக் கதவையோ, ஆலய ஓட்டையோ உடைத்து ஆலயத்துக்குள் நுழையவில்லை. புத்திசாலித்தனமாகவடக்குவாசல் பக்கம் உள்ள கதவைத் திறந்தே உள்ளே நுழைந்துள்ளார்கள். இவ்வாறு நுழைந்த திருடர்களே 30ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான அம்மனுடைய பொட்டுதாலிகள் ஐந்தையும், பணமாக சுமார் 25ஆயிரம் ரூபாவையும் சுருட்டிக் கொண்டு வித்தியாசமான முறையில் தப்பிச்சென்றுள்ளனர்.
தப்பிசென்ற திருடர்கள் கோயிலுக்கு அருகாக ஓடும் ஆற்றில் இறங்கி கால்களை நனைத்து ஆற்று வழியாகத் தப்பித்து சென்றுள்ளனர். இதனால் விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார் பல மணி நேரம் முயன்றும் திருடர்களைப் பிடிக்க முடிய வில்லை. பின்னர் மோப்பநாயின் உதவியை நாடிய போது நாய் திருடர்கள் சென்ற இடம் தெரியாமல் திக்குமுக்காடியது. இதனால் களைப்படைந்த பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (வ–21)

# தேர்தலுக்கு முன் ஒரு தொகுதி அரசியல் கைதிகள் விடுவிப்பு

### சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 18
எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக ஒரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்ப டுவார்கள் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மேற்கொள்ளப்பட் டுள்ள நடவடிக்கை என்ன என்று கேட்ட போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
273 தமிழ் அரசியல் கைதிகள் இருப்பதாக அரசு தெரிவித் துள்ளது. அவர்களில் 54 பேருக்கு நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 60 பேருக்கு எதிராக எந்த வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை. 159 பேருக்கு எதிராக வழக்கு இடம் பெற்று வருகின்றது.
இதில் 54 பேரையும் விடுவிப்ப தற்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.



மேலும் வழக்குத் தாக்கல் செய்யப்படாத 60 பேரையும், புனர்வாழ்வுக்கு அனுப்பி விடுவிக் கலாம் என்று தெரிவிக்கின்றனர். அதற்கு நாம் எதிர்ப்புத் தெரி வித்துள்ளோம். அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவது சட்டத்துக்கு முரணானது. ஆனாலும், இந்த விடயத்தில் இவ்வாறு இழுபறி தொடருமாக இருந்தால் 60 பேரின் விடுதலை தள்ளிப் போகக் கூடும்.
அதனால் அவர்களை புனர்வாழ்வுக்காவது அனுப்பி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பின்னர் அதனை சட்டரீதியாக கேள் விக்கு உட்படுத்துவோம். வழக்கு நடந்து கொண்டிருக்கும் 159 பேரில், பொது மக்களை குறிவைத்துத் தாக்கியவர் களை விடுதலை செய்வதற்கு அரசு இணங்கவில்லை.
இதற்கு கடந்த 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்த காலப் பகுதியில் கையாண்ட வழிமுறைகளைப் பின்பற்று வதற்கு ஆராயப்பட்டு வருகின்றது.
எது எப்படியிருப்பினும், எதிர்வ ரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். எஞ்சியவர்கள் தொடர்ந்து விடுதலை செய்யப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார். (வ–5)

## மக்களின் கோரிக்கையை அடுத்து வலி.தென்மேற்கில் அபிவிருத்தி

சண்டிலிப்பாய், மே 18
உறுப்பினர்களினதும் மக்களினதும் கோரிக்கையை அடுத்து வலி. தென்மேற்கு பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள பிரதேச சபை, வங்கி யில் நிலையான வைப்பில் வைக்கப்பட்டிருந்த 90 லட்சம் ரூபாவை மீளெடுத்து வீதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.
பிரதேச சபையின் நிதிக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டதை அடுத்து இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட் டுள்ளது.
கடந்த வருடம் அரசினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 90 லட்சம் ரூபா, வட்டியைக் கருத்தில் கொண்டு வங்கியில் நிலையான வைப்பில் வைக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில் பிரதேசத்தி லுள்ள பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பது குறித்து பிரதேச சபை உறுப்பினர்களும், பொது மக்களும் தெரிவித்ததுடன் இது குறித்து முதலமைச்சரின் கவனத்துக்கும் தெரியப்படுத்தி இருந் தனர்.
அதை அடுத்து பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முன் வந்துள்ள பிரதேச சபை– சேதம டைந்த நிலையிலுள்ள பல வீதிகளைப் புனரமைப்பதற்காக வங்கியில் நிலையாக வைக்கப்பட்டிருந்த 90 லட்சம் ரூபாவை மீளப்பெற்று அபிவிருத்திக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.
இந்தப் பணத்தை மீளப் பெறுவது குறித்து நிதிக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது குழுவும் அனுமதி வழங்கியதை அடுத்து, இந்தப் பணம் மீளப் பெறப்பட்டு வீதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.
இதற்கான தீர்மானம் பிரதேச சபை யின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட் டுள்ளது. (வ–115)

# பிரதேச செயலரை இடமாற்றவேண்டாம் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 18
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரை இடம்மாற்ற வேண்டாம் என்று கோரி ஒட்டு சுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடைய கையொப்பத்துடனான கண்டன அறிக்கை ஒன்றுபிரதேசமக்களால்கடந்தவியாழக்கிழமை வெளிடப் பட்டுள்ளது.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேசச் செயலாளராகப் பொறுப்பேற்று தற்போது பதில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வரும் இ.குருபரன். நீண்ட காலமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று வந்த ஊழல், வீட்டுத்திட்டப் பிரச்சினைகள், மணல் அகழ்வு என பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன் போரால் பெரும் துன்பப்பட்ட மக்களின் வாழ்வுக்கு உகந்த வகையில் மிகவும் நேர்மையான முறையில் கடமையாற்றி வருகின்றார். இவ்வாறு நேர்மையான முறையில் கடமையாற்றி வருகின்ற வேளையில் ஏற்கனவே ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் ஊழல், மணல் அகழ்வுடன் தொடர்பு பட்டு தண்டனைக்கு உட்பட்ட குறிப்பிட்ட சில நபர்கள் தற் போது பதில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றும் இ.குருபரன் தமக்கு பெரும் இடையூறாக இருப்பதால், கடந்த 13 ஆம் திகதி மக்களுக்கு வீட்டுத்திட்டத் துக்கு மேல திகமாக 2 லட்சம் ஒட்டுசுட்டான், சிவன்கோயில் வளாகத் தில் மாகாண சபை உறுப்பினர் சிவமோகனால் வழங்கப்பட வுள்ளதாக பொய்யான தகவலைக் கூறி மக்களை வரவழைத்துபதில்பிரதேசசெயலாளருக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட் டத்தை நடத்துவதற்குமுயற்சிசெய்துள்ளனர்.
நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டம் பதில் பிரதேச செயலாளருக்கு எதிரானது என்று அறிந்தவுடன் மக்கள் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாது பிரதேச செயலகத்துக்குச் சென்றனர். சிலர் வீடு திரும்பினர்.
இந்த ஆர்ப்பாட்டத்தைஏற்பாடுசெய்த சிறு கும்பல் ஒட்டுசுட்டானில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடாது, முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்துக்கு சென்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் மனு ஒன்றை அளித்துள்ளனர். அர சியல் தலையீடு காரணமாக எதிர்வரும் தினங்களில் எமது பிரதேசத்தில் சிறப்பாகக் கடமையாற்றி வந்த பதில் பிரதேச செயலாளர் இ.குருபரன் இடமாற்றப் படலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. எனவே நேர்மையான முறையில் சேவையாற்றி வந்த குருபரனின் சேவை எமது பிரதேசத்துக்கு தொடர்ந்து இருக்க வேண்டும் என்று ஒட்டுசுட்டான் பிரதேச வாழ் மக்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. இடமாற்றம் செய்யப்பட இருப்பின் இடமாற்றத்தை ரத்து செய்வதுடன், ஊழல் பேர் வழிகளின் செயற்பாட்டுக்கு இடம் அளிக்காது தொடர்ந்து அவருடைய சேவை அந்தப் பிரதேசத்தில் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவ னம் எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் எதிர்பார்ப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப் பட்டுள் ளது. (வ– 21)

# நெடுந்தீவு கூ.சங்கத்துக்கு விரைவில் பயணிகள் படகு

நெடுந்தீவு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்துக்கென பயணிகள் படகு ஒன்றை வழங்குவதாக வடக்கு மாகாண விவசாய கூட்டுற வுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளதாக மேற்படி சங்கத்தின் புதிய தலைவராக வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்ட க.கேதீஸ்வரநாதன் தெரிவித்தார்.
குறித்த சங்கத்தின் முன்னாள் தலைவர் அ.வெ.அரியநாயகத் துடன் சங்கப் பணியாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய புதிய தலைவர் க.கேதீஸ்வரநாதன் நெடுந்தீவின் முக்கிய தேவையான கடல்போக்குவரத்தைச் சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் அமைச்சர் பொ.ஐங்கரநேசனைச் சந்தித்து இதை ஒரு கோரிக்கையாக முன்வைத்ததற்கு அமைய அவர் புதிய பயணிகள் படகு ஒன்றை வழங் குவதாகத் தெரிவித்தார். மக்களின் அத்தியா வசியத் தேவைகளைநிறைவேற்ற வேண்டிய கடப்பாடு எமது பல.நோ. கூ.சங்கத்துக்கு உள்ளதால் தேவைகள் குறித்து ஆராய்ந்து அவற் றைச் செயற்படுத்த சங்கப் பணி யாளர் களது பூரண ஒத்துழைப்பும் கிடைக் கும் என்ற நம்பிக்கையுடன்தலைமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளேன். ஒவ்வொரு பணியாளரும் எங்களது தீவின் உயர்வுக்காக உழைக்கிறோம் என்ற பெருமிதத்துடன் எனக்கு ஒத்துழைப்பு நல்குவீர்கள் என்று எதிர்பார்த்துள்ளேன் என்றும் தெரிவித்தார். (வ–7)

# நல்லாட்சி என்று கூறப்பட்டாலும் நல்ல விடயங்கள் நடக்கவில்லை

## சுட்டிக்காட்டுகின்றார் பொன்.செல்வராசா எம்.பி.

மட்டக்களப்பு, மே 18

தற்போது இலங்கையில் நல்லாட்சி ஏற்பட்டுள்ளதென்று கூறப்படுகின்ற போதிலும், நல்ல விடயங்கள் நடைபெறாத நிலையிலுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பண்டாரியாவெளி கிராமத்தில் விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆராயப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு இடர்கள் காரணமாக படுவான்கரை பிரதேச விவசாயிகள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். குறிப்



பாக வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டனர்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் ஒரு சிலருக்கு மட்டுமே நிவாரணங்கள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணங்கள் வழங்க நூறு மில்லியன் ரூபா தேவைப்பட்டது. இது தொடர்பில் கடந்த அரசு காலத்தில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அவை கவனத்தில் கொள்ளப்பட வில்லை. புதிய அரசு பொறுப்பேற்ற பின்னரும் இது தொடர்பில் நாங்கள் கோரிக்கை விடுத்தோம்.

தற்போதும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. நாங்கள் இன்று நல்லாட்சி என்று கூறுகின்றோம். ஆனால் எந்த நல்லவையும் நடப்பதாகத் தெரியவில்லை. இது தொடர்பில் நாங்கள் பின்நிற்கப் போவதில்லை. இந்தப் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லாமற் போய்விட்டது. ஆனால் நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்வோம்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாங்கள் இணைந்த ஒரு நல்லாட்சியை உருவாக்கவேண்டும். நாங்கள் முற்றுமுழுதாக அபிவிருத்தியை வெறுக்கவில்லை. எங்களுக்கு அபிவிருத்தி மிகவும் முக்கியமானது. ஆனால் அபிவிருத்தியை காட்டி ஏனையவற்றையும் ஒதுக்கமுடியாது.– என்றார்.

பண்டாரியாவெளி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (ற)

# தேர்தலின் பின்பே நிலையான ஆட்சி

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

அம்பாறை, மே 18

ஒரு தேர்தலின் பின்னரே நிலையான ஆட்சியைக் காண முடியும், தற்போதுள்ளது ஒரு தற்காலிக ஆட்சியாகும். இருக்கின்ற பிரதமருக்குப் பெரும்பான்மை இல்லை. அது மட்டுமல்லாது நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதைக் கூட சொல்ல முடியாத நிலையிலேயே இன்று நாடாளுமன்றம் சென்று கொண்டிருக்கின்றது.– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்று கையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாங்கள் உருவாக்கியுள்ள மைத்திரியுகம் என்பது இந்த நாட்டில் ஒரு போதுமில்லாத ஓர் அரசியல் கலாசாரமாகக் காணப்படுகின்றது. முன்னாள் ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற அடிப்படையில் தேசிய அரசியல் அடையாளமாக மதிக்கப்படாத ஒருவர் இன்று இந்த நாட்டிலே மிகப்பெரிய யுகமாற்றமொன்றுக்கு வழிகோலியிருக்கின்றார்.

19ஆவது திருத்தச் சட்டவரைவின் தனக்கான அதிகாரங்களையும் ஆட்சிக்காலத்தைக் குறைத்தது மட்டுமல்லாது அதிகாரப் பரவலாக்கங்களையும் கொண்டு வந்து ஒரு பெரிய தியாகத்தை செய்ய முன் வந்துள்ளார். இவ்வாறான ஜனாதிபதி பாராட்டப்பட வேண்டியவர்.

இவ்வாறான செயற் பாடுகளையும், நல்லெண்ணங் களையும் கொண்ட ஒரு ஜனாதி பதியின் ஆட்சியில் நீதி, நியாயம், நேர்மை போன்றன நடக்கும் என எதிர்பார்க்க முடியும்.

இதேவேளை, எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றிய பல்வேறுபட்ட விமர்சனங்கள் கூறப்பட்டாலும் அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மிகவும் கனவானாகத் திகழ்கின்றார்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி தாராளமாக வாக்குறுதிகளை வழங்குவார் எதனையும் நிறைவேற்ற மாட்டார். 20ஆவது தேர்தல் சீர்திருத்த சட்ட வரைவைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு பக்கபலமாகவிருந்த சிறுபான்மைக்கட்சிகளுக்கு தேர்தல் சீர்திருத்தத்தில் அநியாயம் நடந்துவிடக் கூடாது என்பதில் ஜனா திபதியும், பிரதமரும் உறுதியாக உள்ளனர் – என்றார். (ற)

# கல்வியின் முன்னேற்றமே ஏறாவூரை வெளிக்காட்டியது

## ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

ஏறாவூர், மே 18

ஏறாவூரின் கல்வி முன்னேற்றமே ஏறாவூர் பற்றி வெளியுலகுக்கு பறைசாற்றுவதற்கு அமைந்துள்ளது என்று ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் ஏ.சி.எம். ஷயீட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்தி வலயத்திலுள்ள ஏறாவூர் கோட்ட மட்டப் பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் கல்விப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏறாவூர் அலிகார் தேசிய கல் லூரியில் நடைபெற்றது. மட்டக்களப்பு மத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.சேகு அலி, பிரதி கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் கல்விக் கோட்டம் மிகக் குறைந்த பாடசாலைகளையும் மிகக் குறைந்த மாணவர்களையும் கொண்டுள்ளன. அதனால், இந்த கல்விக் கோட்டத்தை கல்வி அடைவு மட்டத்திலே மேலும் வினைத்திறன் மிக்க கோட்டமாக மாற்ற வேண்டும் என்பதில் ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மிகவும் கரிசனையாக உள்ளது.

ஏறாவூர் கல்விக் கோட்ட மட்டத்தில் பாடசாலைக் கல்வி அடைவு மட்டத்தை உயர்ந்த தரத்துக் கொண்டு வருவது பற்றி கலந்துரையாட வேண்டும் என்று நாம் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டுக்கொண்டதற்கமைய அவரின் பங்குபற்றுதலுடன் நாம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தோம். கடந்த காலத்திலும் ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் கல்விக்குழு ஏறாவூரின் கல்வியின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருந்தது.

தான்தோன்றித்தனமான நிர்வாக செயற்பாடுகள் அந்தப் பாடசாலையின் கல்வி அடைவு மட்டங்களில் பின்னடைவை ஏற்படுத்தும். பாடசாலை பற்றிய விமர்சனங்களை இலகுவில் தட்டிக்கழித்து விட முடியாது. அதற்கு ஆக்கபூர்வமான பதிலளிக்க வேண்டியது பாடசாலை நிர்வாகத்தின் கடமையாகும்.– என்றார்.

# பொதுத் தேர்தலில் வென்று மீண்டும் பிரதமராவார் ரணில்

## ஹஸன் அலி தெரிவிப்பு

அம்பாறை, மே 18

நாட்டில் இனவாதத்தை பரப்பி மீண்டும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த பல்வேறு சக்திகள் முனைந்து வருகின்ற நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டு அதிகப் பெரும்பான்மையைப் பெற்று மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க வருவதை எந்தச் சக்திகளினாலும் தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி பிரதம அமைப்பா



ளர் எம்.ஏ. ஹஸன் அலி தெரிவித்தார். பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கட்சி ஆதரவாளர்கள் மற்றும் மத்திய குழு உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம், அமைப்பாளர் எம்.ஏ. ஹஸன் அலியின் சம்மாந்துறை கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இனவாதத்தையும் அடிப்படை வாதத்தையும் மக்கள் மத்தியில் தூண்டி விட்டு, அவர்களை ஏமாற்றி மீண்டும் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அணியினரும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். ஊழல்மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவுமே இன்று மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வரமுயற்சிக்கின்றார்கள். இவர்களின் முயற்சிகள் ஒரு போதும் பலிக்கப்போவ தில்லை.

மஹிந்தவின் ஆட்சியில் மக்களின் பணத்தை வீணடித்து ஊழல்மோசடிகளில் ஈடுபட்டவர்களே, தற்போது ஆட்சியை பறிக்கப்போவதாகக் கூறுகின்றார்கள். இவர்கள் ஆட்சியினை மக்கள் நிராகரித்து விட்டார்கள். கடந்த ஆட்சியில் மக்கள் பொருளாதார ரீதியாகவும் ஜனநாயக அடக்கு முறைகளிலும் நெருக்கடியை சந்தித்தனர். அதில் இருந்து மக்கள் விடுபடவும் ஜனநாயகத்தை மீட்டெடுக்கவுமே மக்கள் வாக்களித்தார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கூட்டணி மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கையுள்ளது.

20 வருடங்களின் பின்னர் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் மீது மக்கள் சக்தி அதிகரித்துக் காணப்படுகின்றது. அதற்கு சான்று அண்மையில் நடைபெற்ற மே தினக் கூட்டமாகும். 1977ஆம் அண்டுக்குப் பின்னர் இவ்வருடம் நடைபெற்ற மேதினக் கூட்டங்களில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் பதவிக்கு மஹிந்த ராஜபக்ஷ உட்பட எத்தனை பேர் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று, ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக வருவதை எந்தச் சக்திகளினாலும் தடுக்க முடியாது.

வெகுவிரைவில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெறச்செய்து நாட்டை சுபீட்சமான எதிர்காலத்துக்கு இட்டுச்செல்ல அனைத்து இன மக்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கவேண்டும்.– என்றார்.(ற)

# நாமலுடைய நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 18

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும் கூட்டங்களில் நாமல் ராஜபக்ஷ பங்கேற்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சில சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு முயற்சித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்தவின் புதல்வர் என்ற போதிலும் நாமல் ராஜபக்ஷ இந்த கூட்டங்களில் பங்கேற்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை பின்பற்றி வருவதாகவும், ஏனைய சிலர் கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நல்லவர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்படும். முடிந்தவரை அடுத்தவருக்கு உதவி செய்யும் முன் நண்பர்களுடன் கலந்தாலோசிக்கவும். நீங்கள் திட்டமிட்டுச் செய்த காரியங்கள் இனிமேல் மெல்ல நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். நினைத்தபடி பணிகளைச் செய்ய முடியாத நிலை உருவாகும். பதவி உயர்வு, சம்பள உயர்வுகிடைக்கும்.பிறஇடங்களுக்கு மாற்றலும்கிடைக்கும்.

**மிதுனம்:** உங்களது கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு முயற்சிகள் எடுத்தபின் நல்ல வேலை கிடைக்கும். அடுத்தவரிடம் பேசும் போதும் கருத்து தெரிவிக்கும் போதும் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருப்பது நல்லது.

**கடகம்:** மனதடுமாற்றம் உண்டாகலாம். செலவு கூடும். பிறமொழி பேசுபவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். நீங்கள் பறிகொடுத்த பொருள்கள் மீண்டும் திரும்ப உங்களிடமே வந்து சேரும்.

**சிங்கம்:** நீங்கள் இழந்த பதவி, நற்பெயர் மீண்டும் கிடைக்கும். எந்த முடிவையும் அவசரப்படாமல் நிதானமாக எடுக்க வேண்டும். சில வேண்டாத பிரச்சினைகள் உங்களைத் தேடி வரலாம்.

**கன்னி:** நீங்கள் இதுவரை பட்ட கஷ்டங்கள் விலகி நன்மையே நடக்கும். வீண் கவலைகளை விடுத்து உங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யுங்கள். நீங்கள் முயற்சி எடுத்து செய்யும் அனைத்து காரியங்களும் வெற்றி பெறும்.

**துலாம்:** மனக்கவலை நீங்கும். வாக்கு வன்மையால் எல்லாமே சாதகமாக நடக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். சில நேரங்களில் மற்றவர்கள் பேசுவதை தவறாக புரிந்து கொள்ள நேரிடும். மனோதைரியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். பிரச்சினைகள் இருந்தாலும் அமைதிக்கு குறைவு இருக்காது.

**தனுசு:** சிலர் வேலை நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டி வரலாம். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். போட்டிகள் குறையும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

**மகரம்:** உங்களுடைய வேலைகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். சரியான மனிதர்களை இனம் கண்டு கொள்வீர்கள். தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** உங்களிடம் வேலை செய்பவர்களிடம் கூடுதல் அன்பு செலுத்தவும். அரசு ரீதியிலான பிரச்சினைகள் வரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள்.

**மீனம்:** மேலதிகாரிகள் கூறிய படி காரியங்களை செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். உங்களுடன் வேலை செய்பவர்களிடம் அனுசரணையாக செல்லவும். வீணான பிரச்சினைகளும் மனக்குழப்பங்களும் வேண்டாம்.

# கண்டி கிரஷிலிருந்து விடுதலை




பேஸ்புக் பயனாளிகளுக்கு அடிக்கடி வந்து சேரும் கண்டிகிரஷ் விளையாட்டுக்கான அழைப்புகள் அலுப்பையும் எரிச்சலையும் அளிக்கலாம்.

இவற்றில் இருந்து விடுபட வேண்டுமா? பேஸ்புக் செட்டிங் பகுதிக்குச் சென்று, அதில் உள்ள புளொக்கிங் வசதியில் இருந்து, புளொக் ஒப் இன்வைட்டை கிளிக் செய்து அழைப்பு அனுப்பும் நண்பரின் பெயரைக் குறிப்பிட்டால், அதன் பிறகு அழைப்புகள் தொல்லை இல்லாமல் இருக்கலாம்.

இதே முறையில் குறிப்பிட்ட எந்த ஒரு செயலிலும் அழைப்பையும் தடுத்து நிறுத்தலாம்.

# புறம்போக்கு என்னும் பொதுவுடைமைக்கு வரவேற்பு

புறம்போக்கு எனும் பொதுவுடைமை திரைப் படம் அனைத்துத் தரப்பினரிடையேயும் நல்ல விமர்சனங்களையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

ஒரு தூக்குத் தண்டனைக் கைதி, அவரைத் தூக்கில் தொங்கவிடும் கடமையை ஏற்றுக் கொண்ட காவல் அதிகாரி, தூக்குப்போடுகிற வேலையைச் செய்கிற ஊழியர் ஆகிய மூவருக்கிடையிலான நிகழ்வுகளை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது.


இந்த அரசியல் படம் மக்களுக்கான படம் என்ற பெருமையைப் பெற்றுள்ளதாக பாராட்டுகள் குவிந்துள்ளன. குறிப்பாக நக்ஸலைட்டுகள் எனும் மாவோயிஸ்ட்டுக்கள் பற்றி தமிழில் அழுத்தமான படம் ஒன்று வந்ததே இல்லை.

முன்பு ரஜினிகாந்த் நடித்த இராணுவ வீரன்தான் அப்படி வந்த படம். ஆனால் அது வணிக ரீதியான ஒருதலைப்பட்சமான பார்வையாகவே அமைந்துவிட்டது. வெறும் சினிமாவுக்கான கதையாக இல்லாமல், படத்தின் காட்சிகளில் இன்றைய அரசியல் அவலங்களைச் சொன்னது, குரலற்றவர்களுக்கான குரலாய் சில காட்சிகள் வைத்திருப்பது என்று படம் தமிழ் சினிமாவின் புதிய முகமாகத் தெரிவதாக பிரமுகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

படத்தில் நடித்துள்ள ஆர்யா, விஜய் சேதுபதி, ஷாம் ஆகியோருக்கும் பாராட்டுகள் குவிகின்றன.



# மோதிரத்தை பாதுகாக்க நூதன வழி



இங்கிலாந்து நாட்டு ரென்னிஸ் வீரர் அன்டி முர்ரே. இவர் ரென்னிஸ் போட்டிகளில் கலந்து கொள்ள மைதானத்துக்குச் செல்லும் போது தனது கை விரலில் உள்ள திருமண மோதிரத்தை கழற்றி, அதனை தனது சப்பாத்துக் கயிற்றில் கட்டிக்கொள்கிறார்.

ரென்னிஸ் விளையாட வரும்போது திருமண மோதிரத்தை கழற்றி பையில் வைத்துவிட்டு வந்தால் அது காணாமல் போய்விடுகிறது. இதனால், விளையாடும் போது சப்பாத்தில் உள்ள கயிற்றில் அதை கட்டி வைத்துக் கொள்வேன். போட்டி முடிந்ததும் மீண்டும் அதை கைவிரலில் அணிந்து கொள்வேன்–என்கிறார் அன்டி முர்ரே.

இது நல்ல யோசனையாய் இருக்கே. ஆனால் சப்பாத்துக்கு கயிற்றிலிருந்தும் மோதிரம் கழன்றா ?.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்....

ஆசிரியர் : மூன்றாம் உலகப் போர் வந்தால் என்ன ஆகும் ?


வாண்டு பாபு: (சோகமாக) வரலாறில் இன்னும் நிறைய படிக்க வேண்டி இருக்கும்.


ஆசிரியர் : ???

ஆசிரியர்: பாபு, எந்த மாதத்தில 28 நாள் இருக்கும்?

வாண்டு பாபு: எல்லா மாதத்திலையும் 28 நாள் இருக்கும்!

ஆசிரியர்: ????





வித்தியாசம் தெரிகிறதா?

# சினைப்படுத்தப்பட்ட பசுவை இறைச்சிக்காக வெட்டும் கொடூரம்

அச்சுவேலி, மே 18

சினைப்படுத்தப்பட்ட பசுவை இறைச்சிக்காக வெட்டி கன்றை வீசிவிட்டு இறைச் சியைக் கொண்டு சென்று பயன் படுத்தும் கொடுமை நெடுங் குளம் சந்திக்கு அண்மையில் உள்ள பற்றைக் காட்டுப் பிர தேசத்தில் வாராந்தம் நடை பெற்று வருகின்றது.

திருடப்பட்ட சினைப்படுத் தப்பட்ட மாட்டை சட்டவிரோ தமான முறையில் இறைச் சிக் காக வெட்டுவது தொடர்பாக மாட்டின் உரிமை யாளர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி நடை பெற்றது.

நெடுங்குளம் சந்திக்கு அண் மையில் உள்ள பற்றை புதர் மண்டிய பகுதியில் சமூக விரோ தச் செயல்கள் மற்றும் சட்டவிரோத செயற் பாடுகள் நடைபெறுவது தொடர்பாக சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

பல குடும்பங்கள் தமது நாளாந்த வாழ் வாதாரத்துக்கு பசுமாடுகளை வளர்த்து, அதில் இருந்து பெறப்படும் பாலை விற்று வாழ்ந்து வருகின்றனர். அதே நேரத்தில் பால் எடுக்கக் கூடிய பசுமாடுகளுக்கு யாழ். மாவட் டத்தில் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் நிலவு கின்றது. பசுமாடு ஒன்று அதன் தரநிலை மற்றும் பெறப்படும் பாலின் அளவுக்கு ஏற்ப 25 ஆயிரம் ரூபாவில் இருந்து ஒரு லட்சம் ரூபா வரையும் சாதார ணமாக விலை போகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து சட்டவிரோதமாக வெளி மாவட் டங்களுக்குப் பசுமாடுகள் கடத் தப்படுவதும் களவாடப்பட்டுக் கொடூரமான நிலையில் இறைச்சிக்காக வெட் டப்படுவதும் மாவட்ட நிலை யில் பசுமாடுக ளுக்கு பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

நெடுங்குளம் சந்திக்கு அருகில் உள்ள பற்றை மறைவைப் பயன் படுத்தி சமூக விரோதச் செயல் களும், களவாடப்பட்ட மாடு கள் இறைச்சிக்காக வெட்டப்படு வதும் சாதாரண மாக நடை பெற்று வருவதாக சமூக ஆர்வ லர்கள் விசனம் தெரிவிக்கின் றனர். வாராந்தம் இந்தப் பகுதி யில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது சாதாரண நிகழ்வாக நடைபெற்று வரு கின்றது. (வ-11)

# குடிதண்ணீர் விநியோகம் குறித்து புத்தூர் பாவனையாளர்கள் கவலை

அச்சுவேலி, மே 18

அச்சுவேலி-புத்தூர் பகுதிக் கான குடிதண்ணீர் விநியோகம் எதுவித மான நேரக் கட்டுப்பாடு களும் இன்றி ஒழுங்கீனமான முறையில் நடை பெற்று வரு வதாக பாவனையா ளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி, புத்தூர் கிழக்கு, ஆவரங் கால் கிழக்குப் பகுதியில் குடிதண்ணீர் வசதி குறைவான பகுதிகளுக்கு கட்டாய அடிப்ப டையில் தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையால் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப் பட்டு வருகின்றது.

குடிதண்ணீர் விநியோகம் கடந்த காலங்களில் குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் சில மணி நேரம் வழங்கப்பட்டு வந்தது. பாவனையாளர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் குடி தண்ணீரை உரிய முறையில் பெற்றுப் பயன்படுத்தி வந்தனர். தேசிய குடிதண்ணீர் விநி யோக வடிகாலமைப்புச் சபை குடிதண்ணீர் விநியோகம் தொடர் பான நேர அட்டவணையை யும் வெளியிட்டு பாவனையாளர் களுக்கு அறிவித்துள்ளது.

ஆனால் கடந்த சில மாதங் களாக நேர அட்டவணையின் பிரகாரம் நீர்விநியோகம் நடை பெறாமல் ஒழுங்கீனமும் குறை பாடும் நிலவு வதாக பாவனை யாளர்கள் விசனம் தெரிவிக் கின்றனர். (வ-11)


**வீடு வாடகைக்கு**

சட்டநாதர் கோயிலுக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட மூன்று அறை வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 629 6570
077 650 8376

(59936) (9.3)

**வாடகைக்கு**

TATA Supper Ace (Originel) Aluminiya body) வாகனம் மாத வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 746 6678, 077 659 7951

(59900) (4.3.7)

**காணி விற்பனைக்கு**

ஏ-9 வீதியில் மீசாலை கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக புகையிரத ரயில் பாதைக்கு அருகில் 4 பரப்பு வீதம் துண்டு களாக உள்ள பாதையுடன் கூடிய 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (41138)(4.3.7)

தொடர்பு: 077 308 6717, 021 205 7595

**அதிபர் சேவை தரம் - 3**
**போட்டிப் பரீட்சைக்கான தகவல் நூல்**

"கல்வி உலகினதுக்கான தகவல் களஞ்சியம்"

விலை: 230/=

அனைத்துபுத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: (59914)(4.3.7)

072 366 9014, 077 834 9507

**கணினி / CCTV உதிரிகள்**

Laptops

5th Gen i3 Laptops Rs. 66, 750/- இருந்து (or upwards)
5th Gen i5 Laptops Rs. 81, 750/- இருந்து (or upwards)

hp ASUS KKBRO

CCTV

அதி நவீன CCTV உதிரிகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

hp brother

Printers

Laserjet 1102 Printer Rs. 12, 500/-
Wifi Laserjet HL1210w Printer Rs. 11, 500/-
3 in 1 Laserjet Printer Rs. 23, 000/-
Deskjet 1010 Rs. 3, 650/-

Accessories

FAX Machine: Rs. 19, 650/-
External DVD R/W: Rs. 4, 800/-
External Harddrive:
500GB: Rs. 8250/-
1TB : Rs. 11800/-

Subwoofer

2.1 Subwoofer Rs. 2, 800/- இருந்து
2.1 Subwoofer Rs. 8, 800/- (Bluetooth)
4.1 Subwoofer Rs. 6, 250/-
5.1 Subwoofer Rs. 7, 000/-
5.1 Subwoofer Rs. 8, 850/- (Bluetooth)

MICRO PC SYSTEMS

No: 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பாணம்.

Projector / Projector Screen / Subwoofer
வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்: TP: 0212225893
கிளிநொச்சி: TP: 0212285593
வவுனியா: TP: 0242221969
கொழும்பு: TP: 0112367405

**மணப்பெண் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், யாழ்ப்பா ணத்தில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 36 வயதுடைய மணமகனுக்கு கிரக பாவம் கூடிய செவ்வாய் குற்றமுடைய பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு: மாங்கல்ய திருமண சேவை,
158/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 516 5339 (59942)(4.3.7)

**மாபெரும் புத்தக மலிவு விற்பனை**

அனைத்து வகையான புத்தகங்களிற்கும் 10% முதல் 20% வரையான விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

இடம்: யாழ் புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் ஞானம்ஸ் .ஹோட்டல் அருகில்)
T.P: 077 834 9507, 021 454 5552
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
(59944)(4.3.7)

**மணிவிழா நாயகியை மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்**



18.05.2015 இன்று 60 ஆவது அகவையில் காலடிபதிக்கும்

திருமதி அற்புதராணி தியாகராசா

அவர்கள் வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியில் ஆசிரியப் பணியை சிறப்புடன் செய்து ஆசிரியர் சேவை தரம் 1 இல் இருந்து ஓய்வுபெற்று இன்று மணிவிழாக் காணும் எனது பெரியம்மாவை மனதார வாழ்த்துகின்றேன். அவர் தனது ஓய்வு காலத்தில் ஆரோக்கியத்துடனும் குடும்பத்தாருடனும் வாழ்ந்து சமூகப் பணிகள் பல புரிந்து சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Congratulation

செல்வி சிற்றஞ்சன் அஜித்திரா
அஜித்திரா காட்வெயர்,
வவுனியா.

இல.11,
9 ஆவது ஒழுங்கை,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

(58576) (4.3.6)

**BA (கலைமாணி)**
**பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

* நீண்டகாலம் பதிவினை மேற்கொள்ளப்படாமல் இருந்த கலைமாணிக்கான (B.A) பதிவுகள் மேற்படி பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
* கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆகும்.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
* பரீட்சைக்கான கருத்தரங்குகள் யாவும் எமது நிறுவனத்தில் நடைபெறும்.
* A/L இல் பழைய, புதிய பாடத்திட்டத்தில் பரீட்சையினை எடுத்த மாணவர்கள் அனைவரும் பதிவினை மேற்கொள்ள முடியும்.
* வட மாகாணத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம் எமது நிறுவனமாகும்.

பதிவுகள் முடிவு திகதி : 30.06.2015
விரிவுரைகள் ஆரம்பம் : 23.05.2015 காலை(8 மணி)

குறிப்பு : விரிவுரைகளில் பங்கேற்கும் வெளி மாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

விபரங்களுக்கு: S.அருள்நங்கை(நிர்வாகி)
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.
021 568 9477, 021 222 8148, 077 846 9721,077 8019187, 077 662 1856

**STUDY IN INDIA / இந்தியாவில் உயர்கல்வி**

ENGINEERING DEGREES

இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள பிரபல பொறியியல் கல்லூரியான EXCEL ENGINEERING COLLEGE யில் சேர்ந்து உலகலாவியரீதியில் புகழ்பெற்ற ANNA UNIVERSITY யின் ENGINEER ஆகுவதற்கான அரிய வாய்ப்பு.

- Aeronautical Engineering
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics & Communication Eng.
- Mechanical Engineering
- B.Tech - Informa- -tion Technology

முதல் 5 விண்ணப்பதாரிகளுக்கும் 50% SCHOLARSHIP

தேவையான தகமை
• GCE A/L Pass in Maths, Chemistry and
• Psychics + GCE O/L Credit Pass in English.

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் ஒரு வருட FOUNDATION COURSE ஐ முடித்து, பின் ENGINEERING DEGREE ஐ தொடரமுடியும் (A/L தேவையில்லை).

மேற்கூறிய ANNA UNIVERSITY ENGINEERING DEGREE இலங்கை UGC இனால் அங்கிகரிக்கப்பட்டதுடன் ENGINEERING DEGREE யை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு எதிர் காலத்தில் CANADA, AUSTRALIA, NEW ZEALAND, UK ஆகிய நாடுகளில் PERMANENT RESIDENCE (PR) பெற வாய்ப்புள்ளது.

Excel Engineering College
NH 47, Salem Main Rd, Komarapalayam - 637 303
Namakkal Dt, Tamil Nadu, INDIA
www.excelinstitutions.com

Call : (தமிழில்) 0777 - 767 818
scholinfo@yahoo.com

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சின்னத்துரை
ஜெயானந்தன் (ஆனந்தன்)

தோற்றம்
15.01.1956

மறைவு
18.04.2015

கடந்த 18.04.2015 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (18.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் ஆறுதல் வழங்கி கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் இறுதி மரியாதையில் கலந்துகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.02,
வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 221 9534


# இந்திய மீனவர் அத்துமீறினால் தாக்குதல் நடத்துவதற்குத் தயார்

## மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு,மே18

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பதற்கு ஒரு போதும் அனுமதி வழங்கப்போவதில்லை.இந்திய மீனவர்கள் அத்துமீறினால் தாக்குதல் நடத்துவதற்கு வட பகுதி மீனவர்கள் தயாராக இருப்பதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி வடபகுதி மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றுக்கு அமைவாக மீனவர்கள் கூட்டாக இணைந்து இந்திய மீனவர் களின் 5 அம்சக் கோரிக்கைகளை நிராகரித்துள்ளனர்.

இது தொடர்பிலான அறிக்கை ஒன்று கடற்றொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை இலங்கையிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்திடமும் ஒப்படைக்கப்படவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சின் போது இந்திய மீனவர்கள் சார்பில் 5 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை நிறுத்துவதாகவும், மாற்றீடான தொழில் முறை மேற்கொள்ளும்வரை 3 வருடங்களுக்கு இழுவைப்படகுகளைப் பயன்படுத்த அனுமதி வழங்குமாறும், கரையோரத்தில் இருந்து 5 கடல் மைலுக்கு அப்பால் மீன்பிடியில் ஈடுபடமாட்டோம் என்றும், 6 மாதத்துக்கு ஒரு தடைவை மீன வர்கள் பேச்சை நடத்துமாறும் இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கைகளை ஆலோசித்துள்ள வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களின் கோரிக்கைகளை நிராகரித்துள்ளனர். இலங்கைக் கடற்பரப்பில் ஒரு போதும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப் போவதில்லை என்று மீனவர்கள் முடிவு செய்துள்ளனர். மீனவர்களால் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் கடற்றொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்தவோ, தாக்கவோ தாங்கள் தயாராக இருப்பதாகவும், அதற்கான அனுமதியை கடற்படையிடம் பெற்றுத் தருமாறும் மீனவர்கள் கடற்றொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள் ளனர். (வ–14)


## 6 ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர்
சண்முகராசா
நல்லநாதன்
(சட்டத்தரணியும், பிரசித்த
நொத்தாரிசும்
வேலணை மேற்கு, வேலணை)

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஆறு கடந்து விட்டன
ஆனாலும் உங்கள் நினைவுகளினால்
நிதம் நிதம் கண்ணீர் விடுவதை
தவிர்க்க முடியவில்லையே
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ என்ற நியதி இருந்தாலும்
நினைவுகளிலும் கனவுகளிலும் நீங்கள்
எங்கள் கூட இருப்பதாகவே உணர்கின்றோம்
என்றும் எங்களுடன் நினைவுகளாக நீங்கள்
இருந்து வழி நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையில்
நாள்களை நகர்த்தி கொண்டிருக்கின்றோம்
வாழ்ந்த காலத்தில் உங்களது செயல்கள்
சிந்தனைகள் இன்றும் எமது செயல்களிலும்
சிந்தனைகளிலும் சேர்ந்து இருக்கின்றன.

மலர்வு
17.07.1950

உதிர்வு
18.05.2009

என்றும் உங்கள் நினைவுகளுடன்
துயருறும் மனைவி,
மக்கள், மருமகன்,
குடும்பத்தினர்.

(59940)(4.3.6)


# தமிழருக்கான அரசியல் தீர்வு சமஷ்டி முறையிலேயே தேவை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் முன்வைப்பு

யாழ்ப்பாணம், மே 18

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்றுக்கொண்டுள்ளன.

அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையிலான சமஷ்டி என் பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார். அதேவேளை, தேசத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையிலான சமஷ்டி என்பது தான், தமது நிலைப்பாடு என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்.முகாமையாளர் மன்றத்தால் தமிழ் மக்களுக்கான வெளியிலுள்ள வழி என்ற தலைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடுகையில்:

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, நாம் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா மற்றும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் இரு தடவைகள் பேச்சு நடத்தி னோம். அரசியல் தீர்வு தொடர்பில், நாடாளுமன்ற பொதுத் தேர்தலின் பின்னரே ஆராய்வது என்று இணங்கினோம்.

அதன்போது எங்களுக்கு இடையில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது. ஒற்றையாட்சி முறையில் தீர்வு காண்பதில்லை என்பதுதான் இணக்கப்பாடு. அதற்காக நாங்கள் சமஷ்டி என்ற 'லேபிளையும்' போட்டுக் கொள்ள விரும்பவில்லை.

சமஷ்டி என்பதற்கு வரையறை இல்லை. பிரிட்டனில் நடை முறையில் இருப்பதும் சமஷ் டிதான். சுவிஸில் இருப்பதும் சமஷ்டிதான். இரண்டு நாடுகளிலுமே, வெவ்வேறு வகையான சமஷ்டி ஆட்சி முறையே இருக்கின்றது.

சர்வதேச சமூகம் இன்று நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றது. அதில் அரசியல் நல்லிணக்கமும் ஒன்று. முழுமையான அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் – சமஷ்டித் தீர்வின் அடிப்படையில் தான் தீர்வை ஏற்றுக் கொள் வோம். அதற்கு குறைவாக ஏற்றுக்கொள்ள மாட்டோம். இன்று பூகோள அரசியல் ரீதியில், சீனாவுக்கு எதிராக சர்வதேச சமூகமும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது. இதுதான் நாம் தீர்வை அடைவதற்காக கைக்கொள்ளும் வழி.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசத்தை அழிப்பதுதான் பிரச்சினை. தேசத்தின் அழிப்பை தடுப்பதென்றால் அந்த தேசத்துக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அந்த தேசத்தின் அங்கீகாரத்தைப் பெற்று இலங்கைக்குள் ஒரு சமஷ்டித் தீர்வின் அடிப்படையில் வாழலாம். அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அல்ல. தேசத்தினுடைய அங்கீகாரத்தின் அடிப்படையில் – சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எட்டலாம். அதனை எட்டுவதற்கு இன்றுள்ள பூகோள அரசியல் சூழ்நிலையை நாம் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். (வ–5)


## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய்மடியில்
23
10
1926

இறைவன் அடியில்
22
05
1993

அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை
(விவசாய நண்பன், கைதடி கிழக்கு, கைதடி)

விண்ணில் இருந்து விழுதுகளைத் தாங்கிநிற்கும்
எம் குடும்பத்தின் தெய்வமே
மண்ணில் நீங்கள் கால்வைத்தால் எங்கள்
மனம் குளிர்ந்திருக்கும் !
பேரனும், பேர்த்தியும், பூட்டனும், பூட்டியும் என பாட்டனைத்
தேடிவர வாசலில் வந்து நின்று வரவேற்க காணோமே !
வெண் சொல்லறியா வெற்றி வேந்தரே !
பொன்னில் பொறித்திருக்கும் உங்கள் பொன் சொற்கள்
என்றும் எமக்குள் ஒலிக்கும்.
தோளில் ஒரு சால்வையுடன்
தெருவிலே நடந்து போனால் உங்கள் தோற்றமே வேறு ஐயா !
தெரிந்தவருக்கும், உறவினருக்கும், உற்றாருக்கும் என
வாரிக் கொடுப்பதில் அந்தப் பாரியும் தோற்றுடுவார்.
விழுதுகள் நாம் தினம் உமைப்பற்றி நிற்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுடன்

அன்பின் ஆழக்கடல் மனைவி திருமதி சங்கரப்பிள்ளை, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் குடும்பத்தினர்.

லாவண்யா இல்லம்,
கைதடி கிழக்கு, கைதடி.



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி இராசரஞ்சினி
கனேஸ்



உதிப்பு
13.04.1968

உதிர்வு
02.06.2011

திதி: 18.05.2015

அன்புத் தெய்வமே! அம்மா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலா
நிங்கா உங்கள் நினைவுகளுடன் வாழும்

கணவர்- கனேசன்,
பிள்ளைகள்- க.சாயித்திரா,
க.தமிழ் அழகன்,
க.தமிழ்ச்செல்வன்.

மீசாலை கிழக்கு, மீசாலை.

# பலாத்காரமாகப் பணத்தைப் பெற்ற வயோதிபருக்கு அபராதமும் சிறையும்



யாழ்ப்பாணம் மே 15

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த மகளைப் பார்ப்பதற்காக வந்த பெண்ணைப் பயமுறுத்தி அவரிடமிருந்த பணத்தை பலாத்காரமாகப் பெற்ற 64 வயதுடைய கிளிநொச்சி, அக்கராயன் குளத்தைச் சேர்ந்த வயோதிபருக்கு கடந்த வியாழக் கிழமை 1500 ரூபா அபராதமும் 10 வருடங் களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் யாழ். நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

கடந்த மாதம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தனது மகளைப் பார்ப்பதற்காக வந்தவேளை வெளி நோயாளர் பிரிவுக்கு அருகில் நின்ற குறித்த வயோதிபர் பெண்ணைப் பய முறுத்தி தான் அம்புலன்ஸ் சாரதி யெனத் தெரிவித்து அவரி டமிருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு சென்றுள்ளார். பின்னர் கடந்த 8 ஆம் திகதி மீண்டும் அந்தப்பெண் மருத்துவ மனைக்கு வந்தவேளை மீண்டும் குறித்த வயோதிபரை மருத்துவ மனை வளாகத்தினுள் கண்டுள்ளார். அதனை அடுத்து அவர் மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு விடயத்தை தெரியப்படுத்தி யுள்ளார். அவர்களின் உதவி யுடன் வயோதிபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். அவரை கடந்த வியாழன் வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அன்றையதினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வயோதிபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனை அடுத்து அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப் பட்டது. (வ-103)

## இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்

வசிகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இல. 175, முதலாம் குறுக்குத்தெரு,

யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம். தொடர்பு 077 595 0463

## நீர்க் கசிவைத் தடுப்பதற்கு Water Proofing

உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களில்
சீமெந்திலான கூரைகள், நீர்த் தொட்டிகள்
ஆகியவற்றில் உள்ள நீர்க் கசிவை
நிரந்தரமாக தடுப்பதற்கு
(10 வருட உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்)

NORTH AND EAST ENGINEERING
( Exclusive Dealer For ELGI & Finco)
No. 55, Stanley Road,
FINCO
Hot Line: 077 756 8686 / Tel : 021 222 2363

## அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயில் உற்சவ கால தற்காலிக கடைகள் அமைத்தலுக்கான ஏலம் கூறுதல்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ விழா 23.05.2015 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 03.06.2015 பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெறும். இக்காலப்பகுதியில் தற்காலிக வியாபாரம் செய்வதற்கான கடைகளுக்கான ஏலம் கூறுதல் நிகழ்வு 20.05.2015 புதன்கிழமை பி.ப 3.00மணிக்கு ஆலயமுன்றலில் நடைபெறும் ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் த்வறாது சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

தலைவர்:
ம.பத்மநாதன்

(சி 17782)
(9.8)

## யா/புனித திரேசா மகளிர் கல்லூரி அச்சுவேலி வருடாந்த பாடசாலை அபிவிருத்தி குழு பொதுக்கூட்டம்

தலைமை: அருட்சகோதரி
மரியறோசாறியோ அ.க
காலம்: 19.05.2015 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் ஒரு மணி
இடம்: பாடசாலை பிரதான மண்டபம்

இதில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
பாடசாலை அபிவிருத்திக்குழு.

(59708) (4.3.7)

## பகிரங்கக் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தினால் கீழ்வரும் பாடசாலைகளின் பழைய கட்டடங்களை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடங்களை 18.05.2015 ஆம் திகதியிலிருந்து 25.05.2015 வரை நேரில் பார்வையிட்டு ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனியாக விண்ணப்ப கட்டணமாக ரூபா 250.00 ஐ அலுவலக நாள்களில் பி.ப.3.00 மணிக்கு முன் வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்தி கேள்விப் பத்திரத்தை யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் 25.05.2015 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். அதனுடன் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வியுடன் இணைத்து 25.05.2015 ஆம் திகதி முற்பகல் 11.30 க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமூகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரருக்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னர் உரிய தொகையினை அலுவலகத்தில் செலுத்தி 14 நாள்களினுள் குறித்த வேலையை பாடசாலை செயற்பாட்டிற்கும், மாணவர்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருள்களை அகற்றுதல் வேண்டும்.

| பாடசாலையின் பெயர் | கட்டடத்தின்அளவு | மீளளிப்பு வைப்பு தொகை (ரூபா) |
|---|---|---|
| 1. யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | (90'x20'),வகுப்பறைத் தொகுதி, பழைய மலசலகூடங்கள், பழைய நீர்த் தாங்கி பழைய விடுதி. | 30,000.00 |
| 2.யா/நாவாந்துறை றோ.க வித்தியாலயம் | (80'x20'), (20'x20') மண்டபம் | 50,000.00 |
| 3. யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் | (160'x18'), வகுப்பறை கட்டடம் | 20,000.00 |

என்.தெய்வேந்திரராஜா,
தலைவர்,
கேள்விச் சபை,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி.17777)(45.3.7)

## Invitation for Bids (IFB) Zonal Education Office, Jaffna.

01. The Chairman Regional Procurement Committee on behalf of the Zonal Education Office Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following civil works.

| Bid ID | Description of Work | Estimated Cost Rs.in million | Contrect period | Reqired Grade | Security Amount Rs. | Valid Period | Pre Bid meeting place and date |
|---|---|---|---|---|---|---|---|
| J/ZEO/SWB/NS/2014/04 | REPAIRS TO HOSTEL BLOCK AT J/VEMBADI GIRLS' HIGH SCHOOL | 3.35 | 90 DAYS | C8 or above (Buildings) | 35,000.00 | Till 15.09.2015 | School Works Branch Zonal Education Office Jaffna Jaffna on 27/05/2015 at 10.00 a.m. |

02. Source of Fund for the above work is Ministry of Education Isurupaya Battaramulla (National School)

03. The Period of Completion of each these Services is 90 days from the Start date. -

04. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Bulding Construction for above mentioned grade or above with the Institute for Construction Training and Development (ICTAD)

05. Interested bidders may obtain further information and inspect the bidding documents at the School Works Branch Zonal Education Office Jaffna during office hours.

06. A complete set of Bidding Documents in English Language may be purchased from the School Works Branch Zonal Education Office Jaffna by interested bidders on the submission of a written application to the date from 18.05.2015 until 01.06.2015 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non refundable fee of LKR 2,500/= only The method of payment will be cash to the Office of the Zonal Education Office Jaffna.

07. Bids shall be deliverred to Zonal Education Office Jaffna on or before 14.00 hours on 03.06.2015 Late bids will be rejected Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend.

08. All bids shall be accompanied by a Bid Security on the name of **"Zonal Director of Education, Zonal Education Office Jaffna"** for rupees above mention which should be obtained either from a reputed Commercial Banks Operating in SriLanka approved by the Central Bank or Construction Guarantee Fund Valid for a period of 105 days (from 03.06.2015 till 15.09.2015) from the date of close of bids. The Bid Security should be On -demand & Conditional and on the format given in the Bidding Document.

**N.Theivendrarajah, Chairman**
**Regional Procurement Committee**
**Zonal Education Office Jaffna,**

(சி/17776)(4.3.7)

# மாணவர்கள் ஒருங்கிணைந்து எதிர்ப்பதனூடாக அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்

## புங்குடுதீவு மாணவியின் நீதி வேண்டிய கிளிநொச்சி பாடசாலைகளின் போராட்டத்தின் போது மனு கையளித்தபோது அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 18

எங்களுடைய மாண வர்கள் ஒன்று சேர்ந்து இந்த தீய செயற்பாட்டை ஒருங் கிணைந்து எதிர்ப்பதனூடாக, தங்களுடைய குரலை உரத்து ஒலிக்கச் செய்வது இந்த சமூகத்தில் மட்டுமல்ல இந்தப் பிரதேசத்திலே அல்லது இந்த நாட்டிலே வாழுகின்ற அனைவருக்கும் ஓர் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.



கிளிநொச்சி பாடசாலைகளின் மாணவர்களால் கடந்த வெள்ளிக் கிழமை மேற்கொள்ளப்பட்ட புங்குடுதீவு மாணவியின் நீதி வேண்டிய போராட்டத்தின் முடிவில் மாணவர்களால் அரச அதிபருக்கு மனு கையளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளினது மாணவர்களால் முன்னெடுத்து செல்லப்படுகின்ற இந்தப் போராட்டமானது உண்மையில் இங்குள்ள அல்லது அனைத்து சமூகங்களுக்கும் இடையில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, இந்த மாணவர்கள், யுவதிகள் வன்முறைக்கு உள்ளாக்கப் படுகின்ற செயற்பாடு மற்றும் பல்வேறுபட்ட சட்டரீதியற்ற செயற்பாடுகள் தற்போதும் சகல இடங்களிலும் விசேடமாக கிளிநொச்சி மற்றும் ஏனைய இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதை நாங்கள் ஒவ்வொருநாளும் அறிந்து கொண்டிருக்கின்றோம்.

உண்மையில் எதிர்காலத்தில் இவ்வாறான மாணவ சக்திகளின் ஊடாகவே நாங்கள் அவற்றைக் கட்டுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உண்மையில் அது தனிப்பட்ட ஒருவராலோ, இருவராலோ மேற்கொள்ள முடியாது. அனைத்து சமூகங்களும் இதில் ஒன்றிணையவேண்டும்.

இன்று மாணவர் சமூகம் ஒன்றிணைந்தது போல் ஏனைய சமூகங்களும் ஒன்றிணைவதன் ஊடாக நிச்சயமாக ஒரு பலமான கட்டுக் கோப்பை ஏற்படுத்துவதனோடு இவ் வாறான ஒரு வன்முறைக்கு நாங் கள் முடிவுகட்ட வேண்டிய நிலை யில் இருக்கின்றோம்.

நிச்சயமாக இதனை எந்தவிதத்திலும் தொடர அனுமதிக்க முடியாது என்ற அடிப்படையிலே இந்த மாவட்டத்திலே புதிதாக பதவியேற்ற நான் நிச்சயமாக இந்த நடவடிக்கைகள் மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதோடு, மாணவர்களால் தரப்பட்டிருக்கின்ற இந்த மனு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். எங்களுடைய அறிக்கையையும் இதனோடு இணைத்து இந்த மாவட்டத்தின் இவ்வாறான இந்த நடவடிக்கை களையும் தடுத்து நிறுத்துவதற்காக உரிய தரப்பினருடன் சேர்ந்துமுன்னெடுக்க வேண் டும் என்ற கோரிக்கையையும் நான் முன்வைக்கவுள்ளேன்– என்றார். (வ–21)

## சேவை நலன் பாராட்டு விழா

முல்லைத்தீவு மே 18

முல்லை மாவட்டச் செயலகத்தில் அரச அதிபராகப் பணியாற்றி தற்போது யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனின் சேவை நலன் பாராட்டு விழா கடந்த வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயல கத்தில் நடைபெற்றது.

வன்னி சுதந்திர ஊடக பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் தற்போதைய அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் எம். மோகன்ராஜ் மற்றும் மற்றாலாகிச் சென்ற நா.வேத நாயகன் மற்றும் வன்னி ஊடக வியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் டிலான் தலைமையில் இடம்பெற்ற நிகழ் வில் அவரைப் பாராட்டி வாழ்த்து மடல் வழங்கப்பட்டது. (வ–500)

## மின்மானியில் குளறுபடி இருவருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 18

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின்மானியில் குளறுபடி செய்த இருவருக்கு சாவ கச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதமும் மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பீடாக ஒரு லட்சம் ரூபா வுக்கு மேல் நஷ்ட ஈடும் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

மின்மானியில் குளறுபடி ஏற் படுத்தி மின்சார சபைக்கு நட்டம் விளைவித்த இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு தலா 10ஆயிரம் ரூபா, 15ஆயிரம் ரூபா வீதம் அபராதமும், மின்சார சபைக்கு இழப் பீடாக 73 ஆயிரம் ரூபாவும் 26 ஆயிரத்து 581 ரூபாவும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (வ–9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி



மலர்வு 1940.08.22 உதிர்வு 2015.05.15

மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கந்தசாமி 2015.05.15 வெள்ளிக் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் தம்பதியரின் புத்திரியும் விநாசித்தம்பி கந்தசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வேலாயுதபிள்ளை, கார்த்தி கேசு, தங்கராசா (லண்டன்) ,சிதம்பர நாதன் (ஓய்வு பெற்ற தபாலாசிரியர்), கோபால சிங்கம், ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற புஸ்பராணி, காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் குபேரன் (பூநகரி), கிரிதரன்(லண்டன்), கல்யாணி (வவுனியா) ஆகியோ ரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.05.2015) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(சி.17763)(8.7.9)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிவப்பிரகாசம் சிவராமலிங்கம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)



முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நல்லூரை வதிவிடமாகவும், களுபோவிலை -தெஹிவளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சிவராமலிங்கம் கடந்த (15.05.2015) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியம் (லங்கா) அவர்களில் பாசமிகு கணவரும், Dr. சிவசுதன் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புத் தந்தையும், கமலாசினி அவர்களின் மாமனும், சிவானி, சிவந்தி ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான திலகவதியம்மா, சரஸ்வதி, ஜெயலட்சுமி, மங்கையர்க்கரசி மற்றும் ஞானாம்பிகை, கணேஸ்வரி, தனலட்சுமி, சரவணபவானந்தன், மங்களேஸ்வரி, இரத்தினானந்தன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆஸ்திரேலியாவில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: Dr.சிவசுதன்
0061 4375 10385

(59630)
(45.3.6)

தகவல் :
சி.சிவஜீவன் (பேரமகன்)

## மாணவர் கல்வி, தொழில் மேற்படிப்பு கலந்துரையாடல்

தென்மராட்சி, மே 18

தென்மராட்சி கல்வி வலயம், தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் உத்தி யோகத்தர்கள், தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கான மாணவர் கல்வி மற்றும் தொழில் மேற்படிப்பு தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றால் நடத்தப்படவுள்ளதுஇன்றுதிங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு நீதிமன்ற வளாகக் கட்டடத்தில் மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் தலைமையில் நடை பெறவுள்ளது.

கலந்துரையாடலில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், தென்மராட்சி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திறன் அபிவிருத்தி அலுவலர், மனித வள முகாமைத்துவ உதவியாளர், உளவளத்துணை ஆலோசகர், சமூக சேவைகள் அலுவலர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அலுவலர், சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அலுவலர், பெண்கள் அபிவிருத்தி அலுவலர், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி அலுவலர் ஆகியோரை கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (வ–9)

## மாணவி கொலையைக் கண்டித்து கண்டாவளை மாணவர் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 18

புங்குடுதீவில் உயர்தர மாணவி ஒருவர் கூட்டு வன்புணர்வின் பின்னர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்துக் கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலய மாணவர்கள் கண்டன ஆர்ப்பட்டம் நடத்தினர்.



கறுப்புப்பட்டி அணிந்து பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர். கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிபர், ஆசிரியர்களும் இணைந்திருந்தனர்.

மாணவியின் கொடூரக் கொலை மாணவர்கள் மத்தியில் கொத்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. குடா நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலை மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர். (ற)

## வீட்டுக்குள் விடப்பட்டிருந்த மோ.சைக்கிள் அபகரிப்பு

தென்மராட்சி, மே18

வீட்டு முன்விறாந்தையில் விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நள்ளிரவு வேளையில் இனம் தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு ஒரு மணியள வில் புத்தூர் கிழக்கில் இடம் பெற் றுள்ளது.

சாவகச்சேரி அரச திணைக் களத்தில் பணிபுரியும் உத்தி யோகத்தர் வழமைபோல் தனது பெரியதந்தையின் வீட்டில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு திறப்பு, தலைக்கவசம் போன்றவற்றையும் விட்டுச் சென்றுள்ளார்.

நள்ளிரவு வேளையில் திருடும் நோக்கத்தில் வீட்டுக்கு வந்த வர்கள் திறப்புடன் காணப்பட்ட மோட்டார் சைக்கிளை சத்தமின்றி எடுத்துச் சென்றுள்ளனர். அதன்பின்னர் வீட்டுக்குள் நுழைய முற்பட்ட வேளையில் வீட்டுக் காரர் விழித்து வெளியே வரமுற்பட்ட போது அவரைக் கொட்டனால் தாக்கியுள்ளனர். வீட்டுக் காரரும் கையில் வைத்திருந்த கதவுக் குப் போடும் சட்டத்தால் திருடர்களைத் தாக்கியுள்ளார். முதியவரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத திருடர்கள் அங்கிருந்து தப்பியோடியுள் ளனர். இந்தச் சம்பவம் தொடர் பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(வ–9)

# உதயனின் மாபெரும் கலை இலக்கியத் தேர்வின் பரிசில் நாள்
































உதயன் நாளிதழால் நடத்தப் பட்ட மாபெரும் கலை இலக்கிய. போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந் துக் கல் லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், ஓவியப் போட்டி பிரிவு 'பி' யில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதை இங்கு காணலாம்.

இந்தப் பரிசுக் கொண்டாட்டத்தின் ஏனைய நிகழ்வுகள் நாளைய உதய னில் வெளிவரும். விழாவில் பரிசு பெற்ற மாண வர்களுக்கான ஒளிப் படங்கள் தேவைப் படின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: *0718628380.*




சொத்துக்குவிப்பு வழக்கில் விடுதலை பெற்றுள்ள ஜெயலலிதாவுக்கு ஆதரவாக அ.தி.மு.க வினர் தமிழகமெங்கும் சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர்.

## பீகாரில் மீண்டும் நிலநடுக்கம்



பாட்னா,மே18

கடந்த மாதம் நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியாவின் வட மாநிலங்களிலும் சில இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் பீகார் மாநிலத்தில் 58 பேர் உயிரிழந்த னர்.

இதையடுத்து கடந்த 12 ஆம் திகதி பீகார் மாநிலத்தில் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டதில் 21 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் பீகார் மாநிலம் பாட்னாவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவில் 5.7 புள்ளிகளாக பதிவான அந்த நிலநடுக்கம் பாட்னா, முசாபர் நகர் உட்பட மாநிலத்தின் பல பகுதிகளிலும் உணரப்பட்டுள்ளது. மக்கள் அலறி அடித்துக் கொண்டு வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். (14)

## மங்கோலியாவின் பொருளாதாரத்துக்கு இந்தியா நிதியுதவி



உலன் பேட்டர்,மே18

மூன்று நாள் அரசு முறைப் பயணமாக சீன சென்ற இந்தியப் பிரதமர் தனது பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று மங்கோலியாவுக்குச் சென்றுள்ளார். பின்னர் அந்த நாட்டின் பிரதமர் சிமட்சைக்கான் பிலஜை சந்தித்த பிரதமர், இருதரப்புமூலோபாய உறவுகள் குறித்து விவாதித்துள்ளார்.

அதன் பின்னர் இரு நாடுகளுக்கிடையே 14 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

மங்கோலியாவின் பொருளாதார விரிவாக்கம் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகளுக்காக இந்தியா 1 பில்லியன் டொலர் நிதியுதவி அளிக்கும் என்று, பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் பிரதமர் மோடி அந்த நாட்டின் நாடளுமன்றத்தில் உரையாற்றும் போது: பிரதமர் சிமட்டுடனான மகிழ்ச்சியான சந்திப்பால், இரு நாடுகளின் உறவில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளோம். உலக ஜனநாயகத்தில் புதிய வெளிச்சமாக மங்கோலியா விளங்குகின்றது. 50 வருடங்களாக உங்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறோம். அதே போன்று ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா எடுத்த நிலைப்பாட்டுக்கு நீங்களும் உறுதுணையாக நின்றீர்கள். புத்தரின் பாதை தனிப்பட்ட நபர்களுக்கு மட்டும் மகிழ்ச்சியளிக்காமல், ஒட்டுமொத்த சமூகம் மற்றும் பல நாடுகளுக்கும் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. அந்தப் புத்தரின் பாதையில் பயணித்து ஆசியாவில் அமைதி மற்றும் கூட்டுறவு, நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டுவது நமது கடமை என்று மோடி தனது உரையில் தெரிவித்துள்ளார். (14)

## டில்லியில் கடந்த 4 மாதங்களில் 2,100 சிறுவர்களைக் காணவில்லை

டில்லி,மே18

டில்லியில் கடந்த 4 மாதங்களில் மட்டும், 2 ஆயிரத்து 100 குழந்தைகளைக்காணவில்லைஎன்றஅதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

இந்த வருடம் தொடக்கத்தில் இருந்து கடந்த மாதம் 15 ஆம் திகதி வரையில் தலைநகர் டில்லியில் 2,100 சிறுவர்களைக் காணவில்லை என்றும், கடந்த சில வருடங்களாக ஒருநாளுக்கு 20 சிறுவர்கள் மாயமாகி வருகின்றனர் என்றும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் பொலிஸார் காணாமற்போன சிறுவர்களைத் தேடி, ஒவ்வொரு வருடமும் சில சிறுவர்களை மட்டும் மீட்கின்றனர். ஆனால் அதிகமான சிறுவர்களைக் காப்பாற்ற முடியாத அவல நிலையே உள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுமிகள் என்பதால், அவர்கள் விபசாரத்துக்கு தள்ளப்படலாம் என்ற கவலையும் அதிகரித்துள்ளது. (14)

## பாகிஸ்தானில் அமெரிக்கா ஏவுகணைகள் வீச்சு




இஸ்லாமாபாத்,மே18

பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்திய அதிரடி ஏவுகணை வீச்சுத்தாக்குதலில் 6 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் தொடர்ந்து தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தீவிரவாதத்தை வளர்த்து விட்ட நாடு, இப்போது தீவிரவாத தாக்குதல்களால் நிலை குலைந்து வருகிறது. பாகிஸ்தானில் அண்மையில் பஸ்ஸில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 45 பேரைக் கொன்று குவித்ததைத் தொடர்ந்து, பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. இதேபோன்று தீவிரவாதிகள் கொலைவெறித் தாக்குதல் நடத்திய பின்னர், இராணுவம் நடவடிக்கை எடுப்பதும், பின்னர் அமைதி காப்பதும் பாகிஸ்தானில் தொடர் கதையாகிவிட்டது.

பாகிஸ்தானில் அமெரிக்க இராணுவம் அவ்வபோது தீவிரவாதிகளைக் குறி வைத்து தாக்குதல் நடத்துவது வழக்கமானது. ஆனால் பாகிஸ்தான், இதனை இறையாண்மைக்கு எதிரானது என்று போர்க் கொடிதூக்கியது. இதனால் தாக்குதலைக் குறைத்துக் கொண்ட அமெரிக்கா தற்போது, திடீரெனத் தாக்குதல் நடத்தியுள்ளது. பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள ஷாவால்பள்ளத்தாக்கில் அமெரிக்க இராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. அமெரிக்கா நடத்திய அதிரடி ஏவுகணை வீச்சுத் தாக்குதலில் 6 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதுடன், 2 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் வெளிநாட்டு தீவிரவாதிகள் என்றே கூறப்படுகிறது, ஷாவால் பள்ளத் தாக்கு பகுதியில் வெளிநாட்டு தீவிரவாதிகளும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## சீதனமாக கழிப்பறையைக் கொண்டு சென்ற மணப்பெண்



மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த ஒரு புதுமணப்பெண் தனது புகுந்த வீட்டுக்கு திருமண சீர்வரிசையாக ஆயத்தக் கழிப்பறையைக் கொண்டு சென்றுள்ளார்.

தற்போது கழிப்பறை இல்லாத வீடுகளில் பலவிதமான பிரச்சினைகள் வருகின்றன. கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு மருமகளாக செல்ல மறுத்து பல பெண்களின் திருமணங்கள் தடைப்படும் சம்பவங்களும் அதிகம் நடக்கின்றன.

இந்த நிலையில் மராட்டிய மாநிலத்தில் அகோலா மாவட்டம், அண்டுரா கிராமத்தைச் சேர்ந்த பெண் தனக்கு சீதனமாகத் தரும் தங்க நகை மற்றும் சீர்வரிசைப் பொருள்களுடன் ஓர் ஆயத்தக் கழிப்பறையையும் வாங்கித்தரும்படி தனது பெற்றோரிடம் கேட்டுள்ளார். அதற்குச் சம்மதித்த அவர்கள், ஆயத்தக் கழிப்பறையைச் சீதனமாக வழங்கியுள்ளனர். ஆயத்தக் கழிப்பறையைச் சீதனமாக புகுந்தவீட்டுக்குக் கொண்டு சென்ற அந்தப் புதுப்பெண்ணை தேவேந்திரா மக்கோடே வாழும் கிராம மக்கள் புதுமையாக பார்த்து, ஆச்சரியப்பட்டுள்ளனர். (14)

# ஸ்கொட்லாந்து பிரிந்து செல்ல அனுமதிக்கப் போவதில்லை

எச்சரிக்கை விடுத்த கமரூன்



லண்டன்,மே18
பிரிட்டன் நாட்டுக்கு தான் பிரதமராக இருக்கும் வரை, பிரிட்டனிலிருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் எனப் பிரதமர் கமரூன் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.
ஸ்கொட்லாந்து நாட்டின் முக்கிய கட்சியொன்று தனிநாடு கோரி ரகசிய வாக்கெடுப்பு நடத்தவுள்ளதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனையடுத்து பிரிட்டன் பிரதமரான கமரூன் நேற்று முன்தினம் அவசரமாக ஸ்கொட்லாந்து தலைநகருக்குச் சென்று அந்தக் கட்சியின் தலைவரைச் சந்தித்துள்ளார். தனிநாடு கோரி சட்டவிரோதமான வாக்கெடுப்புக்கு அனுமதி அளிக்க மாட்டேன் எனவும், ஸ்கொட் லாந்து நாட்டுக்கு கூடுதல் அதிகாரங்களை பகிர்ந்து அளிப்பேன் எனவும் கமரூன் உறுதிபட அந்த சந்திப்பில் தெரிவித்துள்ளார். (14)

# தெற்கு சீனக் கடல் தீவுகளில் சீன இராணுவ மையங்கள்

*அமெரிக்கா கவலை*



வொஷிங்டன்,மே18
தெற்கு சீனக்கடலில் சர்ச்சைக்குரிய தீவுக்கூட்டங்கள் உள்ள பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் நிலக் கையகப்படுத்தலின் அளவும் வேகமும் கவலை தருவதாக உள்ளதென அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.
குறித்த பகுதியில் பதற்றத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜோன் கெரி கூறியுள்ளார். ஆனால், சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யீ, அமெரிக்காவின் கவலையை நிராகரித்துள்ளார்.
சர்ச்சைக்குரிய கடற்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் சீனாவின் இறையாண்மைக்கு உட்பட்டே நடப்பதாக சீன வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். கடந்த வருடத்தில் மட்டும் சீனா சுமார் 800 ஹெக்ரேயர் (2000 ஏக்கர்கள்) நிலத்தை கையகப்படுத்தியுள்ளதாகவும், அங்கு சீனா இராணுவ மையங்களை அமைத்து வருவதாகவும் அமெரிக்கா அஞ்சம் தெரிவித்துள்ளது. (14)

# புரூண்டியில் போரின் அவலம்

## நாட்டை விட்டு வெளியேறும் மக்கள்



புசும்புரா,மே18
ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புரூண்டியில் நிகழ்ந்து வரும் உள்நாட்டுப் போரை எதிர்கொள்ள முடியாமல் சுமார் ஒரு லட்சம் அப்பாவி மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
சர்வதேச அளவில் வறுமையில் வாடும் நாடுகளின் பட்டியலில் ஆபிரிக்காவில் புரூண்டி என்ற ஏழை நாடு உள்ளது. சுமார் ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில் கடந்த ஒரு மாதமாக அசாதாரண சூழ்நிலையே நிலவி வருகிறது. புரூண்டி நாட்டின் ஜனாதிபதி சுமார் 10 வருடங்கள் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னரும், மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தன்னைத் தானே அவர் அறிவித்துள்ளமை இதற்கு மிக முக்கிய காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.
10 வருடங்களாக ஜனாதிபதியாக ஆட்சி செய்தவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடக்கூடாது என பெரும்பாலான மக்களின் கருத்தாகவுள்ளது. ஆனால், மக்களின் விருப்பத்துக்கு செவி சாய்க்காத ஜனாதிபதிகடந்தஏப்ரல்மாதம்25ஆம் திகதி தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார் .
கடந்த 2005 ஆம் ஆண்டு முதன் முதலாக ஜனாதிபதியாக கட்சி தான் தெரிவு செய்தது என்றும் தற்போது ஜனநாயக ரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியாக பணியாற்ற விரும்புவதாகவும் அவர் தனது நிலைப்பாட்டுக்கு விளக்கம் அளித்துள்ளார். மேலும், மூன்றாவதாக தான் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் அடுத்த முறை நிச்சயமாக தேர்தலில் போட்டியிட மாட்டேன் எனவும் அவர் உறுதி அளித்துள்ளார்.
ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, புதிய ஆட்சியை உருவாக்கும் நடவடிக்கைகளும் அந்த நாட்டு இராணுவத் தளபதி தலைமையில் இரகசியமாக நடைபெற்று வந்துள்ளன. பெரும்பாலான மக்களும், தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியை விரும்பவில்லை என்றே கூறப்படுகிறது.
இந்த நிலையில் தனது ஆட்சியை கவிழ்க்க சூழ்ச்சி நிலவுவதை அறியாத ஜனாதிபதி, பக்கத்து நாடான தான்ஸேனியாவுக்கு சில பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக கடந்த 13 ஆம் திகதி சென்றுள்ளார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட இராணுவத் தளபதி தற்போதைய ஆட்சியை தான் கலைப்பதாகவும், ஆட்சி தற்போது தனது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் மறு நாள் அறிவித்தார்.
இந்த அறிவிப்பு வெளியானதும் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிக் கொண்டாடினர். ஆனால், தான்ஸேனியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை,அவரால் நாடும் திரும்பவும் முடியவில்லை. இதற்குக் காரணம், முக்கிய விமான நிலையங்கள் எல்லாம் இராணுவத் தளபதியின் கட்டுப்பாட்டுக்கள் வந்ததால் நாடு திரும்ப முடியாத சூழ்நிலையில் ஜனாதிபதி சிக்கியுள்ளார். இருப்பினும் ஜனாதிபதியின் ஆதரவுப்படையினர் மற்றும் ஆதரவு இராணுவத்தினர் மற்றும் ஆதரவாளர்களுக்கிடையே போர் ஏற்பட்டுள்ளது.
இரு தரப்பினருக்குமிடையே போர் மோசமானதால், பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாயினர். கலவரத்தில் சுமார் 25 அப்பாவி மக்களும் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, ஜனாதிபதியின் ஆதரவாளர்களின் கை ஓங்கியதால்,இராணுவத் தளபதியின் ஆட்சி கவிழ்க்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.
இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது சட்டப்பூர்வமாக செல்லும் என உயர்நீதி மன்றம் கூறிவிட்டதால் தற்போதைய ஜனாதிபதி மீண்டும் தேர்தலில் வெற்றி பெறுவது தவிர்க்க முடியாதது எனத் தெரிந்ததால், தங்களை ஜனாதிபதியிடமிருந்து காத்துக்கொள்ள மக்கள் கும்பல் கும்பலாக நாட்டை விட்டு வெளியேறி வருகிறார்கள்.
நாட்டுக்குத் திரும்பியுள்ள ஜனாதிபதி அடுத்ததாக எடுக்கும் நடவடிக்கை, அதிரடியாக இருக்கும் என அந்த நாட்டில் இருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்துள்ளன.
இந்த நிலையில் சுவிஸின் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐரோப்பிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பு, புரூண்டி நாட்டிலிருந்து சுமார் ஒரு லட்சத்து 5 ஆயிரம் மக்கள் பக்கத்து நாடுகளுக்கு தஞ்சம் கோரிச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஆனால், அவர்களுக்குத் தற்போது வரை எந்த ஆதரவும் வழங்கப்படாமல் பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் புகலிடம் எதிர்ப்பார்த்துக் காத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. புரூண்டி நாட்டை விட்டு வெளி யேறிய மற்றும் அந்த நாட்டில் உள்நாட்டு யுத்தங்களை சந்தித்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தை காக்க ஐக்கிய நாடுகள் சபை விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்ற எதிர்பார்ப்பு சர்வதேச அளவில் எழுந்துள்ளது. (14)

# பேச்சுக்களால் டொலர்களை சம்பாதித்த கிளிண்டன் தம்பதி



வொஷிங்டன்,மே18
அடுத்த வருடம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் மனைவியும், முன்னாள் வெளியுறவுத்துறை மந்திரியுமான கிலாரி கிளிண்டன் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது.
இந்த நிலையில், பில் கிளிண்டனும், கிலாரி கிளிண்டனும் கடந்த வருடம் தொடங்கி இதுவரை தங்களது பேச்சுக்கள் மூலமாக 25 மில்லியன் டொலர் சம்பாதித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இது மட்டுமன்றி, கிலாரி கிளிண்டன் எழுதியுள்ள ஹார்ட் சி சாய்சஸ் (கடினமான தேர்வுகள்) என்ற புத்தகத்துக்கு, பங்குவீத உரிமைத் தொகை 5 மில்லியன் டொலர் கிடைத்துள்ளது. (14)

# ஐ.எஸ்யின் முயற்சி முறியடிப்பு

பல்மைரா,மே18
சிரியாவின், மத்திய நகரான பல்மைராவுக்குள் நுழையும் இஸ்லாமிய அரசு ஆயுததாரிகளின் முயற்சியை அரசபடைகளும் அவர்களின் கூட்டுக்குழுக்களும் முறியடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
நகரின் பாதுகாப்பு முன்னரங்குகளை ஊடறுக்கும் ஐ.எஸ் இன் முயற்சி நேற்று முன்தினம் தோல்வியடைந்துள்ளது. புறநகர் பகுதிகளில் மோதல்கள் நடந்துள்ளன. பிரதேசவாசிகள் பலர் மோட்டார் தாக்குதல்களில் கொல்லப் பட்டுள்ளனர்.
நகரம் இஸ்லாமிய அரச தீவிரவாதிகளின் பிடியில் வீழ்ந்தால் உலகப் பிரசித்திபெற்ற பல்மைரா நகரின் தொல்பொருள் பகுதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று அஞ்சப்படுகின்றது.
இஸ்லாத்துக்கு முந்தைய காலத்து வரலாற்றுச் சின்னங்கள் மீது வெறுப்புக் கொண்டுள்ள ஐஎஸ் தீவிரவாதிகள் பல இடங்களில் தொன்மைச் சிறப்பிடங்களை அழித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)



# இருள் விலகும்....!

கொடுந்தீயினில்
வெந்தும்...
குருதிதனில் குளித்தும்...
ஆறிடா வடுக்களேந்தி
ஆழமறியா சோகத்துடன்
பொழுதின் புலர்வுக்காய்
பொருமிய விழிகளுடன்...
கையிலொரு
சொப்பின் பையுடன் !
மீண்டும்
சொந்தவூர் மீண்டோம்...!!

வீடு நிறைந்த
பொருள்களை
வீதிவீதியாய் கைவிட்டு....
உடனிருந்த உறவுகளை
ஒவ்வொன்றாய்
உதிரவிட்டு,
கட்டியகணவனோரிடமும்...
பெற்றெடுத்த பிள்ளை மறு
இடமும்!
பதைபதைக்கும்
உள்ளத்துடன் தாயும்...!
சின்னாபின்னமாய் ! இன்று
சிதைக்கப்பட்ட
குடும்பங்கள்...!!

முகாமிருள் மெல்லச்
சூழ.....
முக்காடாய் தறப்பாள்கள்
தலைமுட்ட...
வெட்ட வெளிகளில்
கொட்டும் வெயிலில்...
வெறுமனாய்ப்போன
வேதனைகள்
பட்டவேதனைகள் ! எம்மை
விட்டுப்
பிரிவதெப்போ...??
மூன்றடிக்குடிசைக்குள்
மூன்று குடும்ப வாழ்வு
மான்று போன சங்கதிகள்...
மென்றெடுக்க
யார்தான்...??

மீள்குடியேற்ற அகராதி
தட்டப்பட
மெதுவாய்ச்சிறு நகர்வு...
சொந்த மண் செல்லும்
கனவுடன்
சோபித்துப்போன
உணர்வுகள்...
இறுக்கிய இதயங்களும்...
நறுக்கிய பயணமும்
இழையோடிப்போன
ஏக்கங்களுக்கும்
சின்னதொரு
விடுதலையாய்..
சொந்த மண் மீண்டும்
புறப்பட்டோம்...
சந்தித்த வேதனைகள்
தாங்கி...!

சிந்திய
குருதியின்னும்
உறையாத ஊரின்
சந்தியில்
இறங்கினோம்...
தணலாய் வீசிய
காற்று !சற்று
தணிந்துதான்
கொண்டது.
குன்றாய்ப்போன தெருவில்
நடக்கையில்
கால்களில் சின்ன வெட்கம்
குழிகளில் குவிந்திருந்த
குருதியை விலக்கி
காணிப் பக்கமாய் திசை திரும்பின
கால்கள்....!!

வேலிகளற்று
வெறித்துப்போயிருந்த காணி...!
வெறும் சருகுகளால் குவிந்தான
முற்றம்...!
பற்றையால் பற்றிப்போன
சுற்றயல்...!
மூடிப்போன பற்றைக்குள்ளாலும்,
மூடிய விழிகளுடன்
எட்டிப்பார்த்தது
அரைகுறையாய்ப்போன வீடு...!!
கண்ணீர்த்துளிகள் புருவங்களை
கட்டியணைத்துக் கொண்டன
போரின் பிடியால் வீட்டின்
கூரைகள்
பாறிப்போயினவோ...??

வீதியின் எதிர்ப்பக்கம்
நோட்டமிட்ட கண்கள்
விதைக்கப்பட்ட
கண்ணிகளையும்...
சிவப்பு, மஞ்சள் பட்டிகளால்
சிறப்பாய் அலங்கரித்த
எல்லையையும்..
இனங்கண்டு கொண்டன....
கொச்சைத் தமிழில் தொங்கிய
பெயர்ப் பலகைகளும்...
சுடுகாடாய்ப்போன ஊரில்
சுதந்திரம் தான் இதுவா...?

அரிதட்டாய்ப் போய்விட்ட
சுவர்களும்...
எரியூட்டப்பட்ட
மாட்டுத்தொழுவமும்....
உலையேற்றிய அடுப்படியின்
அடிச்சுவடே இல்லை...!!
குலைகுலையாய்க்காய்த்த
தென்னைகள்
குலையிருக்க வட்டின்றி
தாம் பட்டதுயர் சொல்லின...!
குந்தியெழுந்த வாசற்படியில்
சிந்தியிருந்த குருதிக் கறையும்...
நிழலாறிய வேம்பு!இன்று
நிழல்மறைத்து நிர்க்கதியாய்...

பாட்டியுடன் கதை பகிர்ந்த
பலாவுமில்லை; பாட்டியுமில்லை...

கசிந்த விழிநீரை கசக்கியபடி
மெல்ல நடந்தேன்...
கிணற்றிலிருந்த நீர்
வற்றிப்போயிருந்தது
குலையாய் கனியிறைத்த
மாமரம் ! இன்று
குரங்குகளின்
இருப்பிடமாய்ப்போனது...
பாதையேயின்றி
பற்றைக்குள்ளால்
பரபரத்தன என் பாதங்கள்...!
குமிறிடும் நெஞ்சத்துள்
கொதிக்கும்
குழம்பாய்போன
வேதனைகள்...
பசுமைக்கே இடமின்றி
பாலைவனமாயான காணி...!
போரின் பதிவுகளை
பதித்திருந்த
பக்கத்து வீடு என்
பார்வையில்...
இந்த வீட்டின்
கதையாய்த்தான்
இடிந்த நிலையில் அந்த
வீடும்...
கரடு முரடான காணியில்
முட்கள் மீதேறிய
பயணமாய்...!

ஏக்கங்கள் நிறைந்த நெஞ்சில்
இனி நிறையத்தான்
எதுவோ...??
சருகாய்ப்போன எம்வாழ்வு
சிரித்திடுவதெப்போ...?
சிதறுண்டு கிடந்த ஓட்டுச்
சிதறல்களை
ஓரமாய்
ஒதுக்கிக்கொண்டேன்
படர்ந்திருந்த செடிகளில்
பரவியிருந்த
பகட்டுமுட்கள்
பாதங்களைத்தைத்தன...
நான் படுத்தெழுந்த புற்பாய்...
நெருப்பில் வெந்தபடி
ஓர்மூலையில்...!
கண்கள் சிந்திய நீரால்...
கழுவியானது நடு அறை....
தோளிருந்த கசங்கிய
துண்டினால்
போர்த்தப்பட்டது நிலம்...
செல்லச்சரிந்து
கொண்டேன்...
நடு அறையில் கிடந்தவாறே
நடு நிசியிலும் வானம்
நன்றாய்த்தெரிந்தது
இருள் சூழ்ந்த வானில்
மின்மினியாய்..
சந்திர நகக்கீற்று மெல்லச்
சஞ்சரிக்க...
கவிந்திருந்த காரிருள்
மெல்ல... மெல்ல
வழிவிட்டபடி....

*மல்லாவிக் கஜன்*



# கறுப்பு வைகாசி

கறைபடிந்த கறுப்பு வைகாசி மாதம்
முள்ளி வாய்க்காலில் முடிந்த அவலம்
முட்கம்பி வேலிக்குள் முடக்கம்
வல் வளைப்பால் எரிந்த வன்னிமண்

சர்வ தேசத்தின் உதவியுடன் நடந்த சங்காரம்
மனிதாபி மானப் போர் என்ற போர்வையில்
மஹிந்த அரசு செய்த மனிதப் படுகொலை
இரத்த வாடை வீசிய புத்த தர்மம்

வான் குண்டு வீச்சுகளால் வகைதொகையின்றி மாண்டோர்
கொத்துக் குண்டுகளால் கொலையுண்டு போனவர்கள்
பொஸ்பரஸ் குண்டுகளால் புகைந்து மடிந்தவர்கள்
எறிகணை வீச்சுகளால் எரிந்து சாம்பரானவர்கள்

தாயில்லைத் தந்தையில்லை தன்சுற்ற மெல்லாம் சாவு
அநியாயக் குண்டுவீச்சால் அங்கங்கள் இழந்த் வாழ்வு
கைகால் இழந்தவர்கள், கருகி மாண்டவர்கள்
எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய்ச் செத்தவர்கள்

மார்பில் குடித்த பால் மரணப் பாலாகவே
மாதாவுடன் சேர்ந்து மரணித்த குழந்தைகள்
தண்ணீர் கிடைக்காத உப்புக் கடலோரம்
தாகத்தால் நாவறண்டு செத்தவர்கள் எத்தனையோ

சரணடையப் போனோரையும் சங்காரம் செய்தார்கள்
வல்லுறவு செய்து வதைத்துக் கொன்றார்கள்
இறந்த தமிழ்ப் பெண்களையும் நிர்வாணமாக்கி
இன்பம் அனுபவித்த இனவாதப் பேய்கள்

இலட்சத்துக்கு மேல் உயிர்களை நாசம் செய்த படைகள்
கொத்துக் கொத்தாய் கொன்று குவித்த கொலைவெறி
வைகாசி
முள்ளி வாய்க்கால் என்பது முடிவல்ல ஆரம்பம்
உயிர்கள் அழிந்தாலும் தமிழர் உரிமை அழிவதில்லை

*கந்த பேரின்பம் காவலூர்க் கவிஞன்*

# முள்ளிவாய்க்கால் முறிந்த பனை



அலை அலையாய் மக்கள்
கூட்டம் அலைமோதும்
காட்சிகண்டேன்
அலைந்துவந்த மக்கள்கூட்டம்
அத்தனையும் பிணமாகக்
கண்டேன்
எத்தனையோ காலமாக
ஏற்றிவைத்த தீபமெல்லாம்
ஏரிக்கரை ஓரமாக ஏன்
மறைந்து போனதையா?

வயல் வளர்த்து கொடுத்த
கைகள் வயிற்றுக்காய்
துடித்ததையா
வயல்வரப்பு கரை எங்கும்
வயிறு வற்றி மடிந்ததையா
கையேந்தி குழவிதனை
காததூரம் பொடிநடையாய்
காது இரண்டும் பசி அடைக்க
களைப்புடனே நடந்த அன்னை
குண்டுபட்டு குடைசாய்ந்து
குற்றுயிராய் துடிக்கையிலும்
குழவிதனை மார்பணைத்து
குடுத்துப்பால் குடைசாய்ந்தாள்

பார்த்து நின்ற உலகமெலாம்
பார்வையாளராக நிற்க
பக்கத்து நாடு கூட பாய்ந்து
வந்து கொன்றதையா

பார்த்துவிட்டேன்
என்றதனால் பறவை கொண்டு
குண்டடித்து
பாதியாக் எனை உடைத்து
பட்ட பனை ஆகிவிட்டேன்.
பட்டபனையாகி நான்
பாதியாகப்போனாலும்
பாரிற்கு சாட்சியாக பாதியாக
காத்திருப்பேன்
முள்ளிவாய்க்கால் வயல்
வெளியில் முடியும்வரை
முறிந்த பனை.

*மதுமிதன்*

கு.நிறோஜன்

# போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்



# மீளும் நாள் வருமா?

போர் இறுதிக் கட்டமான 2009 இல் இதே மாதத்தில் எண்ணுக்கணக்கற்ற பொது மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம், பொது மக்கள் மத்தியில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தத் தாக்கம் உளத் தாக்கத்தையும் அவர்களது வழமையான செயற்பாடுகளையும் பாதித்துள்ளது என்று உளவியல் நிபுணர்களும், மருத்துவர்களும் ஏன் நேரடியாகப்பாதிக்கப்பட்டவர்களும் கூட கூறியிருக்கிறார்கள். அந்தப் பாதிப்பிலிருந்து அவர்கள் மீண்டுவிட்டார்களா? என்றால் அதற்கான பதில் இன்னும் இல்லை என்கிறார் உளமருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

அத்தகையவர்களுக்கு தீர்க்கமான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டதா? அது அவர்களுக்குப் போதுமானதா? ஏன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை? அவர்களுக்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தி அதனைச் செய்விக்க வேண்டும். அப்போது தான் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களைப் பாதுகாக்க முடியும்.

எந்த வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் ஒரு இடரில் இருந்து மீண்டு வருபவர்களுக்குஉள,சமூகரீதியான புனர்வாழ்வு வழங்கப்பட வேண்டும் என்பது அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இறுதிப் போர்க் காலத்தில் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அந்த உளசமூகப் பணிகள் வழங்கப்பட்டனவா என்ற கேள்விக்கு இல்லை என்ற பதிலே தெட்டத்தெளிவாகக் கிடைக்கிறது என்கிறார் தயா சோமசுந்தரம். போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல ஏனைய வழிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர் உளவள ஆற்றுப்படுத்தல்களை மேற்கொண்டு வருகிறார்.

போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு இன்றுடன் 6 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. போரினால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு பாதிப்பிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் என்ன என்ற கேள்வி எழுகிறது. முன்னைய அரசு ஆட்சியில் இருக்கும் வரைக்கும் அத்தகைய நல்ல செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பிட்டு ஒரு வீதமாவது பணிகளைச் செய்ய முடிந்ததா என்றால் அதுவும் இல்லை என்று கூறுமளவுக்கு நிலைமை காணப்பட்டது. எமது மக்களுக்கு அத்தகைய செயற்றிட்டத்தைச் செய்ய முன்னைய அரசு விரும்பவில்லை. பாதிக்கப்பட்ட எமது மக்களைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அரசிடம் இருந்திருக்கலாம்.

ஆனால் தற்போதைய புதிய ஆட்சியில் அந்தச் சிக்கல் இதுவரை இருக்கவில்லை. எனவே அதனைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும். அண்மையில் ஏற்கனவே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் முன்னெடுக்காத பல நடவடிக்கைகளையும் இனி விரைந்து செயற்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்கள் மீள்வார்கள்.

**கிரியை**

உயிரிழந்தவர்களுக்கான கிரியைகள் நடத்தப்பட வேண்டும். கொல்லப்பட்டவர்களை நினைவு கூர முன்னர் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. ஆனால் என்ன அடிப் படையிலாவது உயிரிழந்தவர்களை அவர்களது குடும்பத்தினர் உறவுகள் நினைவு கூர வேண்டும். அது அவர்களுக்கு மிகப் பெரிய ஆறுதலைக் கொடுக்கிறது.

மக்களைப் பொறுத்த அளவில் சமூக மட்டத்தில் கிரியைகள், கலாசார நிகழ்வுகள், கதைகள், நாடகங்கள், கூத்து என்பனவற்றினூடாக அவர்களது உணர்வு வெளிப்படுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு தமிழ் மக்களிடம் சிறந்த வரவேற்புண்டு. அதிக ஈடுபாடும் உண்டு. இவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டும். ஒப்பாரி வைத்து அழுவது, அவர்களது கவலைகளை ஆற்றுப்படுத்துகிறது.

**நினைவுகூரல்**

சுனாமி பாதித்தபோது மேற்கொள்ளப்பட்ட உள சமூக வளப்படுத்தல் வெற்றியைக் கொடுத்தது. அதனை முழுமையாகச் செயற்படுத்த பின்னர் வந்த போர்ச்சூழல் தடையாகி விட்டாலும் கூடுதலான பணிகள் செய்யப்பட்டுவிட்டன. அவ்வாறு செய்ததுபோன்று போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் செய்ய வேண்டும். அதில் உள சமூகப் புனர்வாழ்வும் கட்டாயம் வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுடன் ஏனையவர்கள் அன்பாக, ஆதரவாகக் கதைக்க வேண்டும். மற்றையவரின் கதைகளைக் கேட்கவேண்டும். அது மிகப்பெரிய ஆறுதல்.

முன்னைய அரசு நினைவு கூரலுக்குத் தடை விதித்திருந்தது. முன்னர் நடந்த போர், இடம்பெயர்வு, முகாம் அவல வாழ்வு, உறவுகள் கொல்லப்பட்டதை, பிள்ளைகள் காணாமற்போன விடயங்களை மறுக்க முடியாது. மறக்கப்பட முடியாது. என்னதான் அதிகாரத் தோரணையைக் கைக்கொண்டு அதனை மறந்திடுங்கள் என்று கட்டாயப்படுத்திச் செய்வித்தாலும் மக்கள் ஒருபோதும் மறக்கப் போவதில்லை. ஏனெனில் அவற்றை அவர்களால் மறக்க முடியாது. எனவே அதனை ஓரளவாவது உணரச் செய்ய வேண்டும். அந்தநாள் ஞாபகங்களை அவர்கள் மீளக் கொண்டுவர வேண்டும்.

**வேலைப்பயிற்சி**

பாதிக்கப்பட்டவர்கள் எதுவுமற்று இருக்காது அவர்களுக்கான வேலைகள், பணிகள் ஏதாவது ஏற்படுத்தப்பட வேண்டும். சும்மா இருந்தால் மோசமான நிலைமைக்கு இட்டுச் செல்லும். அதற்கு இடம்விடக் கூடாது. அவர்களுக்கு உள ஆற்றுப்படுத்தல் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். பல குடும்பங்களில் பொருளாதார நிலை காரணமாக வறுமை தலைவிரித்தாடுகிறது. வறுமை இருந்தாலும் அதுவும் மனப் பாதிப்பையே கொடுக்கும். வறுமை நீங்காது செய்யப்படும் ஆற்றுப் படுத்தல்கள் அவர்களை விரைவில் ஆற்றுப்படுத்தும் நோக்கத்தைத் தடை செய்யக்கூடும்.

போரினால் வலுவிழந்த பலர் உள்ளனர். அவர்களைக் கவனிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அதனைச் செய்ய வேண்டும். அவர்களைக் கவனிப்பது, எப்படிச் சுத்தமாக வைத்திருப்பது பற்றிய பயிற்சிகளைக் கொடுக்கலாம். அங்கவீனமானவர்கள் வாழ்நாள் முழுவதும் அப்படியே இருக்கவேண்டியுள்ளதனால் அது முக்கிய மானது. அந்தப் பயிற்சிகளை வழங்கிச் சான்றிதழும் வழங்கலாம். அதற்குப் பயிற்சி அழிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

**கல்வி**

கல்விக்கு முக்கியம் கொடுப்பவர்கள் எம்மவர்கள். அதனை அங்கு சீராக்க வேண்டும். கல்வி சில பேருக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் சில வருடங்களைப் போரினால் இழந்து விட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய கல்வி வேண்டும்.

தமிழ்க் கலாசாரத்தின்படி விதவைகள் ஒதுக்கப்படுகின்றனர். பெண்கள் ஒன்று சேர்வது முக்கியம். அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும். ஊரில் உள்ள பல உறவுகள் சின்னாபின்னமாகியுள்ளன. அவை மீளக் கட்டிணைக்கப்பட வேண் டும். முன்னைய நல்ல நிலைக்கு அவர்களைக் கொண்டுவர வேண்டும்.

**சாந்த வழிமுறைகள்**

சாந்த வழிமுறைகள் கட்டாயம் வேண்டும். அதனை ஒவ்வொருவரும் செய்யலாம். அதனை செய்யத் தூண்ட வேண்டும். இந்துக்கள் யோகாசனம் செய்வது போன்று ஒவ்வொரு சமயத்தவருக்கும் விரும்பிய சாந்த ஆசனங்களையும் செய்ய வேண்டும். சமயம் சார்பானதாக அன்றி அனைவரும் அனைத்து வகையான சாந்த வழிமுறைகளையும் செய்யலாம். பாடசாலைகளில் கட்டாயம் அதனைச் செய்ய வேண்டும். அதற்கு அமைச்சு மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அது நம்பிக்கை, மனஆறுதலை, திருப்தியை ஏற்படுத்துகிறது. பல பாடசாலைகள் அதனைக் கேட்டுள்ளனர். சில இடங்களில் அது நடக்கிறது. ஆனால் விரிவுபடுத்தப்படவில்லை.

**ஆற்றுப்படுத்தல் அறிவு**

ஆற்றுப்படுத்தல் பற்றிய அறிவு சகலருக்கும் கிடைத்தால் தம்மைத் தாமே கவனித்துக் கொள்வர். அது பற்றிய அறிவூட்டல்கள் ஏற்கனவே வழங்க ஆரம்பிக்கப்பட்டாலும் போதுமானதாக இருக்கவில்லை.

**உளவியல் அறிவு**

ஆசிரியர்களுக்கு உளவியல் சார்ந்த அறிவு இருக்க வேண்டும், அதனை அதிகப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் உளநல சேவையாளர்களைத்தேடி அலைய வேண்டியதில்லை. உளவியல் என்பது கஷ்டமானதொன்றல்ல. பொறுமையாக நின்று ஒவ்வொருவரது பிரச்சினைகளையும் கேட்க வேண்டும்.

**நம்பிக்கை**

ஊர் என்ற உணர்வு போய்விட்டது. குடும்பச்சிதைவும் இதற்குக் காரணமாகி விட்டது. தனிக்குடும்ப அமைப்பும் அதற்குக் காரணம். நம்பிக்கைகள் விழுமியங்கள் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சில குறுந்திரைப்படங் களும்; குடும்பக் கட்டமைப்பைச் சீர்குலைக்கிறது. பதிலாக நல்ல நாடகங்கள், விடயங்களைப் பார்க்க வேண்டும்.

ஆற்றுப்படுத்தும் சக்தி கலைஞர்களிடமும் இருக்கிறது. நாடகங்கள், தெருநாடகங்களுக்கு அந்த சக்தி உண்டு. அதனைக்கட்டியெழுப்ப வேண்டும். கலாசாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**நிதி**

ஆற்றுப்படுத்தலுக்கான நிதி உதவி போதாதுள்ளதாகத் தயா சோமசுந்தரம் கூறுகிறார். நாடகங்களை ஒழுங்குபடுத்த, தெருநாடகங்கள் நடத்த, விழிப்புணர்வு நடவடிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் அச்சிட பணம் தேவை. எனவே நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

**இராணுவ பிரசன்னம்**

வன்னியில் மருத்துவர் போனால் இராணுவப் புலனாய்வாளர்களின் தொல்லை உண்டு. ஒரு ஆற்றுப்படுத்தல் நிகழ்வு ஏற்பாடு செய்தால் மக்கள் வருகிறார்களோ? இல்லையோ? அவர்கள் வந்துவிடுவார்கள். அது மக்களுக்கு எப்பொழுதும் மன உளைச்சலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இராணுவத்தினர் வருமானம் பெறும் சில தொழில்களை நடத்துவது மக்களுக்குக் குழப்பம். அவர்களது நிறுவனங்களில் பெண்கள் வேலைசெய்வது குடும்பங்களுக்கிடையே சண்டை சச்சரவு வருகிறது. அதுவும் ஒரு தாக்கம். இராணுவத்தினரின் செயற்பாடு அங்கு தேவையில்லை. அவர்கள் நடத்தும் தொழிற்சாலை ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. அதுவும் மற்றொரு தாக்கம் என்கிறார் தயா சோமசுந்தரம்.

எல்லாம் உளவளத் துணை என்றில்லை. உளசமூகச் செயற்பாடுகளே. சில வருடங்களுக்கு மக்களை வளிப்படுத்தி விட்டால் அவர்கள் தாமாகவே தம்மைப் பாதுகாக்கும் நிலை வந்துவிடும். அந்த ஆரோக்கிய தன்மையை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். தற்போதைய அரசியல் சூழலை அதற்கேற்றாற் போல அனைவரும் இணைந்து கட்டாயம் செயற்படுத்த வேண்டும்.

## நிலைத்து நிற்க வேண்டும் வைகாசி பதினெட்டு

*கண்ணில் கண்டதை*
*நெஞ்சில் நிறைந்ததை*
*எண்ணம் மறக்குமா*
*துன்பம் நீங்குமா*
*துயரம் போகுமா*
*வாழ்ந்த இடமும்*
*நடந்த மண்ணும்*
*திறந்த படலைகளும்*
*பார்த்த முகங்களும்*
*கண்முன்னே கதறின*

*என்ன செய்வது ஏது செய்வது*
*வீரம் நிறைந்த நெஞ்சம்*
*வெஞ்சமரில் வீழ்ந்து மடிந்தன*
*வெட்டிய பங்கருக்குள்*
*பதுங்கிய நாள்களும்*
*ஓட ஓட விரட்டிய*
*துப்பாக்கிச் சன்னங்களும்*
*எந்தன் நெஞ்சை விட்டகலா*
*நினைவுகள் தான் மறக்குமா*
*அவித்த பருப்பும் வேகாத சோறும்*

*அள்ளிப்போட்டதை வயிறு*
*மறக்குமா*
*ஒரு கிலோ சீனிக்காக*
*ஒரு சைக்கிள் கொடுத்ததும்*
*கஸ்டசி நேரத்தில் கஞ்சிக்*
*கலைந்ததும்*
*சாதி பேதங்கள் எல்லாம்*
*மறந்ததும்*
*உயிர் ஒன்றே தான்*
*வேண்டுமென நினைத்ததும்*

*ஏழை பணக்காரன்*
*பேதங்கள் இல்லாததும்*
*ஓட ஓட கொத்துக்*
*கொத்தாய்*
*உயிர்கள் பறந்ததும்*
*என்றென்றும் என் நெஞ்சம்*
*மறக்குமா?*
*கையிழந்து காலிழந்து*
*மெய்யெல்லாம்*
*புண்ணிழந்து*

*முள்ளிவாய்க்காலில்*
*முழுவதும் அழித்தனர்*
*கொன்று குவித்தவர்*
*குதூகலித்து மகிழ்ந்தனர்*
*உறவுகளை நினைக்காதீர்*
*உத்தரவு போட்டனர்*
*நடந்தது என்ன?*
*அதிகாரம் என்றும்*
*நிலைக்குமா*
*காமாந்தக் காரனின்*
*கணக்கு தப்பானது*
*கண்மூடித் திறப்பதற்குள்*
*கலைந்தது அவன் கனவு*

*களத்தில் மடிந்தவரை*
*நினைத்திடுங்கள்*
*வைகாசி பதினெட்டு*
*வையகம் உள்ளவரை*
*நிலைத்து நிற்க வேண்டும்*
*அவர்கள் ஆத்மா*
*சாந்தியடையட்டும்*
*அநியாயக் காரரை*
*அழிக்கட்டும்*
*அவர்கள் சாபம்*

குலனையூர் பாவரன்
வவுனியா

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொடும் போரில் உயிர்நீத்த அனைவருக்காகவும் அஞ்சலி

மனிதர்கள் இறந்த பின்னர் என்னவாகிறார்கள்? உயிர் அற்ற உடலுக்கு என்ன ஆகும் என்பது உயிரோடு இருப்பவர்களுக்குத் தெரியும். ஆனால் உடலில் இருந்து உயிர் பிரிந்ததன் பின்னர் அந்த உயிருக்கு என்ன நடக்கும் என்பது விஞ்ஞானபூர்வமாக இன்னமும் நிரூபிக்கப்படவில்லை.

இருந்தாலும் உலகியலில் பல்வேறு சமயங்களிலும் மனிதனின் உயிர் பிரிந்த பின்னர் அதற்கு என்ன நேர்கிறது என்பதற்கு அந்தந்த சமயங்களின்படி விளக்கங்களும் உண்டு.

சாதாரணமாக மனிதர்கள் தாம் பூமியில் இருக்கும்போது செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்ப சொர்க்கம் அல்லது நரகத்தை அடைகிறார்கள் என்பது பொதுவான நம்பிக்கை. இதில் அவர் அவர் உயிர் துறக்கும் முறை அல்லது காலத்தையொட்டி அவர் அவரின் உயிர் உடலில் இருந்து பிரிந்தாலும் அது போய்ச்சேர வேண்டிய காலம் வரும் வரை பூமியில் ஆவி நிலையில் தங்கியிருக்கும் என்று இந்து சமயத்தவர்களில் பெரும்பாலானவர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை இன்று நேற்று தோன்றியதன்று. யுகயுகாந்திரமாகவே நினைவுக்கு முந்திய காலத்திலிருந்து வருவதாகும். அதனால் தான் இறந்துபோன உறவினர்களின் ஆன்மாக்கள் நற்கதியடைய வேண்டும் என்பதற்காக பிதிர்க்கடன் என்ற வகையில் சமய சடங்குகளையும் நினைவு கூரும் நிகழ்வுகளையும் நடத்துகிறார்கள்.

கிறிஸ்தவர்களும்கூட இறந்த தம் உறவுகளை நினைவு கூரும் வகையில் வருடந்தோறும் குறிப்பிட்ட ஒரு தினத்தில் சமய சடங்குகளை மேற்கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில்தான் இன்று உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் இலங்கையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் அன்றைய ராஜபக்ஷ அரசின் இராணுவத்தினரால் அரக்கத்தனமாக எண்ணிறந்த வகையில் எம் மக்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூர்ந்தும், அவலமாகக் கொல்லப்பட்ட அவர்களின் இன்னுயிர்கள் நற்கதியடையவும் நிகழ்வுகளை நடத்துகிறார்கள்.

இறந்தவர்களை நினைவு கூர்வதும் அவர்களின் ஆன்மாக்கள் அமைதியடைய சமயச் சடங்குகளை நடத்துவதும் மனிதஉரிமை -- அதைவிட தமிழ் மக்கள் இதனை தமது சமய சம்பிரதாயமாக மட்டுமன்றி இயற்கைக்கு மாறாக துடிக்கத் துடிக்க கொல்லப்பட்டவர்களின் உயிர்கள் தொடர்ந்து பூமியில் அமைதியிழந்து திரியாமல் சாந்திபெறவும் பிதிர்க்கடன் என்ற வகையில் ஆத்மசாந்தி பூஜைகளை நடத்த கடமைப்பட்டுள்ளார்கள். எனவே இன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் மட்டுமின்றி தமிழர் வாழும் இடமெல்லாம் கண்ணீர் சிந்தியும் கதறி அழுதும் தம் வேதனைகளை வெளிப்படுத்துகிறார்கள். ஒளியேற்றி உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களின் ஆன்மாக்களுக்காக இறைவனை வேண்டுகிறார்கள்.

இவ்வாறு நினைவுகூர்வதை முன்னைய அரசு முழுமையாக தடுத்து நிறுத்தி கொடுமை புரிந்தது. இந்த அரசில் உள்ளவர்கள், முக்கிய அமைச்சர்கள், பிரமுகர்கள், பொலிஸ் பேச்சாளர் போன்றோர் உறவுகளை நினைவு கூரலாம். ஆனால் தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தை நினைவு கூர அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

புலிகள் இயக்கத்தில் போராடியவர்களும் இந்த நாட்டு மக்களின் புதல்வர்களே. அவர்களின் உயிர்கள் அமைதி அடைய அவர்களின் உறவுகள் அங்கலாய்க்கவே செய்வார்கள். அந்த வகையில் புலிகள் இயக்கமென்றில்லாமல் போரில் உயிர் துறந்த அனைவருக்குமாக விளக்கேற்றலும்; பிரார்த்தனைகள் நடத்துவதும் பொது நிகழ்வுகளாக அமைவது பொருத்தமாக இருக்கும்.

இதில் அரசியல் நோக்கமிருக்க முடியாது. இறுதிப் போரில் கொல்லப்பட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து நடத்தப்படும் நிகழ்வுகள் ஆர்ப்பாட்டமின்றியும் அமைதியாகவும் அவர்களின் ஆன்மாக்கள் நிலையான பேறு பெறும் முகமாகவும் நடத்தப்படுவது அவசியம். அதுவே இன்று நாம் அவர்களுக்குச் செய்யும் -- அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கான அஞ்சலி -- கட்டாய கடமையுமாகும்.

# நெஞ்சம் மறக்குமா அந்த நாள்களை?

● சோபனா



வருடங்கள் ஆறையும் கடந்து விட்டன. அன்று நடந்தது கனவா அல்லது நனவா என்று இப்போது நினைக்கத் தோன்றுகிறது. 'மே. 18' வன்னி மக்களின் வம்சத்தை அளித்த நாள். கண்ணீர் வெள்ளத்தில் பிணங்களின் நடுவில் துயர் கழிந்த நாள். 'அம்மா ஐயோ!' என்றோ அழுகுரல்கள் ஓங்கி ஒலித்த நாள். யாருக்கு யார் ஆறுதல் சொல்வதென்று தெரியாது தவித்த நாள். மடிந்த உயிர்களை பிரிந்து, மிதித்து உயிரைக் கையில் பிடித்து தப்பிய நாள். மாண்டவர்கள் எம்மை விட்டுப் போய் விட்டார்கள். இப்போது அதிலிருந்து மீண்டவர்கள் மட்டும் துயரத்துடன்.

தமிழ் இனத்தை வேரோடு இல்லாது ஒழிக்கும் கொலைக்களம் முடிந்து இன்றுடன் ஆண்டு ஆறையும் தொட்டது. ஆனால் மாறாத வடுக்கள் மீண்டெடுழுந்த, உயிர் தப்பிய எம்மவர்களுக்கு மட்டும். போர் வெற்றிக் களிப்பில் கொன்று குவித்த இராணுவம் இன்னும் எமது கண்முன்னே.

கொலைக்களத்தில் அடுக்கடுக்காய் வந்து விழுந்த குண்டுகளில் துடி துடிக்க கண் முன்னே மடிந்த உயிர்கள் எத்தனை. 'இயேசுவே எம்மைக் காப்பாற்றும், எம்மை காத்தருளும்' என்று மன்றாடிய உயிர்களை ஒரே தடவையில் எத்தனை கொத்துக் குண்டுகள் அள்ளிச் சென்றன. குண்டுகளில் தப்பித்து உயிரைக் காப்பாற்றுவதா, உணவில்லாமல், தண்ணீர் இல்லாமல் தவித்து உயிரை மாய்ப்பதா என்றபோராட்டம் ஒருபுறம். ஆம்! மே 18 தந்த நினைவுகளில் ஒன்று என்னுடன் இருந்த அன்புத் தோழி அவள். மாமா என்றால் அவளுக்கு ரொம்பப்பிடிக்கும். 'தமிழர்களின் பிள்ளைகளுக்குகெல்லாம் அவர் தான் மாமா என்ற உறவு'. தாய் தந்தையை இழந்த அவள் சிறு வயதில் இருந்து மாமாவின் வழிகாட்டலில் இயங்கிய செஞ்சோலையில் வளர்ந்தவள் அவள். செஞ்சோலையில் பிள்ளைகள் எல்லோரும் அவரை மாமா என்று தான் அழைப்பார்கள். நாங்கள் அவரை நேரடியாகப் பார்த்ததில்லை. ஆனால் எனது தோழி அடிக்கடி அவரைப் பார்த்திருக்கிறாள். போர் இடப் பெயர்வின் போது அவளை எனக்குச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.

என் அன்புத் தோழி அவள். மாமாவின் வளர்ப்பு என்பதால் அவளுக்கு வன்னி மண் மீது ஒரு பிடிப்பு. சிங்களவர்கள் மீது அவளுக்கு வெறுப்பு. 'என்ர கையால ஒரு சிங்களவனை எண்டாலும்..... வேணும்' அவருடைய ஆதங்கம் அது. அவளுக்கு இருந்த தைரியம் எனக்கு இருக்கவில்லை. ஆனால் எனக்கு அவளுடன் சேர்ந்த பின்பு ஒரு ஆர்வம். மே 18 நெருங்கிக் கொண்டிருந்தது. போர் உச்சக்கட்டம். இன்று போருக்குப் போனவர்கள் நாளை உயிருடன் இல்லை என்ற நிலை. எனது தோழியுடன் இருந்தவர்களில் சிலர் சாவைத் தழுவி விட்டதாக தினமும் என்னிடம் கூறுவாள்.

புதுமாத்தளனில் எங்கள் உயிர்களின் தஞ்சம் ஒரு கூடாரத்துக்குள் இருந்தது. வானத்தை மறைப்பதற்காக ஒரு தறப்பாள். உள்ளுக்குள் இருந்தது பதுங்கு குழிகள் அது தான் எங்கள் கூடாரமாக இருந்தது. தூக்கம் இல்லை. உணவில்லை. பதுங்கு குழிகளுக்குள் வாழ்க்கை என்ற நிலையில் புது மாத்தளனில் எங்கள் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. இரு நாள்கள் மட்டும் தான் அந்தக் கூடாரமும் எங்களுக்கு தஞ்சம் கொடுத்தது. எனது நண்பியுடன் நான் ஒட்டிக் கொண்டதால் எனக்கு கொஞ்சம் துணிவாய் இருந்தது. மாமாவின் பிள்ளைகள் என்ற மதிப்பு, துணிவு. குண்டு மழைகள் காதுகளைக் கிழித்து ஒவ்வொரு கூடாரங்களையும் கிழித்துச் சின்னா பின்னமாக்கின. கடற்கரை மணலில் வெட்டப்பட்ட பதுங்கு குழிகள். குண்டுகளின் சத்தத்துக்கே தாக்குப் பிடிக்கவில்லை. மண்ணோடு மண்ணாக பதுங்கு குழிகளுக்கும் மாண்டவர்கள் பலர். கண் முன்னே பார்த்த கொடுமைகள் அவை. தோழியின் குழுவுடன் எங்களுக்கும் ஒரு பதுங்கு குழி. எங்களை ஏதோ தாண்டித் தாண்டி தான் குண்டுகள் தாக்கின. குண்டுகள் வெடித்த சிதறல்கள் எங்களது பதுங்குகுழியையும் உரசிப் பார்த்தன. குண்டுகளின் சத்தத்தின் மத்தியிலும் கடவுளிடம் மன்றாட்டங்களில் பலர். அழுகுரல்கள் ஒருபுறம். மன்றாட்டங்கள் ஒருபுறம் என அன்றைய நாள். இயற்கை உபாதைகளைக் கூட அடக்கி அடக்கி திக்கு முக்காடி உயிரைப்பிடித்த உயிர்களும் கடைசியில் குண்டுகளால் சாவடைந்தனர்.

எனது தோழியும் அன்று என்னை விட்டு பிரிவால் என்று நான் நினைத்திருக்க வில்லை. என்னுடனே இருந்த அவள் மட்டும் போக நான் மட்டும் உயிர் தப்புவேன் என்று நான் நினைக்கவில்லை. ..... கொல்லும் வெறியுடன் இருந்த அவளுக்கு அப்போது தான் (வயது16) . மாமா வின் பிள்ளை. வயதுக் கட்டுப்பாட் டால் போருக்கு அவளால் போக முடியாது. அதனால் தான் அன்று அவள் என்னுடன் பதுங்கு குழிக்குள் தஞ் சம் அடைந்திருந்தாள். கடைசியாக அவள் என்னுடன் எதுவும் பேசவில்லை. எனக்குச் சரியாகப் பசிக்குதடி அதைத் தான் அவள் கடைசியாகச் சொல்லி இருக்க வேணும். எங்கிருந்தோ வந்த குண்டின் சன்னம் அவள் வயிற்றை கிழித்துக் கொண்டு மண்ணில் விழுந்தது. 'ஐயோ மாமா' கடைசி வார்த்தையுடன் அவள் மூர்ச்சையானாள். எனது தோழியை அன்று எனது கண் முன்னே பறி கொடுத்தேன்.

அவளுக்காக அழுவதா? எனக்காக அழுவதா? அல்லது என் கண் முன்னே கிடந்த பிணங்களைப் பார்த்து அழுவதா. கண்ணீரும் இறுதித் தருணத்தில் ஓய்ந்து விட்டது. குண்டு கிழித்து மடிந்த அவளை அந்தப் பதுங்கு குழிக்குள்ளே கிடத்தி மண்ணை அள்ளி மூடி விட்டு. நாங்கள் இன்னொரு பதுங்குகுழிக்குள் தஞ்சம் அடைந்தோம்.

இது ஒரு காட்சி தான் இதைப் போன்று எத்தனை காட்சிகள். நடந்தவை கனவா அல்லது நனவா என்று இப்போது நினைக்கத் தோன்றுகிறது.

மே18 பிணங்களின் நடுவில் கொலைக் களம் உச்சக்கட்டம் அடைந்த நாள். ஆண்டு எத்தனை கடந்தாலும் அந்த நாள் தந்த துயரங்கள், சம்பவங்கள், நினைவுகள் எம்மை விட்டுப் போவதில்லை. அந்த நாள் தந்த வடுக்களுடன் இன்னும் உயிர் துடிக்கும் உயிர்கள் எத்தனை எம் மத்தியில். இந்த ஆறாத் துயரம் எல்லாம் வன்னி மக்களுக்கு மட்டுமே உரித்தானது. மீண்டவர்கள் வடுக்களை மறைக்க எத்தனை அபிவிருத்திகளைச் செய்தாலும் உள்ளுக்குள் எரிந்து கொண்டிருக்கும் துயர நெருப்பை எவராலும் அணைத்துவிட முடியாது.

எனது தோழியைப் போன்று தங்களது கூடப்பிறந்த உயிர்களையும், பெற்ற உயிர்களையும் கண்முன்னே பறி கொடுத்த எமது உறவுகள் எத்தனை. இத்தனை துயர்களையும் தந்த அந்த நாளை எம்மால் எக்காலத்திலும் மறக்க முடியுமா?

## வரவிருக்கும் சந்ததியை வாழவிடுங்கள்...

மனம் போல வாழ்ந்து மகிழ்ந்திருந்த காலமதில்
போரெழுந்து ஊரூராய் புலம்பெயர தள்ளப்பட்டோம்
நாமிருந்த வீடிழந்து நடுத்தெருவில் நாதியற்று
நடைபிணமாய் எம்வாழ்க்கை நகர்ந்ததுவே நாளுமங்கே...

தினந்தோறும் ஒரு ஊரில் கழிந்ததுவே எம் வாழ்க்கை
திசைக்கொன்றாய் பிரிந்தனவே திரண்டிருந்த சொந்தங்களும்
அலைகடலில் அலைப்புற்ற சிறு துரும்பாய் ஆனோமே
ஆற்றுவதற்காருமின்றி அழுகையுடன் இருந்தோமே...

ஈற்றினிலே முள்ளிவாய்க்கால்முற்றம் போல சேர்ந்தோமே
ஈசல்கள் போல் சிறு பரப்பில் இறுக்கப்பட்டு இருந்தோமே
யார் வருவார் காக்கவென்று பார்த்தபடி நின்றோமே
குண்டுமழை பொழிந்ததால் குற்றுயிராய் கிடந்தோமே...

செங்குருதிச் சேற்றினிலே எங்கள் உயிர் தொலைத்தோமே
செய்த பிழை என்னவென்று தெரியாமலே செத்தோமே
எங்களுயிர் சத்தமின்றி போனது தான் போகட்டும்
இனி வரவிருக்கும் சந்ததியை வாழவிடுங்கள்– அது போதும்.

மதுமிதன்

மு.தமிழ்மணி

# போர் வெற்றியும் மஹிந்தவின் மே-18 உம்

அச்சம் ஒழிந்த நாட்டிலே சூரிய சந்திரர் நீங்களே! மெச்சும்வளமிகு நாளையில் ஜனாதிபதியும் நீங்களே! நீடூழி வாழ்க..... இப்படிப்பட்ட புகழ் கோசத்துக்குரியவரான முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவின் இன்றைய நிலையானது அவரினது மன நிழலில் ஓடிக்கொண்டிருப்பது போர்வெற்றியும், தேசத்தின் மகுடம் கண்காட்சி நிகழ்வும்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி வரை சர்வவல்லமை பொருந்திய, அசைக்க முடியாத அதிகாரத்துடன் பதவியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ இன்று முன்னாள் ஜனாதிபதியாகி சுதந்திரக் கட்சியிலும் செல்வாக்கற்ற நிலையில் ஊழல், அதிகார துஷ்பிரயோகம், நிதிமோசடி, கொந்தராத்து மோசடிகள் என அரசினால் சுமத்தப்பட்டு வருகின்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் நொந்து நூலாகியிருக்கின்றார். அப்படியிருந்தும் சிங்கள மக்கள் தன்னுடன் இருக்கின்றனர், அரசியலுக்கு வருவேன், பிரதமராக பதவியேற்று நாட்டை வழி நடத்துவேன் என்று சூளுரைத்துக் கொண்டு 57 லட்சம் வாக்குகள் அவரை அரசியல் ஆசையில் இருந்து விடுபட முடியாதவாறு மறுபிரவேசக்கனவில் இப்போது மிதக்கின்றார் என்பது உண்மையாக இருந்தாலும் தமது அரசியல் உறுதியாக அமையுமா......? என்பது அவரால்கூட நம்பமுடியாத நிலையே இன்றைய அவரது அரசியலில் காணப்படுகின்றது.

ஜனவரி ஒன்பதாம் திகதி காலை வேளையில் பதவியிழந்து அலரி மாளிகையை விட்டு வெளியேறி தனது சொந்த இடமான அம்பாந்தோட்டைக்குச் சென்றபின் இன்று வரையில் அவரைப் பாதித்துக் கொண்டிருப்பது ஜனாதிபதித் தேர்தலில் தோற்றது. தன்னுடன் நெருக்கமாகச் சேர்ந்து செயற்பட்ட சுதந்திரக்கட்சியின் செயலாளராகவும், சுகாதார அமைச்சராகவும் பதவியிலிருந்த மைத்திரிபால சிறிசேன இறுதிநேரத்தில் விலகி தமக்கெதிராக ஜனாதிபதித் தேர்தலில் துணிவோடு நின்று போட்டியிட்டு வென்றது. தனது பதவிக்காலத்தில் தமது சர்வாதிகாரங்களைபயன்படுத்திபோரை நடத்திய இராணுவத் தளபதியான சரத்பொன்சேகாவை சிறையிலடைத்து தண்டனை வழங்கிய பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில் இன்றைய ஜனாதிபதியால் பீல்ட் மார்ஷலாக பதவியுயர்த்தப்பட்டு சகல சலுகைகளையும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நீதியரசராக பதவி வகித்த ராணி பண்டாரநாயக்க தமது பதவிக்காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் புதிய ஜனாதிபதியால் மீண்டும் பிரதம நீதியரசராக பதவி வழங்கப்பட்டது போன்ற விடயங்களை மஹிந்தவினால் ஜீரணிக்க முடியவில்லை.

தன்னை எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது. எவராலும் வெல்ல முடியாது. அப்படிப்பட்டவராக அசுர பலம் வாய்ந்த ஒருவராகக் காணப்பட்டவரான மஹிந்த ராஜபக்ஷ ஒன் பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையை ஆட்சிசெய்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்தை தோற்கடித்து போரில் பெருவெற்றி பெற்று 2009 மே 19 இலிருந்து 2015 ஜனவரி 8 வரை முடிசூடா மன்னராக விளங்கினார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை முள்ளிவாய்க்காலில் கொன்று பயங்கரவாதத்துக்கு எதிரான போரை 2009 மே 18 அன்று முடிவுக்கு கொண்டு வந்து போரின் வெற்றியின் சொந்தக்காரனாக தன்னை உரிமையாக்கிக்கொண்டார். சிங்கள மக்களும் மஹிந்த ராஜபக்ஷவை நாட்டை மீட்டெடுத்த தலைவனாக உயர்த்திக்





கொண்டனர். மஹிந்தவே இந்த நாட்டின் தலைவராகவும், ஒரு மன்னராகவும் இருப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் முழு அங்கீகாரம் வழங்கியிருந்தனர். 2009 மே 18 இற்குப் பின்னர் நாட்டின் மன்னராகப் புகழ்பாடப்பட்ட ராஜபக்ஷ 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரையிலான ஆறுதடவைகளில் வருடம் தோறும் போர் வெற்றிக்கான கொண்டாட்டத்தையும், தேசத்தின் மகுடம் கண்காட்சி நிகழ்வையும் தென் இலங்கையில் பெரும் எடுப்பில் நடத்தியிருந்தார். சிங்கள மக்களுக்கும் வெற்றிக் கொண்டாட்டங்களும் தேசத்தின் மகுடம் கண்காட்சியும் எழுச்சியையும், உணர்வையும் ஏற்படுத்தியிருந்தன. இந்த எழுச்சியும், உணர்வுகளுமே மஹிந்தவுக்குக்கிடைத்தஅறுவடையாகஇருந்தது. மஹிந்த தனது ஆஸ்தான சோதிடரான சுமணதாச கூறிய சோதிடவாக்கை நம்பியே மீண்டும் மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். எதிர்பாராதவாறு பெரும் தோல்வியைச் சந்தித்தார். மஹிந்த தான் இப்படியாக தேர்தலில் வீழ்த்தப்படுவேன் என்றுகூட எண்ணிப்பார்த்திருக்கவே மாட்டார். விதி வேறு விதமாக மாற்றிவிட்டது.

ஐந்து மாதக் காலப்பகுதியில் மஹிந்தவின் நெருங்கிய சகாக்களான அரசியல்வாதிகளான உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன, பந்துல குணர்வர்த்தன, மஹிந்தானந்த அளுத்கமகே போன்றோர் மஹிந்தவை அரசியலுக்குக் கொண்டு வரத்துடிக்கின்றனர். தோற்றுப் போன மஹிந்தவோ தமது ஆஸ்தான சோதிடரை நம்பி மோசம் போனது போல் இவர்களை நம்பி அரசியலில் சேர்ந்து மீண்டும் தோல்வியடையும் நிலைக்கு ஆளாக நேர்ந்தால் இவர்களை நம்பி மோசம்போய் விட்டேன் என்று புலம்பும் நிலையை ஏற்படுத்திவிடக்கூடும் என்பதையும் யோசிக்காமலில்லை.

இந்த இடைவெளியில் மஹிந்த ஆட்சியில் இருந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகள் என வரிசைக்கிரமமாக குற்றப்புலனாய்வுப் பகுதியினரால் விசாரிக்கப்படுவதும், பின்னர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படுவதும், நீதிமன்றம் ஏறி இறங்குவதுமாக தற்போதைய காட்சிகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. சட்டம், நீதித்துறை என்பன தமது கடமையைச் செய்யும். அதிலிருந்து யாருமே தப்பமுடியாது என்பதுபோல் மஹிந்தவையும் மரண பயம் கொள்ள வைத்துள்ளது. தன்னையும் அரசு கைது செய்வ தற்கு ஆயத்தப்படுத்துகின்றது என்ற ஏக்கவுணர்வோடு பதற்றத்தில் உள்ளார். கடந்த மாதம் மஹிந்தவின் சகோதரரான முன்னாள் பொருளாதார அமைச்சராக பதவி வகித்தவரான பஸில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். அச்சமயத்தில் மற்றொரு சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷவும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். அடுத்து மஹிந்தவின் புதல்வரான நாமல் ராஜபக்ஷவும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சிறையலடைக்கப்படலாம்? என்றும் எண்ணுகின்றார். இறுதியாக மஹிந்த மீதான நிதிக் குற்றங்கள், ஊழல்கள் குறித்த விசாரணைகளை நடத்த மைத்திரி அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும். விசாரணைகளை எந்த நேரத்திலும் சந்தித்தேயாக வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகையில் உலகவங்கி அமெரிக்கா, இந்தியா, சீசெல்ஸ் போன்ற நாடுகள் எல்லாமே இலங்கைக்கு வெளியே உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் சொத்துக்களை தேடிப்பிடித்து கைப்பற்றுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவத் தயாராகவுள்ளன என்பதும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுவும் மஹிந்தவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

மஹிந்தவுக்கு பாதகமானதொரு சூழ்நிலைகள் ஏற்படுமிடத்து மஹிந்தவின் எதிர்கால அரசியல் நகர்வுகள் கடுமையாகப் பாதிக்கப்படும். அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு மஹிந்தவே பொறுப்பாளி என்றும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்த மாதம் ஏழாம் திகதி வெளிவிவகார அமைச்சராகவுள்ள மங்களசமரவீர கூட்டிய ஊடகவியலாளர்கள் மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வெளிநாடுகளில் 2.2 ட்ரிலியன் டொலர் (18 பில்லியன்) சொத்துக்கள் இருப்பதாக புலனாய்வுத்துறையினர் அறிக்கை தந்துள்ளதாகவும், அதனடிப்படையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டு பகிரங்கப்படுத்துகின்றேன் எனக் கூறியிருந்தார்.

ஆனால் மஹிந்தவோ மறுநாள் இதனை அடியோடு நிராகரித்திருந்தார். இதனால் மஹிந்த கலங்கிப் போயிருக்கும் நிலையில் தனது சகபாடிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அவர்களைச் சென்று பார்த்து ஆறுதல் கூறி வருகின்றார். அத்துடன் விகாரைகளுக்கும் சென்று புத்தபகவானிடம் தனது உள்ளக் குமுறல்களைக் கொட்டித்தீர்க்கத் தவறவுமில்லை. பௌத்த குருமார்களிடம் தனக்கு நேரப்போகின்ற அவல நிலையை விளக்கி வருகின்றதுடன் மக்களையும் சந்தித்து அரசியல் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றார்.

மஹிந்த ஒரு தடவை மைத்திரி ஆட்சியை, ஹிட்லர் ஆட்சியை விட மிக மோசமான சர்வாதிகாரம் கொண்ட ஆட்சியென வர்ணித்திருந்தார். மஹிந்தவையும் தமக்கு என்ன நேருமோ என்ற பயம் ஆட்டிப்படைக்கின்றது. மறு பக்கம் மே 18 நாளையும், போர் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளையும் எண்ணிப்பார்த்து பெருமூச்சு விடுகின்றார் என்பதும் மக்களுக்கு புரியாததல்ல.

போரில் வெற்றி பெற்ற நிலையில் ஜோர்தான் நாட்டிலிருந்து 2009 மே 18 அன்று, ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ வெற்றிச் செய்தியை சுமந்து கொண்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங் கியவுடன் கம்பீர நடையுடனும் மிடுக்கோடும் வீழ்ந்து மண்ணை முத்தமிட்டு வணங்குகின்றார்.

படையினரது போரையும், போர் வெற்றியையும் பாராட்டிப் புகழ்ந்து வானின் உச்சிக்குக் கொண்டு செல்கின்றார். தமது இராணுவமே உலகில் சிறந்தது. பயங்கரவாதத்தை தோற்கடித்தது. விடுதலைப் புலிகளை அழித்தொழித்தது. தமிழ் மக்களை மனிதாபிமானப் போரிலிருந்து மீட்டது என்று படையினருக்கும், படையினர்களின் குடும்பத்தினர்களுக்கும் மிகப்பெரிய பாராட்டுக்களையும், நன்றிகளையும் சகல ஊடகங்களூடாக தெரிவிக்கின்றார். போரின் வெற்றிக் கொண்டாட்டத்தை கொண்டாடுகின்றார். மே 20 அரச விடுமுறையாகவும் அறிவிக்கின்றார். ஒரே நாடு, ஒரே இனம், ஒரே தேசம்... ஒரே குரல் என்ற தேசியக் கொள்கை விதைக்கப்படுகின்றது. பெரும்பான்மையினம், சிறுபான்மையினம் என்று ஒன்று இல்லை என்ற கோசமும் வானுயர்ந்து நிற்கின்றது. இவ்வளவுக்கும் மத்தியிலே 2009 தொடங்கி 2014 வரை மஹிந்த ராஜபக்ஷ கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்தி தன்னை ஒரு முடிசூடா மன்னனாக சிங்கள மக்களுக்குக் காட்டியிருந்தார்.

வருடா வருடம் நடைபெறும் போர் எழுச்சி விழாவின்போது முப்படைகளின் தளபதிகள் மத்தியில் படையினரின் போரியலையும், போரில் வெற்றி பெற்றதும் இந்த அரசே என்று முழக்கமிட்ட மஹிந்த ராஜபக்ஷ இன்று வெறும் வெற்றுக்கோசங்களை மக்கள் மத்தியிலும், ஊடகங்களிலும் தெரிவித்தவாறு போரின் வெற்றிக்கொண்டாட்டங்களை படையினரும் மக்களும் ஒவ் வொரு கிராமங்கள் தோறும் நடத்துமாறு அறிவித்துள்ளார்.

ஆனால் மைத்திரி அரசோ வெற்றித் தினத்தை மே 18 இல் தவிர்த்து தமிழ் மக்கள் மீதான நல்லெண்ணத்தைக் காட்டியுள்ளதுடன் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கான நினைவு நாளில் அவர்களது உறவுகளால் நடத்தப்படுகின்ற சகல அஞ்சலி, அனுஷ்டானங்களுக்கும் அனுமதியளித்துள்ளது. இதுவும் மஹிந்தவுக்கு தாக்கத்தையும், வேதனையையும் உண்டாக்கியிருக்கும். காலப்போக்கில் படையினர் மத்தியில் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்ற போரின் வெற்றியுணர்வுகளை மைத்திரி அரசு அடியுடன் இல்லா தொழித்து விடப்போகின்றது என்ற தீராத கவலையும் மஹிந்தவுக்கு உண்டு.

இந்த வருடம் மே 18 இல் போர் வெற்றித் தினத்தைக் கொண்டாட நினைத்தமஹிந்தராஜபக்ஷஅதனைக் கொண்டாடமுடியாத நிலைக்கு ஆளாகிவிட்டார். அந்த வேதனை, வலிகளையும் 2015 மே 19 இலிருந்து மஹிந்த ராஜபக்ஷ சுமக்கின்றார். பாவம் ஓரிடம், பழி ஓரிடம் என்பதுபோல் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களது உறவுகளால் இடப்பட்ட சாபமும், பழியும் மஹிந்தவைச் சுற்றிச் சூழ்ந்து விட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

மே 18 என்றால் மஹிந்தவுக்கு மறக்கமுடியாததொரு வெற்றித்திருநாளாக 2009தொடக்கம் 2014 வரை இருந்து வந்தது. ஆனால் இன்றோ ஊழல்மோசடி, நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்றும், சர்வதேச விசாரணை, இனப்படுகொலையாளி முள்ளிவாய்க்காலில் தமிழர்களைக் கொன்ற படுபாதகன் என்றெல்லாம் படு பயங்கரமாக குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிய நிலையில் 2015 மே 18 இல் பாவப்பட்ட ஜென்மமாக, சக்தியிழந்த மனிதராக இருக்க மட்டுமே இந்த நாளில் காலம் அமைத்துக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியும், வெற்றிக் கொண்டாட்டத்தையும் இழந்து தவிக்கின்ற வேதனையும் தன்னைச் சூழவரவுள்ள குற்றச்சாட்டுக்களையும், சகோதரர்களின் கைதையும், விசாரணையையும் ஒன்று சேர்ந்து இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு மெதமுதலனவில் போர் வெற்றிக் கனவுகளையும், போரின் போது இடம்பெற்ற தமிழர்கள் படுகொலைக் காட்சிகளையும், படைகளின் இராணுவ நடவடிக்கைகளையும் பார்த்துப் பார்த்து நினைவுகளை மீட்டுப் பார்ப்பதைத் தவிர வேறு வழி யில்லை மஹிந்தவுக்கு.

# முள்ளிவாய்க்கால் அநியாயங்களை எதிர்காலம் மன்னிக்காது



■ சேரலாதன்

எதிர்காலத்தில் தமிழர்களின் வரலாறு எழுதப்படுமாயின் 2009ஆம் ஆண்டு மே மாதம் அதில் கண்ணீரால் நனைந்த அத்தியாயங்களைக் கொண்டிருக்கப் போகின்றது. உலகம் முழுவதும் தமிழர்கள் பரந்து வாழ்ந்தாலும் தமிழர்களின் தனி அடையாளத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் இலங்கைத் தமிழர்கள்தான். உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்திலும் சரி, முள்ளிவாய்க்கால் அழிவிலும் சரி தனி முத்திரை பதித்தவர்கள் அவர்கள். இன்று உலகின் முன்னால் அதே இனத்தவர்கள்தான் அனுதாபத்துக்குரியவர்களாகத் தலை குனிந்து நிற்கின்றனர். இந்த நிலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப் போகின்றது? என்பதுதான் இன்றுள்ள கேள்வி?

தமது இனத்தின் உரிமைகளுக்காக அகிம்சை வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் தயவு தாட்சண்யமின்றி ஒடுக்கப்பட்டதன் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கினார்கள். ஆனால் அவர்களின் அடிப்படை நோக்கம் புரிந்துகொள்ளப்படாமல் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டதன் விளைவுகளை இந்த நாடு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்தது. ஆரம்பத்தில் அகிம்சை வழியில் போராட்டங்களை நடத்திய தந்தை செல்வா தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டுமென்று கேட்கவில்லை. சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழர்கள் இந்த நாட்டில் ஏனைய இனத்தவர்களுக்கு ஈடாக அனைத்து உரிமைகளையும் பெற்றுவாழவேண்டும் என்பதையே அவர் வலியுறுத்தி வந்தார். ஆனால் இனவாதிகள், அவர் என்ன கூறுகிறார் என்பதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. மாறாக அகிம்சை வழியில் போராடியவர்கள் மூர்க்கத்தனமாகப் பழிவாங்கப்பட்டனர். பின்னர் இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தின் போது இந்த நாடு இரத்தத்தில் குளித்தது. சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடு இல்லாது சகல இனத்தவர்களும் பாதிக்கப்பட்டனர். தமிழர் பிரதேசங்கள் போர் வலயங்களாகக் காணப்பட்டதால் தமிழர் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் பன்மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது. சுமார் முப்பது வருடங்களாக தமிழர்கள் அனுபவித்த துன்பங்கள் எழுத்தில் வடிக்க முடியாதன.

பொருளாதாரத் தடைகள் ஒருபுறமிருக்க, ஒருவேளை நிம்மதியாக உறங்குவதற்குக் கூட அவர்களால் முடியவில்லை. இதற்கெல்லாம் என்றோ ஒருநாள் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை மட்டுமே அவர்களிடம்' எஞ்சியிருந்தது. ஆனால் இறுதிப்போர் அவர்களின் உடல்களை மட்டுமல்ல உள்ளங்களில் வளர்த்து வந்த நம்பிக்கையையும் சிதைத்து விட்டது.

இறுதிப்போரின் போது தமிழர்கள் எதிர்கொண்ட கொடூரமான அனுபவங்கள், ஜேர்மனியின் ஹிட்லரிடம் அகப்பட்ட யூத இன மக்களை விடக் கொடுமையானவை. நச்சுக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுக் கொல்லப்பட்ட யூத மக்களின் எண்ணிக்கை 60 லட்சத்தையும் தாண்டிவிட்டதாகக் கூறுவார்கள். அந்த மக்கள் சாவின்போது தமது அவலங்களுக்கு எல்லாம் முடிவைக் கண்டவர்கள். ஆனால் தமிழர்கள் சாவை மட்டுமே எதிர்கொள்ளவில்லை. பலர் தமது அங்கங்களை இழந்து நடைப்பிணங்களாக வாழ்கின்றனர். பலர் தமது கண்முன்னால் குண்டுகளுக்குச் சாவடைந்த தமது உறவுகளை நினைத்து நினைத்து மனநோயாளிகளாக மாறிக் காணப்படுகின்றனர். தாம் சிறுகச் சிறுகச் சேகரித்த சொத்துகளை எல்லாம் இழந்த பலர் அடிமட்ட வாழ்க்கை வாழ்கின்றனர்.

இறுதிப்போரின் அந்த இறுதி நாள்கள் தமிழர்களின் எதிர்காலத்தையே சிதைத்துவிட்டன. ஏதுமறியாத அப்பாவித் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் சாவைத் தழுவிக்கொண்டனர். ஏராளமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகினர். தமது அங்கங்களை இழந்தவர்கள் ஏராளம். ஆனால் இவையெல்லாம் வெளி உலகின் செவிகளுக்கு எட்டாதவாறு கச்சிதமாக மூடி மறைக்கப்பட்டன. ஒரு தமிழனுக்குக் கூட பாதிப்பு ஏற்படாதவாறு தாம் போரை நடத்தியதாக முன்னாள் ஜனாதிபதி நெஞ்சை நிமிர்த்தியவாறு கூறினார். அழிக்கப்பட்டவர்கள் தமது நாட்டு மக்களே என்ற எண்ணம் அவரிடம் துளியும் இருந்ததாகத் தெரியவில்லை. சின்னஞ்சிறிய கலிங்க தேசத்தை வெற்றி கொண்டவன் மாமன்னன் அசோகன். ஆனால் போரின் அழிவுகளைக் கண்டு வேதனையில் துவண்டுபோன அவன் அரசாட்சியைத் துறந்து பௌத்த மதத்தில் இணைந்து கொண்டான்.

இலங்கையிலும் பௌத்த மதம் தோன்றுவதற்கு அவனது வாரிசுகளே வழிவகுத்தன. ஆனால் தாம் சிங்கள பௌத் தர்கள் என மார்தட்டிக்கொண்ட அப்போதைய ஆட்சியாளர்கள் முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய அவலத்தைக் கண்டு வேதனைப்படவில்லை. மாறாக வெற்றிக் களிப்புத்தான் அவர்களிடம் காணப் பட்டது. குருதிச் சேற்றில் தமிழர் களின் உடல்கள் சிதைந்து காணப்பட, வெற்றிக்கொண்டாட்டங்களில் அரசு முனைப்புடன் ஈடுபட் டது. இவர்கள் எந்த நாட்டுப் படையை வென்றார்கள்? அந்நியர்களா இங்கு கொன்று குவிக்கப்பட்டார்கள்? இந்தக் கேள்விகளுக்கு ஒரு போதுமே விடைகிடைக்கப் போவதில்லை.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் நாள் என்றுமே தமிழர்களால் மறக்கப்பட முடியாத ஒரு நாளாகும். சந்ததி சந்ததியாகத் தமிழர்கள் இதை நினைவில் வைத்துக்கொள்வதுடன் தமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு நீதிகேட்டுப் போராடுவதற்கே முனைவார்கள்.

அநியாயம் புரிந்தவர்கள் ஒரு போதும் மன நிம்மதியுடன் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. முள்ளிவாய்க்கால் அவலங்களுக்குப் பொறுப்பனவர்களும் இதற்கு விதி விலக்கானவர்கள் அல்ல.

> இறுதிப்போரின் போது தமிழர்கள் எதிர்கொண்ட குரூரமான அனுபவங்கள், ஜேர்மனியின் ஹிட்லரி டம் அகப்பட்ட யூத இன மக்களை விடக் கொடுமையானவை. நச்சுக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுக் கொல்லப்பட்ட யூத மக்களின் எண்ணிக்கை 60 லட்சத்தையும் தாண்டிவிட்டதாகக் கூறுவார் கள். அந்த மக்கள் சாவின்போது தமது அவலங் களுக்கு எல்லாம் முடிவைக் கண்டவர்கள்.









முள்ளிவாய்க்கால் கொடூரத்தின் பதிவுகள் சில...







# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 600 | 800 | 600 | 600 |
| நண்டு | 250 | 450 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | – | 450 |
| பாரை | 600 | 450 | 500 | 500 | 600 | 350 |
| சுறா | 550 | 500 | 500 | 600 | 600 | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 350 | 400 | 300 |
| சூரை | 300 | 350 | 350 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 350 | 350 | 350 | 400 | 300 | 270 |
| கிழாக்கன் | 600 | 700 | 350 | 400 | 200 | 400 |
| ஓரா | 400 | 400 | 350 | 350 | – | 250 |
| திரளி | 250 | 300 | 250 | 250 | 100 | – |
| நகரை | 200 | 300 | – | 300 | 200 | 250 |
| ஆடை | 150 | 200 | 400 | 100 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 250 | 250 | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 300 | 250 | 200 | 120 |
| பாலை | 350 | 350 | 250 | 400 | 200 | – |
| வாளை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | 300 | 200 |



ஒரு காட்டில் பல முயல்கள் இருந்தன. இவை, தினம் தினம்., சிங்கம், புலி ஆகியவை தாக்குமோ என பயந்து பயந்து வாழ்ந்தன. ஒரு நாள் இவை எல்லாம் ஒன்று சேர்ந்து நாம் கோழைகளாக தினம், தினம் ..பயந்து சாவதை விட ஒட்டு மொத்தமாக குளத்தில் விழுந்து சாகலாம்'என முடிவெடுத்து. ஒரு குளத்தை நோக்கிச் சென்றன. அந்தக் குளத்தில் பல தவளைகள் வாழ்ந்து வந்தன. குளத்தின் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்த தவளைகள் எல்லா

## அச்சம் தவிர்

முயல்களும் அவற்றை நோக்கி வருவதைப் பார்த்து ..குளத்தில் குதித்து மறைந்தன. இதைப் பார்த்த முயல்களின் தலைவன் மற்ற முயல்களைப்பார்த்து. நாம் கோழைகள் தான்..ஆனால் நம்மை விட கோழையானவர்களும் உலகில் உள்ளனர். அவர்களே பயமில்லாமல் வாழும்போது நாம் ஏன் பயப்படவேண்டும்' என்று கூற .. அனைத்தும் திரும்பின.

நாம் பிறரைக் கண்டு பயப்படாமல் இருக்க வேண்டும்.நம்மைக் கண்டு பயப்படுபவர்களும் உலகில் இருப்பார்கள். பயம்..மனிதனை சிறிது சிறிதாக கொன்றுவிடும்.ஆகவே எதற்கும் எப்போதும் பயப்படக்கூடாது

## நாளை

**வைகாசி-05**
**செவ்வாய்க்கிழமை**
**19.05.2015**

திதி: பிரதமை மு.ப. 08.58 வரை
நட்சத்திரம்: ரோகினி மு.இ.10.30 வரை
சுபநேரம்: 10.22-11.52 வரை
இராகுகாலம்: 02.52-04.22 வரை

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 60 | 60 | 60 | 40–50 | 30 |
| கத்தரி | 80 | 60 | 60–70 | 40 | 40 | 80 | 80 | 40–45 |
| கரட் | 100 | 120 | 120–180 | 100 | 120 | 180 | 160 | 150 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 50 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 220 | 140 | 140–180 | 160 | 160 | 120 | 100 | 80 |
| பாகல் | 100 | 120 | 120 | 100 | 160–180 | 140 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | – | – | 40 | – | 100 | 60 |
| பெ.வெங்காயம் | 130 | 120 | 140 | 120 | 120 | 140 | 140 | 90 |
| சி.வெங்காயம் | 90 | 90 | 50–100 | 100 | 100 | 120 | 120 | 85 |
| பூசணி | 30 | 30 | 40 | 20–30 | 30 | 50 | 60 | 15 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80–100 | 80 | 120 | 70 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40–60 | 60 | 40 | 60 | 25 |
| கீரை | 30 | 40 | 30–50 | 20–30 | 25–30 | 50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20–30 | 20–30 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 40 | 30–40 | 30–40 | 60 | 60 | 40 |
| புடோல் | 80 | 50 | 60 | 60–70 | 80–100 | 40 | 80 | 50 |
| கோவா | 60 | 60 | 50 | 30–40 | 50–60 | 100 | 80 | 40 |
| வெண்டி | 120 | 50 | 80 | 100–120 | 120 | 120 | 80 | 40 |
| போஞ்சி | 140 | 120 | 140 | 140 | 140 | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 140 | 180 | 140–180 | 160 | 160 | 200 | 160 | 170 |
| தேங்காய் | 60 | 55 | 60 | 40–60 | 40–60 | 60–70 | 35–50 | 40–50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 90–100 | 90–100 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 200 | 140 | 200 | 140–160 | 100–120 | 180 | 160 | 110 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 30–40 | 30–40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 80 | 60 | 50 | 60–80 | 70–80 | 120 | 120 | 60–80 |
| இராசவள்ளி | 120 | 120 | 140 | 80–100 | 100–120 | 120 | 180 | – |
| முருங்கைக்காய் | 400 | 200 | 300–400 | 200–300 | 250–300 | 400 | 200 | 270 |

## சாரசு கொக்கு



சாரசு கொக்கு என்பது இந்தியாவில் நடுப் பகுதியிலும் கங்கையாற்றுப்படுகையிலும் வடபாகிஸ்தான், நேபாளம், தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளிலும் காணப்படும் ஒரு வகைப் பெரிய கொக்கு. இது 5 அடி உயரம் வரை இருக்கும் நன்கு வளர்ந்த சாரசு கொக்குகள் சிவப்பு நிறத் தலையையும் வெளுத்த உச்சந்தலையையும் கொண்டு இருக்கும். அல்குகள் கறுத்தவை. இறக்கையின் நுனிப்பகுதி கறுப்பாகவும் உடல் வெண்சாம்பல் நிறத்திலும் இருக்கும். ஆண் பறவைகளும் பெண் பறவைகளும் ஒத்த தோற்றம் கொண்டன. ஆண் பறவை பெட்டையை விடப் பெரியது. ஆண் பறவைகள் அதிக அளவாக 6.6 அடி உயரம் வரை வளரக்கூடும்.இப்பறவையே உலகில் எஞ்சியுள்ள இனங்களில் உயரமான பறக்கும் பறவை ஆகும். சராசரியாக 6.3 முதல் 7.3 கிலோ எடை வரை இருக்கும். மற்ற கொக்குகளைப் போல் இவை நெடுந் தொலைவு போவதில்லை. இரண்டு முதல் ஐந்து கொக்குகள் வரை கொண்ட சிறிய குழுக்களாக (சிறு தொகுதிகளாக) வாழ்கின்றன. சாரசுகள்அனைத்துண்ணிகள். பூச்சிகள் நீர்த்தாவரங்கள் முதலானவற்றை உணவாகக் கொள்கின்றன. இந்தப் பறவை தரையிலேயே கூடு கட்டுகிறது. இக்கொக்கு இரண்டு அல்லது மூன்றுமுட்டைகள் இடும். ஆண், பெண் (பெட்டை) இருபறவைகளுமே முட்டைகளை அடைகாக்கும். இப்பறவைகள் வாழ்நாள் முழுவதும் ஒரே இணையுடனே வாழ்கின்றன.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 8 | 1 | | | 3 | 2 | |
| | | | 3 | | 7 | | 5 | |
| 4 | | | | | 5 | 7 | 9 | 1 |
| 7 | 3 | | | | | | | |
| | | 1 | | 5 | | 4 | | |
| | 6 | | | | | | 3 | 7 |
| 1 | 5 | 9 | 8 | | | | | 3 |
| | 8 | | 2 | | 4 | | | |
| | 4 | 2 | | | 1 | 9 | | 8 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 6 | 2 | 1 | 8 | 5 | 7 | 4 |
| 8 | 2 | 7 | 4 | 3 | 5 | 6 | 1 | 9 |
| 5 | 4 | 1 | 9 | 7 | 6 | 8 | 3 | 2 |
| 2 | 1 | 4 | 5 | 8 | 9 | 7 | 6 | 3 |
| 6 | 8 | 3 | 1 | 4 | 7 | 9 | 2 | 5 |
| 7 | 5 | 9 | 6 | 2 | 3 | 1 | 4 | 8 |
| 4 | 6 | 8 | 3 | 5 | 1 | 2 | 9 | 7 |
| 9 | 7 | 2 | 8 | 6 | 4 | 3 | 5 | 1 |
| 1 | 3 | 5 | 7 | 9 | 2 | 4 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உ பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இல கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வடக்கு, கிழக்கில் தற்போதுள்ள தேர்தல் தொகுதிகள் மாறாது

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு

கொழும்பு, மே 18

வடக்கு, கிழக்கில் தற்போது தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையை மாற்றியமைக்கக் கூடாது எனும் கோரிக்கைக்கு, பிரதான கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தேர்தல் முறைமை மாற்றியமைப்பது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் உறுப்பினர் ப.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில், சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகள் முன்வைத்துள்ள யோசனை குறித்து ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. இந்த குழு கடந்த 14ஆம் திகதி ஒன்று கூடியபோது இவ்வாறு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

புதிய தேர்தல் முறைப்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 இல் இருந்து 255 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன், தொகுதி மூலம் நேரடியாகவும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மூலம் மாவட்ட அடிப்படையிலும், தேசியப் பட்டியல் மூலமும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் புதிய முறை அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

உத்தேச திருத்தச் சட்டத்தின் மூலம், தொகுதிகள் மீள்நிர்ணயம் செய்யப்படும் போது, வடக்கு, கிழக்கில் தொகுதிகள் மற்றும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. போரால் இலட்சக்கணக்கான வாக்காளர்கள் இடம்பெயர்ந்தமையின் காரணமாக ஏற்கனவே இருக்கும் பல தொகுதிகள் இல்லாமல் போகும்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டி வட, கிழக்கில் தேர்தல் தொகுதிகளை மீள நிர்ணயம் செய்வதை 10 வருடங்களுக்கு பிற்போடுமாறு கோரிவந்தன. இந்த கோரிக்கையை, பிரதான கட்சிகள் ஏற்றுக்கொண்டன என அமைச்சர் ப.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் சிறு கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளாலும் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக இந்தக் குழுவின் தலைவரும், அமைச்சருமான சரத் அமுனுகம சுட்டிக்காட்டினார்.



சிறு கட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், சகல தரப்பும் இணங்கக் கூடிய புதிய கலப்பு தேர்தல் முறையொன்றை உருவாக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள முக்கிய கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் என தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் ப.திகாம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# பொலிஸாரின் சுயாதீனத்தை வீணடிக்கின்றது புதிய அரசு

## குற்றஞ்சாட்டுகின்றார் முஸம்மில்

கொழும்பு, மே 18

புதிய அரசு பொலிஸாரின் சுயாதீனத் தன்மையை வீணடித்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முசம்மில்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய அரசு பொலிஸாரைத் தமது தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வருகின்றது. பொலிஸாரின் சுயாதீனத் தன்மையை வீணடித்து வருகின்றது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ற)

# இரண்டு முன்னாள் அமைச்சர்களுக்கு புலிகளோடு தொடர்பென குற்றச்சாட்டு

கொழும்பு, மே 18

முன்னாள் அமைச்சர்கள் இருவர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தறகொலைக் குண்டுதாரிகள் மற்றும் குண்டுகளைக் கொழும்புக்குக் கொண்டுவருவதற்கு குறித்த அமைச்சர்கள் உதவினார்கள் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்யும் முயற்சிகளுக்கு உதவினார்கள் என்றும் குறித்த முன்னாள் அமைச்சர்களுக்கெதிராகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

முன்னர் எதிர்க்கட்சியில் இருந்த அவர்கள் பின்னர் ராஜபக்ஷ அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருந்தனர் என்றும், அதன்பின்னர் இது தொடர்பான விசாரணைகள் மூடி மறைக்கப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தற்போது குறித்த இரு முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தலைக்கவச தடைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 18

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசத்தை தடை செய்வதை எதிர்த்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசத்துக்கான தடையை அகற்றுமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அந்த திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தடையை முழுமையாக அகற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஆர்ப்பாட்டதில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# ஜாதிக ஹெல, ஜனநாயக கட்சியை கூட்டுச் சேர்க்க ஜனாதிபதி திட்டம்?

கொழும்பு, மே 18

பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் நோக்கோடு ஜாதிக ஹெல உறுமய, ஜனநாயக கட்சி உட்பட மேலும் சில கட்சிகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைத்துக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித் துள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகியன மாத்திரமே அங்கம் வகிக்கின்றன. இடது சாரி கட்சிகள் உட்பட மேலும் சில கட்சிகள் முன்னணியுடன் இணைந்து செயற்பட்டாலும் இக்கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச்சேரவில்லை.

இந்தநிலையில் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மஹிந்தவையும், விமலையும் சிறைப்பிடிப்பதற்குச் சூழ்ச்சி

## மொஹமட் முஸம்மில் கூறுகின்றார்

கொழும்பு, மே 18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவையும் சிறைப்படுத்தும் வேட்டை ஒன்று இடம்பெற்று வருவதாக தேசிய சுதந்திர முன்னணி தலைவர் மொஹமட் முஸமில் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசத்தின் முன் நாட்டின் நீதியை அபகீர்த்திக்குள்ளாக்கியது இந்நாட்டின் பிரதமரே என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

புதிய அரசால் வேட்டையாடும் நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுத்து செல்லப்படுவதாகவும், தங்களுக்கு சவாலாக உள்ள அனைவரையும் இவர்கள் சிறைப்படுத்துவதாகவும், இதற்காக மிகவும் வஞ்சகமான முறையில் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் கண்டி-கொழும்பு அதிவேகப் பாதை

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

கொழும்பு, மே 18

எதிர்வரும் பொதுத்தேர்தல் வெற்றியின் பின்னர் கண்டி – கொழும்பு அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதுடன் ஒரு போதும் கண்டிராத வகையில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி தங்கொல்லையில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற தோட்டத்துறை உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை கையளிக்கும் வைபவத்தின் போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது அரசின் நூறு நாள் வேலைத் திட்டங்கள் மிக வெற்றிகரமாக பூர்த்தியடைந்துள்ளன. இதன் பொருட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உரிய வகையில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. அதிக பலத்துடன் வெற்றி பெறுவது நிச்சயம். இதனை உணர்ந்த எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.



அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எவர் எவ்வாறான கருத்துக்களை தெரிவித்து வந்தாலும் மக்கள் அவர்களின் செயற்பாடுகள் குறித்து நன்கு அறிந்தும் புரிந்தும் உள்ளனர். எனவே மக்களை இனிமேல் ஏமாற்றவோ அச்சுறுத்தவோ முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அவ்வாறான அரசியல் வாதிகளுக்குப் பாடம் புகட்டியது போல் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் சிறந்த பாடங்களை புகட்டுவார்கள்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் எல்கடுவ தோட்ட கம்பனி என்பவற்றிற்கும் தோட்டத்துறை உத்தியோகத்தர்களின் பற்றாக் குறைகள் இருந்து வருகின்றது. இதன் பொருட்டு உதவி தோட்டத் துறை அதிகாரிகள் சிலருக்கான நியமனக்கடிதங்கள் இன்று கையளிக்கப்படுகின்றது.

அதேபோன்று தோட்டத்துறை பயிற்சியாளர்கள் 50 பேருக்கும் நியமனங்களை இன்று வழங்கியுள்ளேன். தோட்டத்துறைகளை அபிவிருத்தி செய்யவும் முன்னேற்றவும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்று வருகின்றன. இதன் ஊடாக தோட்ட தொழிலாளர் மக்களுக்கு உயர்ந்த சேவைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.– என்றார். (ற)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகலிங்கம் செல்லத்துரை
(மின்சார இணைப்பாளர்)

தோற்றம் 12.06.1939
மறைவு 29.05.2014

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கிவைத்துவிட்டு
அவசரமாய் ஏன் அப்பா அவனியை விட்டு சென்றீர்கள்
ஆண்டுகள் ஒன்றென்ன ஆயிரம்தான்
கடந்தாலும் ஆறாது எம் இதயம்

தகவல்: மகிஷா
(பேரப்பிள்ளை - லண்டன்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர் (அரியாலை)

# தேர்தல் நடந்தவுடன் பிரச்சினைகள் தீராது

## பிரதான கட்சிகள் இணக்கத்துக்கு வரவேண்டும் என வலியுறுத்துகின்றார் அமைச்சர் கிரியெல்ல

கொழும்பு, மே 18

தேர்தல் நடந்தால் மட்டும் நாட்டின் பிரச்சினைகள் முடிந்துவிடும் என்று கொள்ள முடியாது என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. ஆயினும் தேர்தல் நடத்தப்பட்டவுடன்மாத்திரம்நாட்டின்அனைத்துப் பிரச்சினைகளும் முடி வுக்கு வந்துவிடும் என்று கூறமுடி யாது.



தேர்தல் முடிந்ததன் பின்னர் நாட்டின் பிரதான கட்சிகள் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இணக்கப்பாட்டின் அடிப்படையில் நாட்டை ஆட்சி செய்யும் நிலைப்பாட்டை அவை எடுக்க வேண்டும்.– என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்தவை இனிமேல் சந்திக்காராம் மைத்திரி

கொழும்பு, மே 18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே மீண்டும நேரடிக் கலந்துரையாடல்கள் எவையும் இடம்பெறாது என்று ஜனாதிபதி செயலகத்தை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவுடன் எதிர்காலத்தில் நேரடியான சந்திப்புகள் இடம்பெறாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார ரணதுங்க விடம் தெரிவித்துள்ளார் என்று கூறப் படுகின்றது.

மஹிந்தவிடம் கூறவேண்டிய அனைத்தும் முதலாவது கலந்துரையாடலிலேயே அவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என ஜனா திபதி குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, மஹிந்தவை மீண்டும் அரசியல் ரீதியில் பலமடைய இடமளிக்கக் கூடாது என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். (ற)

# ஜெனிவா விவகாரத்தில் மஹிந்தவுக்கு தோல்வி

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, மே 18

ஜெனிவா விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார் என்று முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் நிலைப்பாட்டுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ இணங்கியிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதஉரிமைப் பிரச்சினைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் நாடு கடும் அழுத்தங்களை எதிர்நோக்கியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறைவின் பின்னர் அரசு வடக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்கத் தவறியுள்ளது. போரில் மிக முக்கியமான தருணத்தில் ஒத்துழைப்பு வழங்கிய இந்தியாவையும் மஹிந்த பகைத்துக் கொண்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வென்று ஜெனிவா விவகாரத்தில் திடமான தீர்மானத்தை எடுக்கும் திட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ அவசர தேர்தலை நடத்திய போதிலும் திட்டம் நிறைவேறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாக திஸ்ஸ அத்தநாயக்க சுகாதார அமைச்சராக நியமிக்கப்படுவதை ராஜபக்ஷ அரசின் முக்கியஸ்தர்கள் பலர் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள திஸாநாயக்க மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்க முயற்சித்த போதிலும் அது பயனளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவா பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதன் மூலம் ஜெனிவா சவாலை வெற்றிகொள்ள ஜனாதிபதி மைத்திரிபால முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும், ஆட்சி அமைக்கத் திட்டமிட்டு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## முன்னாள் அமைச்சர்கள் வாகனங்களை ஒப்படைக்கவில்லை

கொழும்பு, மே 18

முன்னாள் அமைச்சர்கள் பலர் தமது உத்தியோகபூர்வ வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த அரசில் பதவி வகித்த பல அமைச்சர்கள் தங்களது உத்தியோகபூர்வ வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை. புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதற்கு முன்னர் பதவி வகித்த அமைச்சர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை அமைச்சில் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு வாகனங்களை ஒப்படைக்காதவர்கள் தொடர்பில் விரைவில் அறிக்கை வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார் – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார். முன்னாள் அமைச்சர்கள் சில உத்தியோகபூர்வ வாகனங்களை தங்களது சொந்த அரசியல் நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றனர்.– என்றும் ராஜித மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பிரேதப்பெட்டியிலும் பணம் சம்பாதிக்க முயன்றனர்

## கடந்த அரசைச் சாடுகின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, மே 18

கடந்த அரசில் அங்கம் வகித்தவர்கள் அனைத்து விடயங்களிலும் பணம் சம்பாதிக்க முயற்சித்தனர். பிரேதப்பெட்டியிலும் கூட பணம் சம்பாதிக்கவே முயன்றனர் என்று குறிப்பிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த அரசு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்திருந்த போதும், அதற்கான நிதி செலுத்தப்படவில்லை. அவற்றுக்கு நிதி ஒதுக்கும் பொறுப்பு இந்த அரசிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. – என்றும் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்து அரசு கவனம் செலுத்துகின்றது என்று கூறிய அவர் 20ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குக் கட்சிகள் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

புதிய தேர்தல் முறைமை ஒன்றை மக்கள் பழக்கப்படுத்திக் கொள்ள இரண்டு மூன்று ஆண்டுகள் கால அவகாசம் தேவைப்படும் என்று தெரிவித்துள்ள அவர், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை அரசியல் பழிவாங்கல் என்று பரப்புரை செய்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## பலத்த காற்றால் பொலன்னறுவையில் ஆறு வீடுகள் சேதம்

கொழும்பு, மே 18

பொலன்னறுவையில் வீசிய பலத்த காற்றினால் 6 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் புத்தளம்–சின்னப்பாடு பகுதியில் வீடொன்று சேதமடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக வீடுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மழை காரணமாக தப்போவ நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகளும் , தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் வான்கதவொன்றும் திறந்து விடப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தொடரும் மழை காரணமாக மன்னார், புத்தளம் பிரதான வீதியூடான போக்குவரத்து எழுவான்குளம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ற)



நேற்றுமுன்தினம் பிற்பகல் பொலன்னறுவை பிரதேசத்துக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்குள்ள சாதாரண மக்களுடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ற)

## வர்த்தக நிலையங்களுக்கு இலவச 'வை–பை'

கொழும்பு, மே 18

நாட்டிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் இலவசமாக 'வை–பை' வசதியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள இரண்டு வர்த்தக நிலையங்களில் இலவச 'வை–பை' வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் திட்ட முகாமையாளர் கவஸ்கர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். நாரஹன்பிட்ட பொருளாதார மத்திய நிலையம் மற்றும் மருதானை வர்த்தக நிலையம் ஆகிய இடங்களில் இலவச 'வை–பை' வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# ஹைதராபாத்தை முரட்டுத்தனமாக வீழ்த்தியது மும்பை

# முதலாவது தகுதியாட்டத்தில் சென்னை எதிர் மும்பை



மலிங்க, மக்கெல்நாதன், சுசித், ஹர்ப ஜன்சிங் ஆகியோரின் பந்துவீச்சும் சிம்மொன்ஸ், பட்டேலின் இணைப் பாட்டமும் கைகொடுக்க ஹைதரா பாத்தை 9 இலக்குகளால் இலகுவாக வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் இரண்டா வது இடத்தைப் பிடித்து சென்னையு டன் முதலாவது தகுதியாட்டத்தில் பலப்பரீட்சை நடத்தவுள்ளது மும்பை.

மும்பை எதிர் ஹைதராபாத் அணிக ளுக்கிடையிலான ஆட்டம். நடப்பு ஐ.பி.எல். தொடரின் கடைசி லீக் ஆட்டம். வாழ்வா சாவா ஆட்டம் என்றால் இதுதான் என்று சொல்லு மளவுக்கு இரு அணிகளுக்கும் மிக முக்கிய ஆட்டம். வெற்றிபெற்றால் புள்ளிப்பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்து அடுத்த சுற்றில் ராஜஸ்தானுடன் மோதலாம். தோல் வியடைந்தால் தரவரிசையில் ஆறா வது இடத்தைப் பிடிப்பதுடன் கிண் ணக்கனவும் முடிவுக்கு வரும்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்து தனது அழிவுக்கு தானே காரணமானது. களத்தில் வோர்ணருடன் தவான். முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஒரே யொரு ஓட்டத்துடன் தவான் பவிலி யன் திரும்ப இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் வோர்ணரும் தவான் பின்னால் சென்றார். ஹைதரா பாத்தின் ஆரம்பவீரர்கள் இருவரா லும் பத்து ஓட்டங்களைக்கூட முழு மையாகக் குவிக்க முடியவில்லை. ஹேன்றிக்ஸுடன் இணைந்தார் கிரிக் கெட்டின் தாயகத்தின் தலைவர் மோர்கன். கரைசேர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தால் காலைவாரிவிட்டார் கள். மோர்கன் ஒற்றையிலக்கத்தில், ஹென்றிக்ஸ் பதின்மத்தில் பவிலியன் திரும்ப ஹைதராபாத் ஆட்டங்காண ஆரம்பித்தது. நாமன் ஓயா எதிர் கொண்ட முதல் பந்திலேயே பிடி யெடுப்பது எப்படி என்று ரொகிட் சர்மாவுக்கு பழக்கிவிட்டுச் சென்றார். ஹைதராபாத் பத்துப்பந்துப்பரிமாற றங்கள் நிறைவில் 51–5. நிதானித்த ராகுலால் நீடிக்க முடியவில்லை. 24 ஓட்டங்களுடன் ஓட்டம் பிடித்தார். ஹைதராபாத் சார்பாக பெறப்பட்ட அதிகபட்ச ஓட்டம் இதுதான். புவ னேஸ்குமாரின் பிடியெடுப்பை பாய்ந்து நிகழ்த்தினார் பாண்யா. நூறு ஓட்டங்களை எட்டுவதே எட்டாக் கனியாக இருந்த நேரத்தில் அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகளை விளாசி ஆறுதல் தந்தார் ஸ்ரெயின். ஹைதாரபாத் சார்பாக 9 பவுண்டரிகளும் ஒரேயொரு சிக்சருமே விளாசப்பட்டன. முடிவில் ஹைதராபாத் 113.

மிக இலகுவானஇலக்கு சிம்மொன்ஸ், பார்திவ் பட்டேல், ரோகித் சர்மா, பொலாட், ராயிடு, பாண்யா என்று பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டிருக்கும் மும்பைக்கு முன்னால் இந்த இலக்கு ஒரு விடயமே இல்லை. மும்பை இலகுவில் ஊதித்தள்ளிவிடும் என்ற பொது வான அபிப்பிராயங்களுக்கு மத்தியில் களத்தில் சிம்மொன்ஸு டன் பார்திவ் பட்டேல். அதிரடியில் ஆரம்வம் காட்டும் இந்த இருவரும் நேற்று அந்த எண்ணத்தையே கைவிட்டு ஸ்ரெயின், புவனேஸ்குமார் போன்ற அச்சுறுத்தும் வேகங்களை எதிர்கொண்டு தருணத்துக்கு ஏற்ப சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தனர். இணைப்பாட்டம் ஐம்பதை எட்டிவிட்டது இலக்குகள் மட்டும் விழுந்தபாடில்லை. ஓட்டங்கள் அதிகரிக்க அச்சம் இல்லாமல் படிப்படியாக அடித்தாட முற்பட்டார் பார்திவ் பட்டேல். ஆனபோதிலும் சிம்மொன்ஸ் தொடர்ந்தும் நிதானிக்கவே செய்தார். பார்த்திவ் பட்டேல் பவுண்டரிகளை விளாசியதன் எதிரொலியாக இரண்டு பெரிய சிக்சர்களை விளாசினார் சிம்மொன்ஸ். மும்பை இலக்குகள் இழப்பின்றி 100 ஓட்டங்களை எட்டியது. 48 ஓட்டங்களுடன் அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார் சிம்மொன்ஸ். மறுமுனையில் அரைச்சதம் கடந்து அசத்தினார் பட்டேல். வுந்த வேகத்தில் சிக்சரை விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ரோகித் சர்மா.

சென்னை, பெங்களூர், ராஜஸ்தான் அணிகளுக்கு அடுத்தபடியாக மும்பை அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் சென்னையும் இரண்டாவது இடத்தில் மும்பையும் மூன்றாவது இடத்தில் பெங்களூரும் நான்காவது இடத்தில் ராஜஸ்தானும் உள்ளன.

(ரி)

## தகுதியாட்டம் - 01

மும்பை எதிர் சென்னை

MUMBAI INDIANS & CHENNAI SUPER KINGS

## விலகல் ஆட்டம்

பெங்களூர் எதிர் ராஜஸ்தான்

ROYAL CHALLENGERS BANGALORE & RAJASTHAN ROYALS

## மரண அறிவித்தல்

### கருணாகரன் திவிநந்தன்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கருணாகரன் திவிநந்தன் நேற்று (17.05. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கருணாகரன் (குடியேற்ற உத்தியோகத்தர்- பிரதேசசெயலகம், புதுக்குடியிருப்பு) - சுஜிகலா தம்பதிரியன் அன்பு மகனும், லக்ஷிகா (மாணவி- உடுவில் மகளிர் கல்லூரி), ஜிதுக்ஷ்வனா (மாணவி - உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05. 2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு, தொடர்பு: 077 6215223 தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லாத்தைப்பிள்ளை கந்தையா



மலர்வு 19.08.1922 உதிர்வு 15.05.2015

நெடுந்தீவு மேற்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இரத்மலானை சொய் சாபுரவில் வசித்தவருமான திருமதி தில்லாத்தைப் பிள்ளை கந்தையா 15.05.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- தையலம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - காமாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பசுபதிப் பிள்ளை, நாகமுத்து, இராமநாதன், நாகமணி, தெய் வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், கனகரத்தினம் (யாழ். பல்கலைக்கழக பட்டதாரி மொழி பெயர்ப்பாளர் - ஓய்வு நிலை, பிரதேசசபை உறுப்பினர் வேலணை), திருமதி கமலாதேவி பரநிருபசிங்கம்(விஞ்ஞான ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி - ஓய்வுநிலை, கனடா), காலஞ்சென்ற பத்மாவதி, விநாயகமூர்த்தி(பிரயோக கணித விரிவுரையாளர் ஓய்வுநிலை, பீட்டர்ஸ்பேக் பல்கலைக்கழகம், தென்னாபிரிக்கா), திருமதி தனலட்சுமி (ஆசிரியை, கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி காந்தமலர்(திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் - ஓய்வுநிலை), கோபாலபிள்ளை (கிராம அலுவலர் - ஓய்வு நிலை, நெடுந்தீவு), திருமதி சாரதாம்பாள்(கனடா), காலஞ்சென்ற மோகன தாஸ், Dr.தேவயானி (கனடா), மரியசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், Dr.துஷ்யந்தி(யாழ் போதனாவைத்தியசாலை), Dr.சஞ்சீவ் (UK), அரிகரன் (கனடா), அரபிந், சுகன்யா(கணக்காளர் - (UK)) சியாமளி(M.Sc, கனடா), அபிவர்மன் (கனடா), சுரபி(கனடா), Dr.பிரசன்னா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஷானி (UK), ஆஸ்கன் (UK) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2015) திங்கட்கிழமை பி.ப 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4-மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

B 29 5/2, சொய்சாபுர தொடர்மாடி சொய்சாபுர.

தொடர்பு: 011 263 8466, 077 086 8634

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(59945) (45936)

### நடராசா சிவஞானம்



பிறப்பு 17.04.1933 இறப்பு 17.05.2015

சரவணையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவஞானம் நேற்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருமைஞானம் (தம்பி) மற்றும் ஜெயமலர், ரஞ்சிதமலர், சந்திர மலர், சிவகணேஸ் (சிவா), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபாலா, சிவானந்தன், பவானந்தன், தர்சிகா, கம்சநதி ஆகியோரின் மாமனும், கிரி, டிலான், தரணி, கௌசி, நிரு, பானு, சாகித்யா, சஜிலன், லக்ஷன், துளசி, துசி, அபி, ஜெனா, சுபி, சரு, சுபி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி, பழனியாண்டவர் லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

077 1864871

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி ஞானசகுந்தலா (ராணி) மயில்வாகனம்



பிறப்பு 02.06.1934 இறப்பு 16.05.2015

யாழ். கொக்குவில் மாத்தனையைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானசகுந்தலா (ராணி) மயில்வாகனம் கடந்த (16.05.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா-கனகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், மகிந்தன் (கனடா), அசோகன் (இலங்கை), விஜயகுமாரி (பபி- ஆஸ்திரேலியா), இந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும்,காலஞ் சென்றவர்களான நாகேஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகௌரி, சாந்தினி, இரவீந்திரன், ஜெயசிரியா ஆகியோரின் அன்பு மாமி யும், பிரணீதா, பௌமி, இராகுல், ஆர்த்திகா, வைஸ்ணவி, லக்ஷன், லயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (20.05.2015) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: மகிந்தன். +14162624973

தகவல்: குடும்பத்தினர்.

## மாணவியின் கொலையை கண்டித்து நாளை கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 18

புங்குடுதீவில் கடந்த புதன்கிழமை பாடசாலை மாணவி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்குமாறு கோரியும், குற்றவாளிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகக் கூடாது என்று வலியுறுத்தியும் நாளை காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் ஆட்டப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்களுடன், பஸ் நிலைய வர்த்தகர்கள், பஸ் நிலைய முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், தனியார் பஸ் நிலைய வர்த்தகர்கள் இணைந்து நடத்தும் போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் பொது மக்கள், புத்திஜீவிகள், பாடசாலை சமூகத்தினர், பொது அமைப்புக்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல்வாதிகள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ற)



திருநெல்வேலி சிவன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் பக்தி பூர்வமாக இடம் பெற்றது. தேர் வீதியுலா வந்தபோது வடக்கு வீதியில் தேர் சில்லு வீதியில் புதையுண்டதுடன் அருகில் இருந்த வேப்ப மரத்துடனும் மோதுண்டது.

அதனால் தேர் நகர முடியாத நிலைக்கு உள்ளாகியதைத் தொடர்ந்து பாரம் தூக்கிகள் கொண்டுவரப்பட்டு தேர் தூக்கி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தேர் தமது வெளிவீதியுலா நிகழ்வை நிறைவு செய்துள்ளது. (ற-86)

## தொடர்ச்சி

### சாவடைந்த

என்று மகளிர் விவகார பிரதி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு முற்பகுதியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது பல்லாயிரக்கணக்கான எமது உறவுகள் கொன்று குவிக்கப்பட்டனர். பெருமளவானோர் அங்கவீனமடைந்தவர்களாகவும், காயமடைந்தவர்களாகவும் மாற்றப்பட்டனர். பெருமளவானோர் காணாமற் போயுள்ளனர். இவ்வாறு பேரவலம் ஏற்பட்டு இன்றுடன் 6 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

இந்தப் பேரவலத்தில் உயிரிழந்த எமது ஒவ்வொரு உறவுகளையும் நாம் நினைவு கூர வேண்டும், அது எமது தார்மீக கடமையாகும். உயிரிழந்த அப்பாவி மக்களைக் கூட நினைவு கூர முடியாத அச்சமான சூழ்நிலை கடந்த அரச காலத்தில் இருந்தது. உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தால் அவர்களையும் புலிகள் எனக்கூறி தண்டிக்கும் காலம் கடந்து ஐந்து வருடங்களாக நிலவி வந்தது.

தற்போதைய அரசானது உயிரிழந்த பொதுமக்களை நினைவு கூரலாம் என அனுமதி வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில் போர் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டு அவர்களது உறவினர்கள் துயர் தோய்ந்திருந்த நிலையில் அந்த மக்களது மனதை புண்படுத்தும் வகையிலேயே கடந்த அரசானது இராணுவ கவச வாகனங்களையும் போர் விமா னங்களையும் காட்சிப்படுத்தி வெற்றி விழாக்களைக் கொண்டாடியிருந்தது.

தற்போதைய அரசானது வெற்றி விழா என்ற பெயரில் இத்தகைய நிகழ்வை ஏற்பாடு செய்யாது பிரிவினைக்கு எதிரான நிகழ்ச்சியாகவே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. உண்மையிலேயே சாவடைந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உறவுகள் என்றும் தமது உறவுகளை எண்ணி கண்ணீர்வடித்தபடியே சோகத்துடன் வாழ்கின்றன. இந்த மக்களின் சோகத்தில் நானும் பங்கேற்றுக் கொள்கின்றேன். இன்றைய தினம் வடக்கு, கிழக்கு உட்பட்ட தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடத்தப்பட வேண்டும்.

இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அமைதியான முறையில் சாவடைந்த தமது உறவுகளை நினைவேந்தல் செய்வதற்கு சகலருக்குமே உரிமை உள்ளது. இந்த நினைவேந்தலிலும் மக்களின் சோகத்திலும் நானும் பங்கேற்றுக் கொள்கின்றேன் – என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நினைவேந்தலை

தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் நாளை (இன்று) வடக்கு மாகாணசபை நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு இடைக்கால தடை விதிக்கப்பட் டுள்ளது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசு பதவியேற்ற பின்னரும் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில், கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெரியப்படுத்துமாறு கேட்டதற்குப் பதிலளித்த அவர், மக்கள் அமைதியாக தங்கள் உணர்வுகளை வெளிக் கொணர முடியும் என்பது புதிய அரசின் நிலைப்பாடு. ஆனால் பொலிஸார், இடைக்கால தடை விதித்துள்ளனர். இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

மக்கள் தங்களுடைய உணர்வுகளை அமைதியாக வெளிக் கொணர்வதற்கு அவர்களுக்கு போதிய சுதந்திரம் உண்டு என்பதே எனது எதிர்பார்ப்பு. அதற்கு எவ்விதத் தடையும் இருக்காது என்று நினைக்கின்றேன். தங்களுடைய சொந்தங்களை இழந்தவர்களுக்கு துக்க தினத்தை கடைப்பிடிப்பதற்கு உரிமை இருக்கின்றது.

அந்த உரிமையை எவரும் மறுக்க முடியாது. அது நியாயபூர்வமாக – மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட வேண்டியது. அதை எவரும் மறுக்கக் கூடாது. எவரும் தடுக்கக் கூடாது. அந்த மக்கள் அமைதியாக அந்தந்தக் கருமத்தில் ஈடுபட உரிமை உண்டு என்பதே எனது கருத்து. – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-5)

### நினைவேந்துவதற்கு

இந்த நினைவு நிகழ்வில் பல்கலைக்கழக விரி வுரையாளர்கள், ஊழியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, இறுதிப்போரில் மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் காட்டும் ஆர்வத்தை போர்க் காலம் முழுவதும் பலியாகிய அனைத்துப் போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்துவதற்கும் காட்டவேண்டும் என்று பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

மனிதசமூகம் இன்னமும் நாகரீகமடைய இடமுண்டு என்பதை நினைவூட்டுவதாகப் போர் உள்ளது. போருக்கு முடிவு உள்ளதே தவிர வெற்றி கிடையாது என்பதை எதிர் காலத்திலாவது மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பேதங்கள் ஏதும் இல்லாமல் போரில் மரணித்துப்போன எமது அனைத்து உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்தும் மனப்பக்குவத்தைப் பெற முயற்சிப்பதுடன் வேறுபாடுகளைக் களைவதற்கு வன்முறை ஒரு வழியல்ல என்பதையும் எம் மனதில் உறுதியாக பதிந்து கொள்வோம்.– என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது..

அத்துடன் போரில் கொல்லப்பட்டவர்களுக்காக யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று முற்பகல் மாணவர்கள் நினைவு நிகழ்வை நடத்தவுள்ளனர். (ற-4)

### இன்று

வெளியில் – ஒடுக்கப்பட்ட பல லட்சம் தமிழ் மக்கள் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டனர். மே மாதத்தின் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையில் அதிகளவு உயிர்கள் பலியாக்கப்பட்டன.

இதனை நினைவுகூர்ந்து, உயிரிழந்த உறவுகளை நினைவில் நிறுத்தி தமிழ் மக்களினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பல் வேறு தடைகளின் மத்தியிலும், நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட் டன.

புதிய அரசு, மக்களை நினைவுகூரத் தடையில்லை என்று அறிவித்த போதிலும், முள்ளிவாய்க்காலில் நடக்கவிருந்த நினைவேந்தல் நிகழ்வு ஒன்றுக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. குறித்த தீர்ப்பின் பிரதி ஒன்றும், வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், வடக்கு மாகாண சபையின் நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு முள்ளிவாய்க்காலில் இடம்பெறும். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-5)

### ஒளிவிளக்கேற்றி

நாம் தழிழர் என்பதனை என்றும் பறைசாற்றுவோம். – இவ்வாறு தெரிவித்துள்ளார் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் நாகரஞ்சினி ஐங்கரன்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இறந்து போன ஆத்மாக்களுக்காக தியானிப்பது அவர்களுக்காக வேண்டுவது என்பது தலைமுறை தலை முறையாக தழிழர் தம் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகவே உள்ளது. ஒரு நீண்ட விடுதலை நோக்கிய பயணத்தில் ஒரு போதும் எமது பண்பாட்டு அம்சங்களில் இருந்த விலகியவர்கள் நாம் அல்லர். இதே வேளை எப்படியும் வாழலாம் என்று வாழ்பவர்கள் நாம் அல்ல. எமது இலட்சியம் நோக்கிய பயணத்தில் நாம் இழந்தவைகள் பல. அவற்றில் எதை நாம் பெற்றாலும் பெற முடியாதவை எம்முடன் வாழந்து காற்றோடு காற்றாய், கடலோடு கடலாய், தாய் மண்ணோடு மண்ணாய் கரைந்தும் சிதைந்தும் போய் இன்று எம் மத்தியில் இல்லாது போன எங்கள் உறவுகள். அவர்களின் நினைவுகளை நேசித்து பூசித்து உள் உணர்வோடு தியானித்து. இன்றைய நாளில் ஓர் ஒளி விளக்குஏற்றி சுடர் செல்லும் வடிவில் பகைகளை சுட்டெரித்து நாம் தழிழர் என்பதனை என்றும் பறைசாற்றுவோம்.– என்றுள்ளது. (ற)

### உடற்கூற்றுச்

எழுப்பப்பட்டது. அதையடுத்து சட்டத்தரணிகள் ஊடாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சிறுமியின் மரணம் தொடர்பாக வைத்திய அறிக்கையிலும் குழப்பமான நிலை காணப்பட்டிருந்தது.

அதையடுத்துகடந்தமாதம் 6 ஆம் திகதி சடலத்தை தோண்டியெடுத்து கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

வவுனியா மாவட்ட நீதிவான் முகமட் ரிஸ்வான், யாழ் மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் ருத்திரபதி மயூரதன், கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் உறவினர்கள், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு உடல் கூற்று பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது.


அங்குபரிசோதனைகள் முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு கனகராயன்குளம் மயானத்தில் மீண்டும் புதைக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் இடம்பெறவுள்ளது. அதன் போது உடல்கூற்று பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-21)

### முள்ளிவாய்க்கால்

போரில் பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டது நாம் அறிந்ததே. இத்தகைய அவலம் மானுட வரலாற்றில் மீண்டும் ஒருமுறை இடம்பெறக் கூடாது என்பதே எமது பெருவிருப்பு. காலாதிகாலத்துக்கும் வருடாந்தம் நாம் இந்த நினைவு கூரலில் ஈடுபடக் கடமைப்பட்டுள்ளோம். இந்த நினைவு கூரல் இறந்தோருக்கான அஞ்சலியாகவும் இருப் போருக்கு இனிமேல் எப்போதும் நடைபெற அனுமதிக்க முடியாது என்ற உணர்வையும் தரும். ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பலசமய வழிபாட்டில் பங்குபற்ற அனைவரையும் அழைக்கின்றோம்.– என்றுள்ளது. (ற)

### மாணவி



சாவிற்கு', 'அரசே பெண்ணினத்தை காக்க வாரீர்', 'அரசே நியாயம் நீதி தா', 'அடுத்தது யார்?', 'பூக்களை நசுக்காதீர்', 'கொடூரர்களை தூக்கிலிடுங்கள்', 'இவர்களுக்கு கொடுக்கும் மரணதண்டனை மற்றவர்களுக்கும் பாடமாக அமையட்டும்', 'பெண்களை கொடூரர்களிடமிருந்து காப்பாற்றுவோம்' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கோசங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் எதிர் காலத்தில் இத்தகைய கொடூரங்கள் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் மனுக்கள் ஜனாதிபதிக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர், யாழ்.மாவட்ட அரச அதி பர் ஆகியோருக்குக் கையளிக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், ஸ்ரீ ரெலோ கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செந்தூரன், தம்பிராசா ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (ற-10)

### மெரினாவில்

ஆகியன இணைந்து, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை, சென்னை மெரினா கடற்கரையில் நேற்று மாலை உணர்வுபூர்வமாக நடத்தினர். இதில் தமிழக அரசியல் தலைவர்களான பழ.நெடுமாறன், வை.கோபாலசாமி, காசி ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ற-5)

# 35 வீதமானோரே நாடு திரும்பினர்

## மீள்குடியேற்ற மற்றும் இந்துமத விவகார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18
தமிழகத்தில் வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் அகதிகளில் 35 சதவீதமானோரே நாடு திரும்பியுள்ளனர். ஏனையோர் நாடு திரும்ப விரும்பவில்லை என்று மீள்குடியேற்ற மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன்தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஒரு இலட்சம் இலங்கையர்கள் தமிழ் நாட்டில் அகதிகளாக வாழ்கின்றார்கள். அவர்களில் பலர் தொழில் வாய்ப்பை பெற்றுள்ளதுடன் அவர்களில் பலருக்கு திருமணமாகி குழந்தைகளும் உள்ளனர். அவர்கள் அனைவரும் நாடு திரும்பவில்லை.
கடந்த புதன்கிழமை கொழும்பு, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அகதிகளிடம் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.அவர்கள்விசாரணைகளுக்கு அஞ்சுகின்றார்கள், நாடு திரும்பியவர்களுக்கு இது ஒரு அடிப்படை பிரச்சினையாகவே காணப்படுகின்றது. அதனால், நாங்கள் விசாரணை காலத்தை குறைகொள்ள முயற்சிக்கின்றோம்.
தமிழகத்தில் உள்ள அகதிகள் மூன்று முகவர் அமைப்புகள் ஊடாக தொடர்ந்து நாடு திரும்பி வருகின்றனர். இந்த விடயம் சம்பந்தமாக எமது அமைச்சு, இராணுவம், குடிவரவு திணைக்களம் மற்றும் பொலிஸாருடன் நெருக்கமாக பணியாற்றி வருவதுடன், இந்த வேலைத்திட்டம் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாடு திரும்பும் அனைத்து அகதிகளையும் வரவேற்க அரசு ஆர்வத்துடன் உள்ளது. வியாழக்கிழமை நாடு திரும்பியவர்கள் இந்திய கடவுச்சீட்டுகளை கொண்டிருந்தனர். இரட்டைக் குடியுரிமை முறையில் அவர்கள் அனைவரும் நாடு திரும்பியுள்ளனர்.
அத்துடன் அவர்கள் அனைவரும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். எதிர்வரும் நாள்களில் நாடு திரும்ப திட்டமிட்டுள்ளவர்கள் அதனை முன்கூட்டியே அறிவித்தால், அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)



இயந்திர உலகின் உற்பத்தியாளர்களின் புத்தாக்க சிந்தனை கொண்ட மாபெரும் தொழில்துறை கண்காட்சியும் சமூக ஒருநாள் நிகழ்வுகளும் கடந்த வியாழக்கிழமை முதல் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை வரை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. (வ)

## நாடு திரும்பும் அகதிகளுக்கு தொடர்ந்தும் உதவத் தயார்

### ஐக்கிய நாடுகளுக்கான அதிகள் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு,மே18
இந்தியாவில் இருந்து திரும்பும் இலங்கை அகதிகளுக்கு ஐக்கிய நாடுகளுக்கான அதிகள் தூதரகம் தொடர்ந்தும் உதவிகளை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் தூதரகத்தின் பிரதிநிதி கோலம் அப்பாஸ் தெரிவிக்கையில்;
"இந்தியாவில் இருந்து மீள இதுவரை திரும்பியுள்ள 92 ஆயிரம் இலங்கை அகதிகளுக்கு தாம் உதவிகளை வழங்கியுள்ளதாகவும்,இந்த உதவிகள் 1987 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.
இதேவேளை, கடந்த புதன்கிழமையும் இந்தியாவில் இருந்து 65 பேர் நாடு திரும்பியிருந்த னர். அவர்களுக்கு ஐக்கிய நாடுகளுக்கான அதிகள் தூதரகம் இலங்கை வங்கியால் மீள் ஒன்றிணைப்பு வைப்புக்களைச் செய்து கொடுத்திருந்தன. அதேபோல் இலங்கை திரும்பும் மக்களுக்கு தாம் தொடர்ந்து ம் உதவ முன்வந்துள்ளதாக கோலம் அப்பாஸ் மேலும் தெரிவித்தார். (வ)

## கொழும்பிலுள்ள உணவகங்களில் 40 வீதமானவை தரமற்றவை

யாழ்ப்பாணம், மே 18
கொழும்பு நகரிலுள்ள உணவகங்களில் 40 வீதமானவை தரமற்றவை என்று கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது.
தரமற்ற உணவகங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார். அத்துடன், தரமற்ற உணவகங்களைக் கண்டறிவதற்கான திடீர் சோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டு வருவதாகவும்அவர் தெரிவித்தார்.
நாள் கடந்த நிலையிலுள்ள உணவுகளைச் சூடேற்றி மீண்டும் விற்பனை செய்தமை காரணமாக, கொழும்பு பொது நூலக உணவகத்திற்கு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் நேற்று முனதினம் சீல் வைக்கப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4-22)



மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களிடத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமதின் உத்தரவின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. (வ)

## 25 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் மூவர் கைது

மட்டக்களப்பு,மே18
காத்தான்குடி பரீட் நகர்ப்பகுதியில் சுமார் 25லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள்கள் மோப்ப நாய்களின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் காத்தான் குடிபிரதேச பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.
இடுப்புப் பட்டிகளுக்கு இடையில் பொலித்தீன் பைகளில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன.
இவை கொழும்பு ஊடாக கட்டாருக்கு கடத்திச் செல்லப்பட இருந்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
சுற்றிவளைப்பின் போது கைது



செய்யப்பட்ட இளைஞர்கள் மூவரினதும் கடவுச்சீட்டுகள்,வங் கணக்கு புத்தகங்கள் உள்ளிட் மேலும் சிலவற்றை பறிமுத செய்துள்ளதாக பொலிஸ் தர பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ

## ரஷ்யப் பிரஜை கடலில் மூழ்கிச்சாவு

கொழும்பு,மே18
காலி கடற்பரப்பில் குளித்த ரஷ்ய பிரஜை கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் ஹிக்கடுவ திரணகம கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் 40 வயதுடைய ரஷ்ய பிரஜையே சுற்றுலாவுக்காக இலங்கை வந்தபோது இவ்வாறு பரிதாபமாக கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
கடலில்மூழ்கிய அவரின்சடலத்தை பொலிஸ் மற்றும் கடற்படைசுழியோடிகள் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
மீட்கப்பட்ட சடலம் பின்னர் காலி கராம்பிட்டிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.(வ)

## மே தின எழுச்சி தீர்மானத்துக்கு அமைவாக கூ. அபிவிருத்தி நூறுநாள் வேலைத்திட்டம்

### வடக்கு மாகாண கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 18
வடக்கு மாகாண கூட்டுறவாளர்களின் மே தின எழுச்சி தீர்மானத்துக்கு அமைவாக கூட்டுறவு அபிவிருத்திக்காக நூறு நாள்களில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக மாகாண கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சர் பொஜங்கரநேசன்தெரிவித்தார்.
இந்த நூறு நாள்களில் 23 வகையான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. கூட்டுறவு அமைப்புக்களை மேலும் அபிவிருத்தி செய்து வினைத்திறன் மிக்க கட்டமைப்பாக மாற்றியமைக்கும் நடவடிக்கையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
குறித்த வேலைத்திட்டத்துக்கு சகல கூட்டுறவு அமைப்புக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி அவற்றைச் செயற்படுத்தி வைப்பதற்கு முன்வர வேண்டும்.
கூட்டுறவு அமைப்புக்கள் இந்த வினைத்திறன் மிக்க கட்டமைப்புக்களை பலப்படுத்தும் முகமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அதனைவிட நலிவடைந்த சங்கங்களின் நலிவுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவும் உள்ளன.
அதனைவிட முப்பது வீத சம்பள உயர்வை பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தாத சங்கங்களுக்கு அவற்றைப் பணியாளர்களுக்கு வழங்க ஏற்பாடு மேற்கொள்ளுதல்.
கூட்டுறவுச் சங்க கிளை நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளை நுகர்வோரை மையமாகக் கொண்டு விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அதேசமயம் கூட்டுறவு அமைப்பில் அபிவிருத்திக் வெளிநாடுகளில் மற்றும் நிறு னங்களில் இருந்து உதவிகளை பெற்றுக்கொள்வற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கூட்டுறவுக் கிராமிய வங்கி ளின் செயற்பாடுகள் மக்களை சென்றடையக்கூடிய வகையி விரிவு படுத்தப்படவுள்ளது.
இவ்வாறு நூறு நாள்களில் மே கொள்ளப்படும் வடமாகாண கூட்டுறவு அமைச்சில் இந்த 2 வகையான வேலைத்திட்ட களை கூட்டுறவு அமைப்புக்க விரைவாக நடைமுறைப்படு தவும் ஏற்பாடுகள் மேற்கொ ளப்பட்டுள்ளன. (வ-1

# வற்சனைக் கொண்டாடும் ராஜஸ்தான்

## வற்சனே எமது பலம் -ரஹானே



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் லீக் ஆட்டத்தில் கொல்கத்தாவை 9 ஓட்டங்களால் போராடி வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது ராஜஸ்தான். இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் சார்பாக வற்சன் மிகவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி சதத்தை பதிவு செய்தார். இதனையடுத்து வற்சனை மூன்று வீரர்களுக்கு சமனானவர் என்று ரஹானே புகழ்ந்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் 199 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய கொல்கத்தா 190 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ராஜஸ்தான் சார்பாக வற்சன் இறதிவரை ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களைப் பெற்றதுடன் பந்துவீச்சில் 2 இலக்குகளையும் கைப்பற்றி அசத்தினார்.

இந்த நிலையில் வற்சன் தொடர்பாக ரஹானே தெரிவித்ததாவது கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் வற்சன் இல்லையென்றால் ராஜஸ்தான் தோற்றுப்போயிருக்கவும் கூடும். ராஜஸ்தானின் மிகப்பெரும் பலம் வற்சனே. ஏனெனில் அவர் தனியே ஒரு துடுப்பாட்ட வீரரோ அல்லது பந்துவீச்சாளரோ அல்ல. சிறந்த சகலதுறை வீரர். களத்தடுப்பையும் கச்சிதமாகச் செய்கிறார். மொத்தத்தில் மூன்றுவீரர்கள் செய்யும் செயலை தனியொருவராகச் செயற்படுத்துகிறார். இதுவே அவரின் பலம். ராஜஸ்தான் அணி அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றிருக்கும் இந்த மிகமுக்கியமான தருணத்தில் வற்சன் போர்முக்கு (திறனுக்கு) வந்திருப்பது சிறப்பான ஒன்று. வற்சன் போன்ற ஆதிக்கமான வீரர்களாலே ஆஸ்திரேலியா நடப்புச் சம்பியனாக வலம்வந்து கொண்டிருக்கிறது. அடுத்துவரும் ஆட்டங்களிலும் ராஜஸ்தான் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெறும் என்றார். தமது தோல்விக்கு வற்சனே காரணம் என்று கொல்கத்தாவின் உரிமையாளரான சாருக்கான் நகைச்சுவையாக தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி)



## வற்சனின் சகலதுறையே தேவை- ராவிட்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் லீக் ஆட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தி ராஜஸ்தான் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. இந்த வெற்றிக்கு வற்சனின் சதமும், அவர் இரண்டு இலக்குகளை வீழ்த்தியதுமே முக்கிய காரணம். வற்சனின் இந்தச் செயல்பாட்டுக்கு அவர் தலைமைப் பொறுப்பை சிமித்திடம் ஒப்படைத்தமையே காரணம் என்று ராவிட் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் அணியின் தலைவராக இருந்த வற்சன் இதற்கு முந்தைய ஆட்டத்திலிருந்து தனது தலைமைப் பதவியை சிமித்திடம் ஒப்படைத்தார். ஆதன் பின்னர் அதிக ஓட்டங்களைக் குவிக்கவும், இலக்குகளை வீழ்த்தவும் இந்த முடிவு பயனளிக்கும் என்று தெரிவித்தார். இந்தக் கருத்தையே தற்போது ராவிட் தெரிவித்துள்ளார்.

வற்சன் தலைமைத்துவத்தை கைமாற்றியது தொடர்பாக ராவிட் தெரிவித்ததாவது ராஜஸ்தான் அணியைப் பொறுத்தவரை வாற்சன் தலைவராக செயல்படுவதை விட சகலதுறை வீரராக சிறப்பாக செயல்படுவதே முக்கியம். அதனால்தான் அவர் தலைமைப் பதவியில் இருந்து விலகும் முடிவை நாங்கள் ஏற்றோம். தலைமைப் பதவியை மாற்றுவது நல்ல மாற்றத்தைத் தரும் என்றும் நாங்கள் நினைத்தோம். தலைமைப் பதவியை மாற்றியது அவரை சுதந்திரமாக விளையாட அனுமத்தித்தது. இது நாம் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் வென்றதன் மூலம் நிரூபணமானது. தலைவராக இருந்துகொண்டு சகலதுறை வீரராக செயல்படுவது கடினம் என்பதை புரிந்து கொண்டு சிமித்திடம் தலைமைப்பதவியை கொடுத்த பெருமை வற்சனையே சேரும் என்றார். (ரி)

## கே.ஸி.ஸி.ஸி. கூடைப்பந்தாட்ட தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 18

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான இருபலாருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக பழைய மாணவர் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 68:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் முல்லைத் தீவு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 73:43 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 52:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ரி-23)

## யாழ். மாவட்ட பூப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 18

யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்ட பாடசலைகளின் 11,13,15,வயதுப்பிரிவு இரு பாலருக்கும் இடையில் நடத்திய பூப்பந்தாட்ட தொடரில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் வருமாறு.

**ஆண்கள் பிரிவு**

11 வயதுப் பிரிவு ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் முதலாமிடம் என். எபநேசன் சென்.ஜோன்ஸ் கல் லூரி, இரண்டாமிடம் சுரேந்திரன் சென். ஜோன்ஸ் கல்லூரி.

13வயதுப் பிரிவு ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் முதலாமிடம் சாம் டிலக்சன் உதயன் சென்.ஜோன்ஸ் கல்லூரி. இரண்டாமிடம் எம்.இந்துசன் வவுனியா மத்திய மகா வித்தியாலயம்

13வயதுப் பிரிவு ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் முதலாமிடம் சாம் டிலக்சன் உதயன், பிரணவன் சென். ஜோன்ஸ் கல்லூரி. இரண்டா மிடம் எம்.இந்துசன் அம்பிகை பாகன் வவுனியா மத்திய மகா வித்தியாலயம்.

15வயதுபிரிவு ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் முதலாமிடம் யானுசனந்தன் வவுனியா மத்திய தமிழ் மகாவித்தியாலயம். இரண்டாமிடம் சேதுப்பிரியன் வவுனியா மத்திய மகா வித்தியாலயம்.

15வயதுப் பிரிவு ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் முதலாமிடம் யானுசாந்தன், விசகன் வவுனியா மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் சேதுப்பிரியன், றோசன் வவுனியா மத்திய மகா வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

13வயதுப் பிரிவு பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் முதலாமிடம் ஆர். ராகவி மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை. இரண்டாமிடம் கீர்த்தனா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

13வயதுப் பிரிவு பெண்கள் இரட்டையர் ஆட்டத்தில் முதலாம் இடம் ஆர்.ராகவி, எஸ்.லக்சனா மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை. இரண்டாமிடம் கே.பிரசாந்தி, நதுசிகா மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை. (ரி-23)

## யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 18



இலங்கைகிரிக்கெட்மத்தியஸ்தர் சங்கத்தில் இணைந்து கொண்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்குவில் மத்திய சன சமூக நிலைய மண்டபத்தில் யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கோபி கிருஸ்ணா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் விருந்தினர்களாக இலங்கை துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் சிரேசி குணதிலக, உபதலைவர்களான தமித் கூரே, செனநத்திவீர, ஐ.சி.சி கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான ஆசிரியர் நிரேன் எஸ்.விஜயவர்த்தன, மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் உப தலைவர் முருகவேல், யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் றொபேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-23)

## கங்குலியா? ரவிசாஸ்திரியா? இந்தியக் கிரிக்கெட்டில் குழப்பம்



இந்திய அணியின் இயக்குனராக ரவிசாஸ்திரி தொடர்ந்தும் நீடிப்பதில் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது. ரவிசாஸ்திரிக்குப் பதிலாக இந்திய அணியின் இயக்குனராக கங்குலி நியமிக்கப்படவும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளதாக தெரிகிறது.

இந்திய அணி அடுத்த மாதம் பங்களாதேஷுற்கு சுற்றுப்பயணம் செய்து ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரிலிருந்து இந்திய அணியின் இயக்குனராக கங்குலி நியமிக்கப்பட வேண்டும் என்று இந்தியக் கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் டால்மியா வலியுறுத்துவதாகவும் அதேநேரம் ரவிசாஸ்திரியே தொடர்ந்தும் இயக்குனராக நீடிக்க வேண்டும் என்று செயலாளர் அனுராக்தாக்கூர் வலியுறுத்துவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியா எதிர் பங்களாதேஷ் தொடர் எதிர்வரும் பத்தாம் திகதி ஆரம்பமாகி 24ஆம் திகதி முடிவடையும். இந்தத் தொடருக்கான இந்திய வீரர்களின் அணித்தெரிவு நாளை மறுதினம் இடம்பெறும். நடப்பு ஐ.பி.எல். தொடரில் சாதித்த வீரர்கள் யாராவது அறிமுகமாவார்களா என்பதும் தற்பொழுது இந்தியக் கிரிக்கெட்டில் எழுந்துள்ள சுவாரஸ்யமாகும். (ரி)

## பாடும்மீன் அபாரம்

யாழ்ப்பாணம், மே 18


இலங்கை உதை பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊர்காவற்றுறை பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மெரிஞ்சிமுனை இருதாயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ரி-23)

## கே.ஸி.ஸி.ஸி. எதிர் பற்றீசியன்ஸ் இன்று பலப்பரிட்சை

யாழ்ப்பாணம், மே 18

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான இருபலாருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று திங்கட் கிழமை மாலை. 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

# யுவராஜ், சேவாக், ஹர்பஜன், ஷகிர்கான் மீண்டும் அணியில்?




இந்தியா எதிர் பங்களாதேஷ் தொடருக்கான இந்திய அணியில் சேவாக், ஷகீர்கான், யுவராஜ், ஹர்பஜன் போன்ற மூத்த வீரர்கள் இடம் பெறப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

2011 உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி கிண்ணம் வெல்ல உதவியாக இருந்த இவர்கள், பின்னர் மோசமான போர்ம் (திறன்) காரணமாக அணியில் சேர்க்கப்படவில்லை. இந்த நிலையில் ஜுன் 7ஆம் திகதி பங்களாதேஷ் சுற்றுப் பயணம் செல்லும் இந்திய அணியில் இவர்கள் தெரிவுசெய்யப்பட அதிக வாய்ப்பிருப்பதாக தெரிகிறது.

பங்களாதேஷ் செல்லும் இந்திய அணி ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதற்கான இந்திய அணி வரும் 20ஆம் திகதி தெரிவு செய்யப்படுகிறது. மூத்த வீரர்களுக்கு கௌரவமான முறையில் விடைகொடுக்கும் பொருட்டு பங்களாதேஷ் தொடருக்கான அணியில் இவர்களைச் சேர்க்க இந்திய கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்தத்தொடருடன் சேவாக், ஹர்பஜன்சிங் இருவரும் கட்டாயம் ஓய்வினை அறிவிக்க வேண்டும் என்றும் யுவராஜ் மற்றும் ஷகிர்கான் சிறப்பாகச் செயல்படும் பட்சத்தில் தொடர்ந்து அணியில் இடம் பிடிக்கலாம் என்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளன. கம்பீர் தொடர்பாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (ரி)

## பீற்றர்சன் இல்லாத இங்கிலாந்து இங்கிலாந்தே அல்ல

2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி 5-0 என்ற அடிப்படையில் தொடரை வழித்துத்துடைத்து இங்கிலாந்துக்கு மரணஅடி கொடுத்தது. இந்தத் தொடரில் இங்கிலாந்து சார்பில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் பீற்றர்சன். கடந்த முறை இங்கிலாந்து அணிக்காக விளையாடிய பீற்றர்சன் தற்போது அணியில் இடம்பிடிக்கப் போராடி வருகிறார். சமீபத்தில் இங்கிலாந்து அணியின் இயக்குனராக நியமிக்கப்பட்ட ஸ்ரோஸ் பீற்றர்சனுக்கு மீண்டும் இடம் இல்லை என்று தெரிவித்து விட்டார். இந்த நிலையில் பீற்றர்சன் இல்லாத இங்கிலாந்து அணி அணியே அல்ல என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் தெரிவித்துள்ளார்.



பீற்றர்சனின் புறக்கணிப்பு தொடர்பாக கிளார்க் தெரிவித்ததாவது பீற்றர்சன் விவகாரம் குறித்து எனக்கு இரண்டு கருத்துகள் உள்ளது. முதல் கருத்து பீட்டர்சனுக்காக நான் வருத்தப்படுகிறேன். ஏனென்றால் அவருடன் எனக்கு ஒரு நல்ல தொடர்பு உண்டு. இங்கிலாந்து அணியில் அவர் விளையாடுவதை பார்க்க நான் விரும்புகிறேன். அவருடைய விளையாட்டு திறமை தற்போது சிறப்பாக உள்ளது. தற்போதுவரை அவர் சிறந்த வீரர். அவர் விளையாட விரும்புகிறார் என்று எனக்குத் தெரியும். இதனால் அவர் இங்கிலாந்து அணியில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

இரண்டாவது கருத்து இங்கிலாந்து எதிராக ஆஸஸ் தொடரில் விளையாட விரைவில் அங்கே செல்ல இருக்கிறோம். பீற்றர்சன் இல்லாத இங்கிலாந்து வலிமையானது என்று எனக்கு தோன்றவில்லை. பீற்றர்சனைப் பற்றி அவரது புள்ளி விவரங்களே பேசும். நீண்ட காலமாக சிறப்பாக விளையாடும் சிறந்த வீரர் அவர். இதுவரை அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் சிறந்த நிலையுடனே உள்ளார்–என்றார். (ரி)

# மில்லர் என்றால் கில்லர்

## பார்வை பறிபோனமைக்கு மில்லர் அனுதாபம்

நடப்பு ஐ.பி.எல். தொடரின் லீக் ஆட்டத்தில் பஞ்சாப் வீரர் மில்லர் தான் அடித்த சிக்ஸரால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பார்வை பறிபோனமை தொடர்பாக மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது ரசிகர்களால் கில்லர் மில்லர் என்று அழைக்கப்படும் டேவிட் மில்லர் அடித்த சிக்ஸர் மைதானத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வலது கண் பகுதியில் தாக்கியது. இதனையடுத்து பாதிக்கப்பட்ட உத்தியோகத்தரை உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் அவர் கண்பார்வையை காப்பாற்ற முடியவில்லை.

இது தொடர்பாக மில்லர் தெரிவித்ததாவது இந்த விபத்து மிகுந்த அதிர்ச்சி மற்றும் துக்கத்தை அளித்துள்ளது. தாங்க முடியாத இந்த இழப்பால் வாடும் பொலிஸ் உத்தியோகத்தர் மிக விரைவில் நலமடைய கடவுளை பிரார்த்திக்கிறேன். அவரின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு கொல்கத்தா நிர்வாகம் அவருக்கு இலகுவான நிரந்தர வேலை எதனையும் கொடுக்க முன்வரவேண்டும். என்று தெரிவித்துள்ளார். (ரி)

## மில்லரின் சிக்சரால் சிறுவன் காயம்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தின லீக் ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்தபொழுது பஞ்சாப் வீரர் மில்லர் அடித்த பந்து தாக்கி 10வயது சிறுவன் காயமடைந்து தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்னைக்கு எதிரான ஆட்டத்துக்கு தயாராகும் பொருட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை பஞ்சாப் அணியின் அதிரடி வீரர் டேவிட் மில்லர் வலைப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். அப்போது எதிர்பாரத விதமாக மில்லர் அடித்த பந்து வலையை தாண்டி பார்வையாளர்கள் பகுதியில் இருந்த சித்தார்த் என்ற சிறுவனின் நெஞ்சை தாக்கியது. உடனடியாக அந்தச் சிறுவன் மயக்கமடைந்தான்.

வீரர்கள் காயமடைந்தால் முதலுதவி அளிப்பதற்காக மைதானத்தில் இருக்கும் மருத்துவர்கள் சிறுவனை தமது அறைக்கு கொண்டு சென்று முதலுதவி கொடுத்து உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவர்களின் இந்த துடிப்பான செயலால் தற்போது சித்தார்த் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்துக்கும் மில்லர் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளதுடன் அந்தச் சிறுவனுடன் தொலைபேசியில் உரையாடி மன்னிப்பும் கேட்டுள்ளார். (ரி)


## டினேஸ் கார்த்திக்குக்கு 20 சதவீதம் அபராதம்




ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது நடுவர் தர்மசேனாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெங்களூர் அணியின் இலக்குக் காப்பாளர் டினேஸ் கார்த்திக்குக்கு குறித்த ஆட்டத்தின் சம்பளத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாத் எதிர் பெங்களூர் அணிகளுக்கு இடையிலான ஆட் டத்தில் மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் 11 பந்துப் பரிமாற்றமாகக் குறைக்கப்பட்டது. ஹைதராபாத் அணி 11வது பந்துப்பரிமாற்றத்தில் விளையாடும்போது இலேசாக மழைபொழியத் தொடங்கியது. ஆனால் தர்மசேனா ஆட்டத்தை நிறுத்த வில்லை. இதனால் ஹோக்லியுடன் சேர்ந்து தினேஸ் கார்த்திக் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஆனால் ஹோக்லி சிறிது நேரத்தில் வாக்குவாதத்தை முடித்துக் கொண்டு பவிலியன் திரும்பினார். ஆனால் தினேஸ் கார்த்திக் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடு பட்டார். இதனால் அவருக்கு அந்த ஆட்டத்தில் கிடைக்கும் சம்பளத்தில் 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. (ரி)

## ரோம் தொடரிலும் நடால் சொதப்பல்



ரோம் டென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் முன்னணி வீரரான ஸ்பெயினின் ரபேல் நடாலை ஸ்விட்சர்லாந்தின் வாவ்ரிங்கா வீழ்த்தினார்.

இத்தாலியில் நடைபெற்றுவரும் ரோம் டென்னிஸ் தொடரில் நடால் 7 முறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். மேலும் களிமண் தரையில் நடைபெறும் ஆட்டங்களில் அசைக்க முடியாத வீரராக திகழ்ந்த நடாலை களிமண் தரையில் வைத்து முதல்முறையாக வாவ்ரிங்கா வென்றுள்ளார். சமீபகாலமாக நடாலின் ஆட்டத்தில் வேகம் [illegible] விட்டது. கடந்த வாரம் மாட்ரிட் டென்னிஸ் தொடரில் களிமண்தரையில் ஆன்டி முர்ரேவிடம் தோல்வியடைந்தார். தற்பொழுது மீண்டும் ஒரு தடவை களிமண் தரையில் தோல்வியை சந்தித்துள்ளார்.

நடாலுக்கு எதிரான ஆட்டத்தை 7-6, 6-2 என்ற செட் கணக்கில் வென்ற வாவ்ரிங்கா அடுத்ததாக அரையிறுதி ஆட்டத்தில் சக நாட்டு வீரர் ரோஜர் பெடரரை எதிர்கொள்கிறார்.

தோல்வி குறித்து கருத்துத் தெரிவிக்கையில் நான் விளையாடியவிதம் நானே விரும்பும்படி இல்லை. வாவ்ரிங்கா போன்ற ஒரு சிறந்த வீரருக்கு எதிராக இரவில் அதுவும் களிமண் தரையில் நடைபெறும் ஆட்டத்தில் பங்கேற்பது சவாலான விடயம். அனைத்து பந்துகளையுமே அவர் மிகவும் வலுவாக திருப்பி அனுப்பினார். தரையில் இன்று துள்ளல்தன்மை அதிகமாக இருந்தது. எனவே என்னால் சிறப்பாக விளையாட முடியவில்லை என்றார். நடாலின் இந்தத் தோல்வியையடுத்து இந்தத் தொடரிலும் நடால் எதிர் பெடரர் களிமண் தரையில் மோதுவார்கள் என்றிருந்த ரசிகர்களின் எதிர்பார்ப்பு பொய்யாகியுள்ளது. (ரி)



# இறுதியில் மிர்ஷா ஜோடி

இத்தாலியில் நடைபெற்றுவரும் ரோம் டென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் வெற்றிபெற்று இறுதியாட்டத்தில் விளையாட இந்தியாவின் சானியா மிர்ஷ சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸின் காத்ரீனா மற்றும் கரோலின் ஜோடியை 6– 2, 7–6 என்ற நேர் செட் கணக்கில் வென்று சானியா ஜோடி இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது.

சானியாவும் ஹிங்கிஸ்ஸும் ஜோடி சேர்ந்த பின்னர் இதுவரை சந்தித்த ஒட்டுமொத்த ஆட்டங்களில் ஒரேயொரு ஆட்டத்தில் மட்டுமே தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. வேற்றியின் பின்னர் கருத்துத் தெரிவித்த சானியா மற்றும் ஹிங்கிஸ் இறுதி ஆட்டத்திலும் சிறப்பாகச் செயல்பட்டு கிண்ணத்தைக் கைப்பற்றுவோம் என்று தெரிவித்துள்ளனர். (ரி)

# குழுச்செயற்பாடே சென்னையின் வெற்றி



ஐ.பி.எல். தொடர்களில் 2 தடவை கிண்ணம் வென்ற சென்னை அணி நடப்பு தொடரிலும் மிகவும் வலுவான ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. நடப்புத் தொட ரில் நேற்றுமுன்தினம் லீக் ஆட்டத்தில் பஞ்சாப்பை வீழ்த்தி முதலிடத்தைப் பிடித்தது. இது தொடர்பாக டோனி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சென்னை முதலிடம் பிடித்தது தொடர்பாக டோனி தெரிவித்ததாவது புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. முதல் தகுதி சுற்றில் விளையாடுவதன் மூலம் கூடுதலாக ஆட்டம் கிடைக்கிறது. ஒரு ஆட்டத்தில் மோசமாக ஆடினாலும் இறுதி ஆட்டத்துக்குள் நுழைய இன்னொரு வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு அணியும் முதலாவது அல்லது இரண்டாவது இடத்தைப் பிடிப்பதே இலக்காக கொண்டிருக்கும். லீக் சுற்றைப் பொறுத்தமட்டில் சென்னையின் இலக்கும் அதுவே. ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலும் இதையே தெரிவித்தேன். அந்த வகையில் எனது வீரர்கள் சொன்னதைச் செய்துள்ளனர்.

சென்னையின் பலமாக மூன்று விடயங்களைத் தெரிவிக்கலாம். முதலாவது எமது அணியின் களத்தடுப்பு மிகவும் சிறப்பாக உள்ளது. பிளாஸிஸ், பிராவோ, மக்கலம், ஜடெயா என்று மிகவும் முக்கியமான இடங்களில் களத்தடுப்புக்காக விடப்படும் அத்தனை பேரும் அசத்துகின்றனர். இரண்டாவது பந்து வீச்சு குறிப்பாக நெக்ராவின் பந்துவீச்சு. தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் காயம்காரணமாக அவதியுற்ற நெக்ரா அதிக இலக்குகளை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதல் மூன்று இடங்களுக்குள் இடம்பிடித்துக் கொண்டிருக்கிறார். மூன்றாவதும் மிக முக்கியமானதும் சென்னையில் இருக்கும் சர்வதேச அணித்தலைவர்கள். மக்கலம், பிளாஸிஸ், பிராவோ, சிமித், ஹசி போன்றவர்கள் தத்தமது நாடுகளின் தேசிய அணிக்கு தலைமைதாங்கியவர்கள். எனவே இவர்களின் ஆலோசனைகளும் திட்டங்களும் சென்னையின் வெற்றிக்கு மிகவும் முக்கிய காரணம். (ரி)

# மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது

## முதலாவது தகுதியாட்டத்தில் சென்னை எதிர் மும்பை




நடப்பு ஐ.பி.எல். தொடரின் பெங்களூர் எதிர் டெல்லி அணிகளுக்கிடையிலான நேற்றைய ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 187–5 ஓட்டங்களைக் குவித்து 188 என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது. அதிகப்படியாக ஹொக் 39 ஓட்டங்களையும் டுமினி 67 ஓட்டங்களையும் குவித்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் 1.1 பந்துப்பரிமாற் றங்கள் நிறைவில் 2 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிடவே ஆட்டம் நிறுத்தப்பட்டது. மழையின் ஆதிக்கம் தொடர்ந்தும் அதிகரித்தமையினால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இதன்மூலம் புள்ளிப்பட்டியவில் பெங்களூர் 16 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது. இதன்மூலம் சென்னையுடன் முதலாவது தகுதியாட்டத்தில் விளையாடும் தகுதியை மும்பை பெற்றுள்ளது. முதலாவது தகுதியாட்டத்தில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதியாட்டத்துக்கு தகுதி பெறும். (ரி)

# பாகிஸ்தானுக்கு பயப்படும் ஐ.சி.சி.

சிம்பாப்வே பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு ரி–20 ஆட்டங்கள், 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாட மீண்டும் இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த தொடர் திட்டமிட்டபடி வருகிற 22ஆம் திகதி ஆரம்பமாகி 31ஆம் திகதி வரை நடைபெற இருக்கிறது. இந்த நிலையில் ஐ.சி.சி இந்தத் தொடர்களுக்கான நடுவர்களை அனுப்ப மறுத்துள்ளது.

சிம்பாப்வே பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஐ.சி.சி. அனுமதியளித்திருந்தது. ஆனால் பாகிஸ்தானில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் சிம்பாப்வே பாதுகாப்பு காரணத்துக்காக பாகிஸ்தானுக்குச் செல்ல மறுத்தது.

பின்னர் ஒருவாறு இணக்கம் தெரிவித்து தொடர் நடைபெறுவது கிட்டத்தட்ட உறுதியாகும் நிலையில் ஐ.சி.சி. பாதுகாப்பு காரணங்களுக்காக நடுவர்களை பாகிஸ்தானுக்கு அனுப்ப மறுத்துள்ளது. இதனையடுத்து இந்த தொடருக்கான நடுவர்கள் விடயத்தில் ஐ.சி.சியின் அனுமதியுடன் பாகிஸ்தானின் உள்ளூர் நடுவர்கள் நியமிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (ரி)

**உதயன்**
advt@uthayan.com
0215671111

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் கடை வாடகைக்கு உண்டு.
மேலதிக விபரங்களுக்கு:- 077 5905166

**சிறுநீரகம்தேவை**
19 வயது யுவதிக்கு O+, B+ உடையசிறுநீரகம் தேவை.
தொடர்பு:- 0772719027, 077 9427667

**குறைந்த விலையில் கணினிகள்**
Rs. 8750/- இருந்து
Pro Core 2 due 2.3Ghz
Ram DDR II 2Gb
H.Disk 80Gb
DVD Rom
Warranty 06 Months
HP, Dell, Lenovo, IBM
Micro System 077 2487082
Manipay 021 2256165

**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**
Apply Immediately
Diploma Course (6 months full time)
➤ Information & Communication Technology (ICT)
Computer Certificate Courses (2/3/4 months part time)
➤ Microsoft Office (Word, Excel ,Access & Power point)
➤ Computer Graphic Designer (PageMaker, Photoshop&CorelDraw)
➤ Web Designing
➤ Computerized Accounting Packages (Accpac, Quickbook & Tally)
➤ Internet & E-mail
➤ Auto CAD 2D & 3D Modeling
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இலக்கம்: P25/0014
For More Information: Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai. T.P:021 225 0975
(கி/17765)(4.3.7)

**வேலைவாய்ப்பு**
கணினி பக்க வடிவமைப்பாளர்,
* Photoshop
* Pagemaker தெரிந்த
ஆண், பெண் இருபாலாருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.



குறிப்பு : ஆண்கள் பகுதி நேரமாகவும் வேலைசெய்யலாம்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
சுயவிவரக் கோவையுடன் இன்று (18.05.2015)
திங்கட்கிழமையும் நாளை (19.05.2015)
செவ்வாய்க்கிழமையும் நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

